
தேவையானதைப் பெறும் காலம் கனிந்து வருகின்றது பக். 06


கைத்தொலைபேசிகள் மட்டுமே நேபாள பிரதமரின் சொத்துக்கள் பக். 07


அன்ரனிஸ், பாடும்மீன் இறுதிக்குத் தகுதி பக். 22


தலைமுறையின் நாயகன் பக். 23


இன்றைய காலநிலை



கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 111 வள்ளுவர் ஆண்டு: 2045 பங்குனி 03 , திங்கள் 17.03.2014



17 MAR 2014


## கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னாரில் படையினர் தேடுதல், சோதனை தீவிரம்

*பல கிராமங்கள் சுற்றிவளைப்பு; வீடுகளுக்குள் புகுந்து சல்லடை*

கிளிநொச்சி, மார்ச் 17
கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் பல்வேறு பகுதிகள் நேற்றுக் காலை முதல் இராணுவத்தினரால் திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்டு கடும் தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டன.
மூன்று தினங்களுக்கு முன்னர் கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் ஒருவர் சுடப்பட்டதாகக் கூறப் படும் சம்பவத்தை அடுத்து வன்னிப் பகுதியில் ஏற்பட்ட பதற்றம் இன்னும்தணிந்தபாடயில்லை. கடந்த சில தினங்களாகவே இராணுவத்தினர் வீதிகளில் தடைகளை ஏற்படுத்தித் தொடர்ந்து சோதனைகளைமேற்கொண்டு வருகின்றனர்.
இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக கிளிநொச்சி சாந்தபுரம் பகுதி நேற்றுக் காலை இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டுச் சல்லடைபோடப்பட்டது. அதே போன்று பூநகரிப் பகுதியிலும் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். காலை 6 மணி முதல் இந்தத் தேடுதலும் சோதனைகளும் தொடர்ந்தன.

21 ஆம் பக்கம் பார்க்க்

## சட்டரீதியற்ற முறையில் வன்னியில் காடழிப்பு

*விசாரணை ஆரம்பம்*

யாழ்ப்பாணம், மார்ச் 17
கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் 700 ஏக்கருக்கும் அதிகமான காடு, தென்பகுதி வர்த்தகர் ஒருவரால் சட்டரீதியற்ற முறையில் அழிக்கப்பட்டமை

21 ஆம் பக்கம் பார்க்க

## 140 இந்திய மீனவர்கள் இன்று நாடு திரும்புவர்

யாழ்ப்பாணம், மார்ச் 17
இலங்கைக் கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக நுழைந்து மீன்பிடித்தபோது கைது செய்யப்பட்டுப் பின்னர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 140பேர் இன்று இந்திய கடற்படை அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளனர். கடந்த சில வாரங்களில் கடற்படையினரால் 172 பேர் கைது

21 ஆம் பக்கம் பார்க்க

## அமலன் கொலை; சந்தேகநபர்கள் நால்வருக்கும் 10 நாள்கள் மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 17
பொன் அணிக்ளின் போர் கிரிக்கெட் ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவன் அடித்துக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நால்வரையும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டார்.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் சென்.

21 ஆம் பக்கம் பார்க்க

# குடாநாட்டு தமிழ் இளைஞர்கள் சந்தடியின்றிப் படையில் சேர்ப்பு

*நகரின் கரையோர ஊர்களிலும் வரணியிலும் தீவிர நடவடிக்கை*

யாழ்ப்பாணம், மார்ச் 17
யாழ்ப்பாணத்தில் இராணுவத்துக்கு இளைஞர்களைத் திரட்டும் பணி சத்தம் சந்தடியின்றி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தென்மராட்சியில் வரணியிலும் யாழ். நகரத்தில் கரையோர ஊர்களிலும் கடந்த சில நாள்களாக இந்த நடவடிக்கை தீவிரமாக இடம் பெற்று வருகின்றது. இளைஞர்கள் தாமாக முன்வந்து இராணுவத்தில் இணைவதற்கு ஆர்வம் காட்டுகிறார்கள் என்று வரணியில் ஆட்சேர்ப்பில் ஈடுபட்ட இராணுவத்தினர் தெரிவித்தனர். அதேநேரம் இராணுவத்தினர் கட்டாயப் படுத்தி அழைத்து அங்கிருந்த விண்ணப்பங்களில் தம்மிடம் கையெழுத்துப் பெற்றுக் கொண்டனர் என்று ஒருசிலர் குற்றஞ்சாட்டினர்.
தரைப்படையின் மகளிர் தொண்டர் படையணிக்கு ஆள்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விளம்பரம் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் வன்னியில் இத்தகைய விளம்பரங்கள் எதுவும் இன்றியே இரு தொகுதிகளாகப் பெண்கள் படையணிகளில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அத்தகைய முயற்சியாக யாழ். குடாநாட்டிலும் பெண்களை இராணுவத்திற்கு இணைத்துக் கொள்வதற்கான முயற்சி

21 ஆம் பக்கம் பார்க்க

## மீனவர் பிரச்சினைக்கு அரசுகளே காரணம்

யாழ்ப்பாணம், மார்ச், 17
இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினையை இருநாடுகளும் அரசியல் மயப்படுத்தியுள்ளன. அதனால் எத்தனை தடவைகள் பேச்சுக்கள் நடத்தினாலும் அதற்கான தீர்வு கிடைப்பது சந்தேகமே என்று தெரிவித்துள்ளனர் இந்திய மீனவர்கள்.
இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பாகக் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் கலந்துகொண்ட இந்திய மீனவர்களிடம் கருத்துக் கேட்டபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.
இதுகுறித்து அவர்கள் மேலும் கருத்துத் தெரிவித்ததாவது:
"இலங்கை - இந்திய மீனவர்களுக்கிடையிலான பிரச்சினைகள் தொடர்பாக தற்போது

21 ஆம் பக்கம் பார்க்க

## சிறப்பாக நடந்து முடிந்தது கச்சதீவுத் திருவிழா

6 ஆயிரத்துக்கும் அதிகமான பக்தர்கள் திரண்டனர்



*நெடுந்தீவு கடற்பரப்பில் கண்டெடுக்கப்பட்ட இந்திய மீனவரின் வலை மீள அவரிடம் ஒப்படைக்கப்படுகிறது.*

யாழ்ப்பாணம். மார்ச்.17
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று நிறைவு பெற்றது. அதில் 6 ஆயிரத்துக்கும் அதிகமான பக்தர்கள் கலந்துகொண்டனர்.
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்றுமுன்தினம்

21 ஆம் பக்கம் பார்க்க

## கைதான சிறுமி இன்று சிறுவர் இல்லத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 17
கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பத்தை அடுத்துக் கைது செய்யப்பட்டு தற்போது கிளிநொச்சி வைத்தியசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள சிறுமி விபூசிகா, இன்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்

21 ஆம் பக்கம் பார்க்க

## நாளை 15 தீர்மானங்கள் மாகாண சபை அமர்வில்

யாழ்ப்பாணம், மார்ச் 17
நாளைய வடமாகாண சபை அமர்வின்போது, இடை நிறுத்தப்பட்ட கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்கின்ற தீர்மானம் உட்பட 15 தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.
வடக்கு மாகாணசபையின் 7 ஆவது அமர்வு நாளை 9.30 மணிக்கு, கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் இடம் பெறவுள்ளது. அந்த அமர்வில் முதன்முறையாக சபை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 6 மாதங்களின் பின்னர் நியதிச் சட்டங்கள் சமர்ப்பிக்கப்பட

21 ஆம் பக்கம் பார்க்க

## மதகுரு, மனித உரிமை செயற்பாட்டாளர் கிளிநொச்சியில் ரி.ஐ.டியினரால் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 17
கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பங்குத் தந்தையும் தென்பகுதியைச் சேர்ந்த மனித உரிமை செயற்பாட்டாளர் ஒருவரும் தருமபுரம் பகுதியில் வைத்து நேற்றிரவு பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அக்கராயன் அமைதிபுரம் பிரதேச பங்குத் தந்தையான பிரவீன் மகேசன் தென்பகுதியைச் சேர்ந்த மனித உரிமை செயற்பாட்டாளரான ருக்ஷி பெர்னாண்டோ ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு

21 ஆம் பக்கம் பார்க்க

## மீள்குடியமர்வு குறித்து உறுதியளித்தாலே இராணுவத்தினருடன் இனிமேல் பேச்சு

வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுச் சங்கம் முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 17
சொந்த இடங்களில் மீளக் குடிமர்த்துவதற்கான உறுதிமொழியை இராணுவம் வழங்கும் வரை, அவர்களுடன் இனி பேச்சு எதனையும் மேற்கொள்ளப்போவதில்லை என்று வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுச் சங்கத்தின் கலந்துரையாடலில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுச் சங்கத்

21 ஆம் பக்கம் பார்க்க

# தன்னால் முடிந்ததைச் செய்யட்டும்; பிரேரணையை ஏற்காது இலங்கை

## அமெரிக்காவுக்குச் சவால் விடுகின்றது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

கொழும்பு, மார்ச் 17

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா ஜெனிவாவில் கொண்டு வந்துள்ள திருத்தத்தில் எத்தனை திருத்தங்கள் செய்யப்பட்டாலும் அதை இலங்கை ஒரு போதும் ஏற்றுக்கொள் ளாது. அமெரிக்கா தன்னால் முடிந்ததைச் செய்து கொள்ளட்டும் என்று தெரிவித்துள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.

ஜெனிவாவில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25 ஆவது கூட்டத்தொடரில், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் நம்பகம் மிக்க விசாரணை அவசியம் என்று வலியுறுத்தி அமெரிக்கா முன்வைத்துள்ள பிரேரணை வரைவு, மேலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டு கடினமாக்கப்பட்டுள்ளது.

அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அந்த இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர, "அமெரிக்கா தனது பிரேரணையில் சில மாற்றங்களை கொண்டுவந்து உறுப்பு நாடுகளின் அனுசரணையுடன் எப்படியாவது இலங்கையை குழப்ப வேண்டும் என்றே தற்போது செயற்பட்டுக் கொண்டு வருகிறது.

நமது நாட்டின் ஐக்கியத்தை குழப்பி உக்ரையினில் ஏற்பட்ட நிலைபோன்று இலங்கையிலும் ஏற்படுத்தவே அமெரிக்கா தீவிரமாக முயற்சித்து வருகிறது. இலங்கையில் அமெரிக்காவின் பிரேரணையை நடைமுறைப்படுத்தினால் மாபெரும் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இலங்கை அரசால் நடைமுறைப்படுத்த முடியாத அளவுக்கு பிரேரணை வரைவை இறுக்கிவிட்டு, அடுத்த வருடத்தில் அதையே காரணமாகக் காட்டி இலங்கைக்குள் ஆதிக்கம் செலுத்து வதே அமெரிக்காவின்திட்டம். இதை இலங்கையராகிய நாம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். அரசு இந்த பிரேரணை வரைவை நாட்டிக்குள் ஒருபோதும் அனுமதியளிக்கக்கூடாது. அரசு அவ்வாறு செயற்படமாட்டாது என்ற நம்பிக்கை யும் எமக்குள்ளது. அதை எதிர்த்து அமெரிக்கா, பிரிட்டனால் என்ன செய்ய முடியுமோ, செய்து கொள்ளட்டும்" - என்று தெரிவித்துள்ளார். (ற)

# இரட்டை நிலைப்பாட்டில் சர்வதேச நாடுகள்

## அமைச்சர் ரம்புக்வெல குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 17

ஜெனிவாவில் சிலநாடுகளின் நடவடிக்கைகளைப் பார்க்கும் போது அந்த நாடுகள் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல.



ரம்புக்வெல

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை, ஒசாமா பின்லேடனைப் போன்ற ஒரு பயங்கரவாதியாகவே பார்க்க வேண்டும். ஜெனிவாவில் விடுதலைப் புலிகளின் தலைவரின் படங்களை ஏந்தியவாறு தமிழர்கள், இலங்கை அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

அதேபோன்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒசாமா பின்லேடனின் ஆதரவாளர்களினால் நடத்தப்பட்டிருந்தால் பெரும்பாலான நாடுகள் அதனைக் கடுமையாக எதிர்த்திருக்கும்.

ஆனால் இலங்கைக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

ஜெனிவா மனித உரிமை சபையில் எந்த சவால் வந்தாலும் அதனை எதிர்கொள்ள அரசு தயாராகவே உள்ளது. இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கொண்டுவரும் நாடுகளுடன் அரசு பேசி வருகின்றது. படிப்படியாக அந்த நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## சனல் 4 காணொலி போலியானது - ஜி.எல்.பீரிஸ்

ஜெனிவா, மார்ச் 17

இலங்கை இராணுவத்தினர் தொடர்பாக சனல் - 4 தொலைக்காட்சி இறுதியாக வெளியிட்டிருக்கும் காணொலியும் போலியானதே என்று தெரிவித்துள்ளார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

லண்டனில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். "நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாட்டை இலக்கு வைத்தே, தருணம் பார்த்து அந்தக் காணொலி வெளியிடப்பட்டுள்ளது" என்று குற்றஞ்சாட்டியுள்ளார் அவர்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது சனல்-4 தொலைக்காட்சி ஊடகவியலாளர்களான கெலம் மெக்ரே மற்றும் ஜொனதன் மில்லர் ஆகியோர் இலங்கை அரசின் நடவடிக்கை தொடர்பாகக் கேள்வியேழுப்பியிருந்தனர். அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறுகூறியுள்ளார். (ற)

# தொழிற்சாலை ஒன்றுக்கு எதிராக ஹங்வெல்லையில் ஆர்ப்பாட்டம்

## மரத்தை முறித்து வீழ்த்தியதில் பொலிஸ் பொறுப்பதிகாரி சாவு



போராட்டத்தில் ஈடுபடும் பொதுமக்கள்

கொழும்பு, மார்ச் 17

ஹங்வெல்லையில் தொழிற்சாலை ஒன்று எதிராக நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் காயமடைந்த பொரளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் சிறிவர்தன சிகிச்சைகள் பயனின்றி உயிரிழந்துள்ளார்.

அந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் வெட்டிய மரம் பொலிஸ் பொறுப்பதிகாரி மீது விழுந்ததால் படுகாயமடைந்த அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த அவர் சிகிச்சைகள் பயனின்றி உயிரிழந்துள்ளார்.

ஹங்வெல்ல, துன்னானையில் இறப்பர் தொழிற்சாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பிரதேசத்திலுள்ள நூற்றுக்கணக்கான மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இதையடுத்து பொலிஸார் கண் ணீர்ப்புகை பிரயோகம் மற்றும் தண்ணீர் பீய்ச்சியடித்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோரை விரட்டியடித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 48 பேர் கைது செய்யப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்களில் பெண்கள் ஏழு பேரும் அடங்குவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துன்னானையில் தற்போது நிலைமை வழமைக்கு திரும்பியுள்ள போதிலும் மக்கள் ஆங்காங்கே குழுமியிருப்பதாகவும், ஹைலெவல் வீதியின்போக்குவரத்துவழமைக்கு திரும்பிவிட்டதாக வும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ற)

# கைப்பணிக் கிராமம் கைதடியில் அமையும்

யாழ்ப்பாணம், மார்ச் 17

கைதடியில் கைப்பணி உற்பத்தி சந்தைப்படுத்தல் கிராமம் இந்திய அரசின் நிதி உதவியுடன் சிறுகைத்தொழில் பாரம்பரியக் கைத்தொழில் அமைச்சினால் அமைக்கப்பட உள்ளது.

கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ள இடத்தில் இந்த உற்பத்தி சந்தைப்படுத்தல் கிராமம் அமைக்கப்படும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

அமையப் பெறவுள்ள இக்கிராமத்தில் 12 காட்சிக்கூடங்களும், 20 உற்பத்திக் கூடங் களும் அமைக்கப்படவுள்ளன.

இதற்காக தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் எட்டுப் பரப்பு காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்தில் பாரம்பாய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான தேசிய அருங்கலைகள் பேரவை, தேசிய வடிவமைப்பு நிலையம், பனை அபிவிருத்தி சபை, கைத்தொழில் அபிவிருத்தி சபை ஆகியவற்றின் தொழிற்துறை சார்ந்தோரால் வடிவமைக்கப்பட்ட ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தப்படும். விற்பனையும் இடம்பெறும்.

இந்தக் கிராமத்தை அமைப்பதற்கு இந்தியா 20 மில்லியன் ரூபா நிதி உதவியை வழங்க உள்ளது. 6 மாத காலப் பகுதிக்குள் பணிகளை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய கிராமம் அமைய இருக்கும் இடத்தை சிறுகைத்தொழில் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் நேற்று நேரில் சென்று பாரவையிட்டார் என அவரது செய்திக் குறிப்பு தெரிவித்தது. (உ)

# திருத்தப்பட்ட அமெ. பிரேரணையில் உள்ளடங்கியிருக்கும் விடயங்கள்

ஜெனிவா, மார்ச் 17

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் 27ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ள இலங்கைக்கு எதிரான பிரரேரணையின் திருத்தப்பட்ட வடிவம் உறுப்பு நாடுகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கையளிக்கப்பட்டுள்ள பிரேரணையில் திருத்தப்பட்டுள்ள அல்லது கடினமாக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக வரைவின் 8 ஆவது அம்சத்தில் உள்நாட்டில் முறையான விசாரணை நடாத்தப்படாவிட்டால் சுயாதீன, நம்பகத்தன்மையான சர்வதேச விசாரணை பற்றிய மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரையை வரவேற்கிறோம் எனக் குறிப்பிடப்பட்ட வாசகத்தில் சுயாதீன, நம்பகத்தன்மையான என்ற சொற்கள் நீக்கப்பட்டுள்ளதுடன் வரவேற்கிறோம் என்ற வாசகமும் கவனத்தில் எடுக்கிறோம் என்று மாற்றப்பட்டுள்ளது.

அதனோடு இணைந்ததாக இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாகக் கண்காணிப்பதுடன், வகை கூறுதல் மற்றும் மீள்நல்லிணக்கம் சம்பந்தமான முன்னேற்றத்தையும் அவதானிக்க மனித உரிமைகள் ஆணையாளருக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளில் வகைகூறுதல் மற்றும் மீள்நல்லிணக்கம் ஆகிய சொற்கள் நீக்கப்பட்டுள்ளன.

அதே பந்தியில் இரண்டு தரப்பினாலும் இழைக்கப்பட்ட மனித உரிமைகள் பற்றி விசாரிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ள இடத்தில் புதிதாக அவற்றை மறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்பட வேண்டும் என்ற வாசகம் சேர்க்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அதிகாரங்களை வழங்குதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள ஆறாவது அம்சத்தில் இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ஆட்சி செய்வதற்கான அதிகாரங்களையும் வளங்களையும் வழங்குமாறு இலங்கை அரசைக் கேட்டுக் கொள்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தமைக்குப் பதிலாக புதிய வரைவில், இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு அமைவாக வட மாகாணசபை திறம்படச் செயலாற்றுவதை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசை வேண்டுகிறோம் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வெலிவேரியாத் தாக்குதல் தொடர்பான அறிக்கை பற்றிய ஐந்தாவது அம்சத்தில் படையினரின் உரிமை மீறல்கள் தொடர்பிலான அறிக்கையைப் பகிரங்கமாக வெளியிடுமாறு கோரப்பட்டுள்ளது.


இதேவேளை முன்னுரையில் மனித உரிமை ஆணையாளரின் இலங்கைப் பயணத்தின் போது அவரைச் சந்[illegible]சியவர்களும், சிவில் சமூகப் பிரதிநிதிகளும் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் குறிப்பிட்டுள்ள விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் அமைப்புடன் தொடர்புடைய சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் அச்சுறுத்தப்படுவோர் தொடர்பான பந்தியில் சட்டத்தரணிகள் என்ற பதம் புதிதாக இணைக்கப்பட்டுள்ளதுடன், சுயாதீன நீதித்துறைக்கும், சட்டவாட்சிக்கும் எதிரான அச்சுறுத்தல்கள் என்ற பதமும் சேர்க்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, சிறுபான்மை மதங்களுக்கு எதிரான தாக்குதல்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ள பந்தியில், மதங்களுக்கு எதிரான அதிகரித்து வரும் வன்முறைகள் மற்றும் பாரபட்சம் காரணமாக அச்சமடைந்துள்ளோம் என்ற வாசகம் நீக்கப்பட்டு, பதிலாக சிறுபான்மை மதங்களுக்கு எதிராக அதிகரித்துவரும் தாக்குதல்கள் காரணமாக என்ற வாக்கியம் சேர்க்கப்பட்டுள்ளது.

உத்தேச பிரேரணை திருத்தங்களுடன் கையளிக்கப்பட்டுள்ள போதிலும் அது அவ்வாறே நிறைவேற்றப்பட்டுவிடும் என எதிரபார்க்க முடியாது. 18 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தின் பின்னரே இறுதிவரைவு முடிவு செய்யப்படும். அன்றைய கூட்டத்தின் முடிவில் எத்தனை நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும் என்பதும் ஓரளவு தெரிய வரும் என்று கூறப்படுகின்றது.

(ற)



ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன்கோயில் தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆயிரக் கணக்கான அடியவர்களின் அரோகரா கோஷத்துடன் பஞ்ச ரதங்கள் பவனி வந்த காட்சி அனைவரையும் பரவசப்படுத்தியது. தேரில் எம்பெருமான் உலாவரும் காட்சி. (ஓ-250)

# தனியார் கல்வி நிறுவன வகுப்பறை விஷமிகளால் தீயிட்டு எரிப்பு

நெல்லியடி, மார்ச் 17

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரிக்கு அருகிலுள்ள தனியார் கல்வி நிறுவனத்துக்குச் சொந்தமான இரு வகுப்பறைக் கொட்டில்கள் சில விசமிகளால் தீயிட்டு எரிக்கப்பட்டு நாசமாக்கப் பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் இரவு 10.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தனியார் கல்வி நிலையத்துக்கு உள்ளே அமைக்கப்பட்ட ஓலையால் வேயப்பட்ட வகுப்பறை ஒன்றும் தார் சீற் போடப்பட்ட ஒரு வகுப்பறையும் நேற்றையதினம் எரிக் கப்பட்டு நாசமாக்கப்பட்டுள்ளன.



தீக்கிரையான தனியார் கல்வி நிறுவன வகுப்பறை

நேற்றுமுன்தினம் இரவு 10.15 மணியளவில் வீதியால் சென்ற ஒருவர் தனியார் கல்வி நிறுவனத்தில் இருந்து புகை மண்டலம் வெளி வருவதை அவதானித்து தனியார் கல்வி நிறுவன உரிமையாளருக்கு தகவல் கொடுத்துள்ளார்.

அதை அடுத்து அவர் குறித்த இடத்துக்கு வந்து பார்த்த போது இரு வகுப்பறைகளும் முற்றாக எரிந்து நாசமாகி இருந்தன.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நெல்லியடி யில் பிரபலம் வாய்ந்த தனியார் கல்வி நிறுவனம் ஒன்று எரிக்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. (வ-422)

## ஆடுகளை விழுங்கி ருசி கண்ட வெங்கணாந்தியை மடக்கிய இளைஞர்

*மீசாலை வடக்கில் சம்பவம்*

தென்மராட்சி, மார்ச் 17

பற்றைக்குள் பதுங்கியிருந்த 7 அடி நீளமான வெங்கணாந்திப் பாம்பு இளைஞர்களால் உயிருடன் பிடிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் சனிக்கிழமை மீசாலை வடக்கு வேம்பிராயில் இடம்பெற்றது.

மேய்ச்சலுக்குச் சென்ற பல ஆடுகள் காணாமற் போய் இருந்த நிலையில் பற்றைக்குள் ஆடு கத்துவதைக் கேட்ட இளைஞர்கள், திருடர்கள் ஆட்டைப் பிடிக்கிறார்கள் என நினைத்து அங்கு ஓடினர். அவ்வேளை அங்கு பாம்பு ஆட்டைப் பிடித்து விழுங்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததைக் கண்டனர்.

உடனடியாக செயற்பட்ட அந்த இளைஞர்கள் பாம்பை மடக்கிப் பிடித்து ஆட்டையும் மீட்டனர். அவர்கள் பாம்பை ஊருக்குள் எடுத்துவந்தனர். அதனைப் பலர் கூடிப் பார்வையிட்டனர். (ஓ-9)

# யாழ்ப்பாணக் கல்வி வளத்தை மீள் கட்டுமானம் செய்ய நிதி வளம் இல்லை

*வடக்கு கல்வி அமைச்சர் தெரிவிப்பு*

அச்சுவேலி, மார்ச் 17

"நீண்ட கால பாரம்பரியத்தோடு மேல்நிலை பெற்று விளங்கிய யாழ்ப்பாண கல்வி வளம் இராணுவ நடவடிக்கையில் அழிக்கப்பட்டுள்ளது. அதனை மீள் கட்டுமானம் செய்வதற்கு நீண்ட காலம் செல்லும். அதற்கான நீதிவளமும் வடக்குமாகாண சபையிடம் இல்லை.

இவ்வாறு கூறி னார் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் த.குருகுலராஜா.

வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை மீள ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் என்.மகேந்திரன் தலைமையில் வளலாய் பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. கலந்துரையாடலில் கல்வி அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். இதன் போது அவர் மேலும் கூறுகையில்;

"யாழ்ப்பாணம் கல்வியால் உயர்ந்தது, சாதனை படைத்தது. 200 வருடத்துக்கு மேற்பட்ட நிறுவன மயப்படுத்தப்பட்ட கல்விப் பாரம்பரியங்களைக் கொண்டது. அமெரிக்க மிஷனரிமாரின் கல்விப் பணியிலும் ஆறுமுகநாவலர் போன்ற அறநெறியாளரின் கல்விப் பணியாலும் சிறந்து விளங்கியது.

அன்று ஆயிரக் கணக்கான மாணவர்கள் பயின்ற கல்விக் கூடங்களில் இன்று நூற்றுக் கணக்கில் குறைந்தளவு மாணவர்கள் மட்டும் கல்வி கற்கின்றனர். கல்வி அடைவு மட்டத்தின் அளவும் வீழ்ச்சி கண்டுள்ளது. மக்கள் நெருக்கமாக வாழ்ந்த பகுதிகள் இன்று மக்கள் நடமாட முடியாத பகுதியாக பற்றைக் காடுகள் போன்று காணப்படுகின்றன. பாதுகாப்பு வலயங்களாக உள்ளன. இந்த அவல நிலையை அவதானிக்கும்போது கவலை கொள்ளாமல் இருக்க முடியாது.

அழிவுகளுக்கு உள்ளாகிய நிலையில் இருக்கும் பாடசாலையை மீளக் கட்டி எழுப்புவதற்கு நீண்ட காலம் செல்லும் அத்துடன் பெருமளவு நிதி தேவையாகும். வடக்கு மாகாண சபை நிதிவளம் இன்றி பலத்த எதிர்பார்ப்புகளோடு செயற்படத் தொடங்கியுள்ளது.

மக்களின் குடித்தொகை அளவு மிகவும் குறை வடைந்துள்ளது. அழிவடைந்துள்ளது. இந்த நிலையில் குடித் தொகைப் பெருக்கத்தை அதிகரிக்க வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டு செயல் முறை யைத் தவிர்த்து மக்கள் தொகையை அதிகரிக்க வேண் டும். இந்த விடயத்தில் மக்கள் விழிப்புணர்வோடு செயற் படவேண்டும்.

> **"மக்கள் நெருக்கமாக வாழ்ந்த பகுதிகள் இன்று மக்கள் நடமாட முடியாத பகுதியாக பற்றைக்காடுகள் போன்று காணப் படுகின்றன. பாதுகாப்பு வலயங்களாக உள்ளன.**

வடக்கு மாகாணத்தில் 50 பிள்ளைகளுக்குக் குறைவான பாடசாலைகளாக 190 பாடசாலைகள் உள்ளன. மாணவர் குறைவான பாடசாலைக்கு ஆசிரியர்கள் ஆளணி மற்றும் கற்றல் வள வசதிகளை மேற்கொள்வதில் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது - என்றார். (வ-11)

# வீதி விபத்தில் இருவர் படுகாயம்



விபத்துக்குள்ளான இடத்தில் விசாரணையில் ஈடுபடும் பொலிஸார்

கிளிநொச்சி, மார்ச் 17

முல்லைத்தீவு உடையார் கட்டுப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் 2 பேர் படுகாயமடைந்து புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு - பரந்தன் ஏ-35 வீதியின் உடையார் கட்டு சந்திப் பகுதியிலிருந்து விசுவமடு நோக்கிச் சென்று கொண்டிருந்த பிக்கப் வாகனம் ஒன்று அதே திசையால் முன்னே சென்று கொண்டிருந்த சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று காலை 8.45 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் உடையார்கட்டு தெற்கு உடையார்கட்டைச் சேர்ந்த எஸ்.தர்சன் (வயது-18), ரி.மதுசன் (வயது-10) ஆகிய இருவரும் படுகாயமடைந்து உடனடியாக மூங்கிலாறு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு, மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள் ளனர்.

விபத்து தொடர்பான விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-55)

## வன்னியில் பதற்றம் புளியம்பொக்கணை திருவிழாவுக்கு வருவோர் தொகை வீழ்ச்சி

வன்னியில் தொடர்ந்து நிலவும் பதற்ற நிலை காரணமாக இன்று நடைபெறவுள்ள கிளிநொச்சி, கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவுக்கான பக்தர் வருகை மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

கிளிநொச்சி கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா கடந்த 10 ஆம் திகதி விளக்கு வைத்தல் நிகழ்வுடன் ஆரம்பமாகி பூசைகள் நடைபெற்று இன்று வருடாந்தப் பொங்கல் விழா நடை பெறவுள்ளது. (வ-55)


★ நியூசிலாந்தில் படிக்க உழைக்க IELTS தேவையில்லை
2 வருடங்களில் PR பெற்றால் ஆஸி பறக்கலாம்
★ கனடாவில் படிக்க உழைக்க வெறும் 23 இலட்சங்கள்
★ இத்தாலி சட்டரீதியாகச் செல்வது எளிது
★ ஐரோப்பிய நாடான சைப்பிரஸில் படித்து மாதம் ஒரு இலட்சம் வரை உழைக்கலாம்.
★ எல்லா நாடுகளிற்கும் Visit Visa, Refusal சட்ட ஆலோசனைகள்
★ ஆஸ்திரேலியா குடும்பமாகச் செல்ல பெரிதாக ஒன்றும் செய்ய வேண்டிய தேவையில்லை.
( யாவும் நிபந்தனைகளுடன்)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 2219016, 021 4993501
www.thisaivisa.com

# வடமாகாண சபைக்கு ஒத்துழைத்திருந்தால் அரசு உருப்படியான தீர்வை எட்டியிருக்கும்

## முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 17

வடமாகாணசபை முறையாக செயற்படுவதற்கு ஆரம்பத்திலிருந்தே அரசு ஒத்துழைத்துச் செயற்பட்டிருந்தால் வடமாகாண தமிழ் பேசும் மக்களுக்கு உருப்படியான ஒரு அரசியல் சமிஞ்ஞையை வெளிக்காட்டியிருக்க முடியும் என்று தெரிவித்துள்ளார் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.



க.வி.விக்னேஸ்வரன்.

கொழும்பில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழா ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இலங்கை அரசு தென்னிலங்கைச் சிங்களக் கடும்போக்காளர்களைத் திருப்திப்படுத்தினால் அடுத்த தேர்தலில் சிங்கள வாக்குகளைப் பெறலாம் என்ற எண்ணத்தில் செயற்பட்டு வருகின்றது. வடமாகாணசபையின் ஒத்துழைப்பை நல்க முன்வந்த எனக்கு நற்சமிக்ஞைகளை முதலில் காட்டி விட்டுப் பின்னர் எம்மை அலட்சியம் செய்வதிலேயே அரசு அக்கறை காட்டி நிற்கின்றது.

எமக்கு ஒத்துழைப்பை நல்குவதால் சர்வதேச சமூகத்தின் நெருக்குதல்களைத் தணிக்க முடியும் என்பதில் நம்பிக்கையற்றே அரசு செயற்படுகிறது. மாகாணசபை முதல்வரின் கருத்தொருமித்தலுடன்தான் முதன்மைச் செயலாளர் நியமிக்கப்பட வேண்டும் என்ற மாகாணசபைகள் சட்டம் பிரிவு 32இன் ஏற்பாடுகளுக்கு எதிராக அதாவது நடைமுறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக, அரசு தனக்குகந்த பிரதம செயலாளரை பதவியில் நீடிக்கச் செய்து, போர்க் காலத்தின் போதான முன்னைய படைத் தளபதியைத் தொடர்ந்து ஆளுநராக வைத்திருந்து, அவரைக் கொண்டு மாகாண சபைகளுக்கு என்ன உரித்து இருக்கின்றது, எல்லாம் ஆளுநர் வசமே என்ற கருத்தை நிலவச் செய்து, இந்த வடமாகாண சபையால் எதுவுமே செய்ய முடியாது, அவர்கள் கையாலாகாதவர்கள் என்ற கருத்தை எம் மக்கள் மனதில் விதைக்க அரசு கடுமையாகப் பாடுபட்டு வருகின்றது.

இன்று வன்னியில் நடப்பதை எடுத்துக் கொள்வோம். மாந்தையில் மனித எலும்புக்கூடுகள் காணப்பட்ட இடம் ஒரு மயான பூமி என்றுள்ளார் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகம். அதன் சரிபிழையை பத்திரிகைகள் எடுத்துக் காட்டாது விட்டுவிட்டால் உண்மை விலைபோய்விடும். நாம் ஆராய்ந்து பார்த்ததில் அறுபது வருடங்களுக்கு முன்னர் பூர்வாங்க வரைபடமிலக்கம் எஸ்-677ஆனது 2.12.1955 இல் அரசால் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் துண்டுகள் 31ஆம் 32ஆம் இணையும் இடத்தில்தான் மேற்படி மயான பூமி என்று கூறப்படும் இடம் இருந்திருக்க வேண்டும்.

ஆனால் இவ்விடத்திற்கு ஒரு பக்கம் தெரு. மறுபக்கம் குளம். இந்தத் துண்டு 31 ஆனது திருக்கேதீஸ்வரத்துக்குக் கொடுப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டிருக்குந் துண்டு. துண்டு 32க்கு முன்புறத்தில் தெருவின் அடுத்த பக்கத்தில் மேற்படி வரைபடத்தின் படி ஒரு சுற்றுலா பங்களா இருந்திருக்கின்றது. அது போரின் போது அழிந்துவிட்டது. அத்துடன் துண்டு 32இல் ஒரு பலசரக்குக் கூட்டுறவுக் கடையொன்றும் இருந்திருக்கின்றது.

இது இவ்வாறிருக்க துண்டு 32இல் மயான பூமி அமைந்திருந்தது என்பது கட்டுக் கதைபோல் தென்படுகின்றது. கத்தோலிக்க மயான பூமி ஒன்று மேற்குப் புறத்தில் அங்கிருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தொலைவில் இருப்பது உண்மை. ஆனால் மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்ட இடம் இந்துக்கள் வாழ்ந்த இடம். இந்துக்கள் பிரேதங்களைப் புதைப்பது இல்லை. எனவே பணிப்பாளர் நாயகத்தின் கூற்றுக் கேள்விக்கிடமாகியுள்ளது. இது பற்றி இன்று ஆசிரியத் தலையங்கம் எழுதினால் வருங் காலத்தில் அது ஒரு வரலாற்று பூர்வமான கட்டுரையாகி விடும். மக்கள் இன்றே உஷாராகி விடுவார்கள். வெளிநாடுகள் விழித்துக்கொள்வன. அதைத்தான் சொல்ல வரு கின்றேன்.

இன்னுமொரு இன்றைய காலச் செய்தி. வவுனியாவில் இருக்கும் கொக்கச்சாங்குளம் வவுனியா வடக்கைச் சேர்ந்தது. அதன் ஒரு பகுதி முல்லைத்தீவுக்கும் உரியது. அதாவது தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த இடமிது. அண்மையில் அதனை வவுனியா தெற்கின் கீழ் அரசு கொண்டு வந்துள்ளது. அதாவது சிங்களவர் வாழும் பகுதியின் நிர்வாக அலகின் கீழ் மாற்றியுள்ளது. கொக்கச்சான் குளம் இப்பொழுது கலாபோகஸ்வவ என்று பெயர் மாறப்பட்டு 5000 சிங்களக் குடும்பங்களை அங்கு குடியிருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு இராணுவம் முழு ஒத்தாசையையும் வழங்கி நிற்கின்றது. கொண்டு வரப்படும் 5000 குடும்பங்களும் வடமாகாணத்திற்கு அப்பால் வசிக்கும் குடும்பங்கள். இதுவரை வடமாகாணத்துடன் தொடர்பு கொண்டிராத குடும்பங்கள்.

மேலும் வவுனியா பாவற்குளத்தில் சுமார் ஒன்பது சதுர கிலோமீற்றர் இடத்தில் 600 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றி வருகின்றார்கள். மேலும் 2009ஆம் ஆண்டு உள் நாட்டில் குடிபெயர்ந்தவர்களை இருத்த உபயோகப்பட்ட மனிக்பாம் முகாமானது தற்போது இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. காரணங்கள் கூறப்படவில்லை.

இராணுவம் பல காணிகளையும், பண்ணைகளையும் தம்வசம் ஒப்படைக்கும்படி கூறி, உறுதி முடித்துத் தருமாறு எங்கள் அலுவலர்களைக் கட்டாயப்படுத்துகின்றார்கள். கிழக்கில் நடைபெற்ற கட்டாயமான குடிசன விகித மாற்றம் தற்போது வடக்கில் மிக வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதற்கு இராணுவம் உற்ற துணையாக நிற்கின்றது. மூன்று தசாப்த காலமாக நீடித்த உள்நாட்டுப் போரின் போது தமிழ்ப்பேசும் மக்கள் மத்தியில் மிதவாத அரசியல் போக்கு குன்றிப் போயிருந்த சூழ்நிலையில், தமிழ்ப் பத்திரிகைகள் தமிழ் மக்களின் அவலங்களைவெளிக் கொண்டு வருவதில் அவர்கள் ஆற்றிய பணியும், பங்கும் மகத்தானது.

அரசியல் தலைமைத்துவங் களினால் செய்ய முடியாமல் போன சில காரியங்களைக் கூடத் தமிழ் ஊடகவியலாளர்கள் தங்களுக்கு நேரக் கூடிய ஆபத்துக்களையும்பொருட் படுத்தாமல் செய்திருக்கின்றார்கள். பலர் பத்திரிகைத் தொழிலைக் கடைப்பிடிக்கப்போய் உயிர்த் தியாகங்களையும் செய்திருக்கின்றார்கள் என்பதை நாங்கள் மறக்கக் கூடாது. வேறு பலர் நாட்டை விட்டகன்று அஞ்ஞாத வாசம் வாழ்கின்றார்கள் என்பதும் உண்மை. இலங்கையில் தமிழ் முஸ்லிம் மக்களின் அரசியலும் சமூக வாழ்வும் பெரும் இடர்பாடுகளுக்குள் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில், தமிழ் ஊடகங்கள் குறிப்பாக தனியாருக்குச் சொந்தமாக இருக்கின்ற தேசிய தமிழ்ப் பத்திரிகைகள் இதுகால வரையில் செய்திருக்கக் கூடிய பணிகளுக்கு மேலதிகமாகப் பயனுறுதி உடைய கூடுதல் பணிகளை ஆற்ற வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றன"-என்று தெரிவித்துள்ளார். (ற)

கேகாலை மாவட்டம் – எட்டியாந்தோட்டை



ஸ்ரீகதிர்வேலாயுத ஸ்வாமி தேவஸ்தானம்

புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா

மஹா கும்பாபிஷேகம்

கிரியாரம்பம்: பங்குனி 3ம்நாள்(17.03.2014) திங்கள் காலை முதல்.

மஹாயாகாரம்பம்: அன்று (17.03.2014) திங்கட்கிழமை மாலை.

எண்ணைக்காப்பு : 18.03.2014 செவ்வாய்க்கிழமை

காலை 9 மதல் பி.ப 4 மணி வரை

மஹா கும்பாபிஷேகம் : (19.03.2014) புதன் காலை 9மணி 45 நிமிஷ சுபவேளையில் சிறப்பாக நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது.

கிரியைகள் யாவும் 'சிவாகமஞானி' அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார் சங்கானை சிவப்பிரம்மஸ்ரீ.சிவ.நித்தியானந்த சிவாச்சார்யார் ஆகியோரின் குருவருளாசியுடனும் பத்ததிக் கிரமத்துடனும் – பிரதிஷ்டா பிரதம சிவாச்சார்யார் சர்வதேச இந்துமதகுருபீடாதிபதி சிவாகம கலாநிதி அருள்ஜோதி

ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் J.P

தலைமையில் கிரியைகள் இடம்பெறும்.

சர்வசாதகாச்சாரியார்கள்– சாதக கலாபூஷணம் நித்ய.சிவானந்த சிவாச்சார்யார் (சங்கானை)

"சாதக கலாமணி நித்ய.சுதானந்த சர்மா (Director IDM சங்கானை)

ஆலய பிரதமகுரு : சண்முகராஜ யசோக்குமார் சர்மா — ஆலய பரிபாலன சபையினர் –

# இலங்கையின் அபிவிருத்திகள் திருப்தியளிக்கிறதாம்

## சொல்கிறார் சீனத் தூதுவர்

கொழும்பு, மார்ச் 17

இலங்கையில் அவதானிக்கப் படக் கூடிய அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளது. அவை திருப்திகரமானதாக உள்ளன என்று பாராட்டுத் தெரிவித்துள்ளார் சீனாவின் இலங்கைக்கான தூதுவர் வூ ஜியன்கோ.

"நான் இலங்கைக்கான தூதுவராகப் பதவி ஏற்ற இரு ஆண்டுகளில் இலங்கையில் மிகப் பெரிய மாற்றங்களை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இலங்கையில் போர் நிறைவடைந்த பின்னர், இன்னமும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் இருக்கின்றன.

இதுவரையில் இலங்கை அரசு நிறைவு செய்துள்ள இலக்குகளால் சர்வதேச மட்டத்தில் புகழுக்குரிய நாடாக மாறியுள்ளது" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

பதவி வெற்றிடம்



Customer Relations Manager

(வாடிக்கையாளர் சேவை முகாமையாளர்) (ஆண் / பெண்)

**கல்வித்தகைமை :**

ஆங்கில அறிவு மிக முக்கியம்

பட்டதாரி / டிப்ளோமாதாரிகளுக்கு முன்னுரிமை

**வேதனம் :**

மாதம் 20 000/= (EPF, ETF இதில் அடங்கும்)

2 வருட சேவை ஒப்பந்தம்

சனி, ஞாயிறு வேலைநாளாகும்

வார நாள்களில் ஒரு நாள் ஓய்வு வழங்கப்படும்.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயணம் செய்யக்கூடியவர்கள் மாத்திரம் வரவும்

நேர்முகத்தேர்வு : 20.03.2014 மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.

Ms.v. இந்துஜா பொதுமுகாமையாளர்

திசைகாட்டி (பிறைவேற் ) லிமிற் 175, பருத்தித்துறை வீதி

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி கல்யாணி (மைதிலி) சுப்பிரமணியஐயர்

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், ஆயாக்கடவை புன்னாலைக் கட்டுவனை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான திருமதி கல்யாணி (மைதிலி) சுப்பிரமணியஐயர் அவர்கள் நேற்று (16.03.2014) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீர்வேலி பிச்சாடனக்குருக்கள் தம்பதியரின் அன்புமகளும் புன்னாலைக்கட்டுவன் ஆயாக் கடவை சித்திவிநாயகதேவஸ்தான ஸ்தாபக வழித்தோன்றல் த.சுப்பிர மணியஐயர் அவர்களின் அன்புமனைவியும் திருமதி அ.கந்தசாமி ஐயரின் மருமகளுமாவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆயாக்கடவை, புன்னாலைக்கட்டுவன்.

தகவல் : த. மகாலிங்கஐயர் (சகோதரர்)
தொ.பே - 011 2504007, 077 7881766

## மரண அறிவித்தல்

### நவாலியூர் செல்லத்துரை கந்தசாமி

புலவர் வீதி நவாலி வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை கந்தசாமி நேற்று (16.03.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 5.40 மணியளவில் இறையடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2014) திங்கட்கிழமை பி.ப. 1 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வடக்கு, மானிப்பாய்.

தகவல்: திருமதி கந்தையா அழகரத்தினம் (சகோதரி)

## மரண அறிவித்தல்

### சைமன் சாள்ஸ் போல்ராசா (ராசன்)



சென். ஜேம்ஸ் வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாள்ஸ் போல்ராசா நேற்று முன்தினம் (15.03.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சைமன் மற்றும் நாகம்மா தம்பதியரின் மகனும், சண்முகம்-மரியம்மா தம்பதியரின் மருமகனும், மரீனாவதனியின் அன்புக் கணவரும், சாளினி, சுபாந்தினி, றம்மியா, சலக்ஸ்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருந்தவராசா, சுதர்சன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டுப் பூதவுடல் புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென். ஜேம்ஸ் வீதி, இளவாலை.

(சி/12729) (10)

தகவல் : குடும்பத்தினர்.



*சிகிச்சைக்காகக் காத்திருப்போர்.....*

## வட்டு. பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

நவாலி, மார்ச் 17
வட்டுக்கோட்டை பிரதேச அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.
குறித்த மருத்துவமனையின் பொறுப்பதிகாரியாகக் கடந்த வருட இறுதியில் யாழ். போதனா மருத்துவமனையில் பணியாற்றிய மருத்துவர் திருமதி காந்தநேசன் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் நோயாளர் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.
இதனால் தினமும் 200-250 பேர் வரை வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.
ஆனால் இங்கு வெளிநோயாளர் விடுதி, பிரசவ விடுதி என்பன இருந்தும் தங்கியிருந்து சிகிச்சை பெறுவது மிகவும் குறைவு என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். (வ-100)

## குழந்தைகள் 'கிளினிக்' இடம்மாறியதால் சிரமம்

நவாலி, மார்ச் 17
நவாலியில் இயங்கி வந்த குழந்தைப் பிள்ளைகளுக்கான கிளினிக் தற்போது சண்டிலிப்பாய் வைத்திய அதிகாரி பணிமனையில் இயங்குவதால் குழந்தைப் பிள்ளைகளைக் அங்கு சிகிச்சைக்குக் கொண்டு செல்லும் தாய்மார் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

**தற்போது சண்டிலிப்பாய் வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து கிளினிக் நடத்தி வருகின்றனர். இதற்காக பல மைல் தூரத்திலிருந்தும் மக்கள் ஓட்டோ, கார் மற்றும் வாகனங்களில் அதிக பணம் கொடுத்து செல்ல வேண்டியுள்ளது.**

குழந்தைப் பிள்ளைகளுக்கான கிளினிக் நீண்ட காலமாக நவாலி வை.எம்.சி.ஏ மண்டபத்தில் இயங்கி வந்தது. நவாலி கிழக்கு, நவாலி தெற்கு, நவாலி வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் குறித்த கிளினிக் மூலம் பெரிதும் பயன்பெற்று வந்தனர்.
இந்த நிலையில் சில மாதங்களுக்கு முன்னர் வை.எம்.சி.ஏ.நிர்வாகத்தினர் கிளினிக் நடத்துவதற்கு அங்கு அனுமதி வழங்க மறுத்ததை அடுத்து இதற்கு பொறுப்பான மருத்துவ மாதுவும் தொண்டர்களும் கிளினிக்கை நடத்துவதற்கு இடம் கேட்ட வேளை அந்தப் பகுதியின் பல பொது அமைப்புகள் இருந்தும் இந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லை.
இந்த நிலையில் தற்போது சண்டிலிப்பாய் வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து கிளினிக் நடத்தி வருகின்றனர்.
இதற்காக பல மைல் தூரத்திலிருந்தும் மக்கள் ஓட்டோ, கார்மற்றும்வாகனங்களில்அதிக பணம்கொடுத்து செல்ல வேண்டியுள்ளதாக கவலையுடன் தெரிவிக்கின்றனர். (வ-100)

## 'கவரிங்' சங்கிலியை அறுத்துச் சென்ற ஆசாமிகள்

அச்சுவேலி, மார்ச் 17
பாடசாலைக்கு பிள்ளையை ஏற்றி வருவதற்கு சென்ற தாயின் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடித்தப்பினர் இருவர். அவர் அணிந்திருந்த சங்கிலி கவரிங் செய்யப்பட்டது என்பதால் பொருள் இழப்பு இல்லாத போதிலும் சங்கிலியை அறுப்பதற்கு நடந்த இழுபறியில் அந்தப் இளம்பெண் காயங்களுக்கு இலக்கானார்.
இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை அச்சுவேலி வடக்கு கல்லூரி வீதியில் அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு அருகில் நடைபெற்றது.
ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளையை ஏற்றி வருவதற்காக சைக்கிளில் சென்று திரும்பும் அவரை அவதானித்த இருவர் குடியிருப்பு குறைவான வெளியான இடத்தில் காத்துநின்று சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடித் தப்பினர். (ஓ-11)

## டிராக்டர் சாரதி அபராதமாக செலுத்தினார் ரூபா 45,000

### அனுமதியின்றி மணல் ஏற்றியதால்

தென்மராட்சி, மார்ச் 17
மறவன்புலோ பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த டிராக்டர் சாரதிக்கு நீதிமன்றில் 45 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்துக்கு பொதுமக்கள் வழங்கிய இரகசியத் தகவலை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார் மணல் ஏற்றி வந்த டிராக்டரைக் கைப்பற்றியதுடன் சாரதியையும் கைது செய்து சாரதிக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.
கடந்த வியாழக்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து நீதிவான் 45 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (வ-9)




யாழ்.மாவட்ட குடும்ப புனர்வாழ்வு அலுவலகத்தினர் உளவளத் துணை சேவையைப் பெற்ற 18 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிப் பொருள்களை பருத்தித்துறையில் வைத்து வழங்கினர். குடும்ப புனர்வாழ்வு நிலைய வடமாகாண இணைப்பாளர் வி.பிரேம்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கைக்கான கனடா தூதர் செல்னி வைற்றிங் உதவிப் பொருள்களை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன் உட்பட பிரதேச செயலக அலுவலர்கள், கிராம அலுவலர்கள் போன்றோர் கலந்துகொண்டனர். (வ-9)

## பராமரிக்கப்படாத கால்வாய்களால் சுகாதாரக் கேடுகள்

வவுனியா, மார்ச் 17
வவுனியா நகரசபை எல்லைக்குட்பட்ட நீர்வழிந்தோடும் கால்வாய்கள் உரிய வகையில் பராமரிக்கப்படாததால் சுகாதாரக்கேடுகள் தோன்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது.
சந்தைக் கட்டடத்தொகுதி, பசார் வீதி, கண்டிவீதி, ஹொரவப் பொத்தான வீதி, வைத்திய சாலைசுற்றுவட்ட வீதி, உள் வட்ட வீதி, வவுனியா வெளிவட்ட வீதி, முதலாம் இரண்டாம் குறுக்கு வீதி உட்பட பல்வேறு வீதிகளும் கழிவுநீர் தேங்கி நிற்பதால், துர்நாற்றம் வீசுகின்றன. மேலும் கால்வாய்களில் குப்பை கள் காணப்படுவதால் நீர் வழிந்தோட முடியாத நிலை காணப்படுகின்றது. ஆகவே குப்பைகளைத் துப்புரவு செய்யப்பட்டு அகற்றப்படுவதால் கழிவு நீர் சீராக வெளியேறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை சில பகுதிகளில் மழை காலங்களில் நீர் வழிந்தோட முடியாத நிலையில் வீடுகளுக்குள் தேங்கி நிற்பதையும் காணமுடிகின்றது. (க-402)

## மேஜர் ஜெனரல் லக்ஸ்மன் டேவிட்டுக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரியினால் கௌரவம்



*மேஜர் ஜெனரல் லக்ஸ்மனைக் கௌரவிக்கும் சென். பற்றிக்ஸ் அதிபர்*

யாழ்ப்பாணம், மார்ச் 17
மேஜர் ஜெனரல் எச். லக்ஸ்மன் டேவிட்டைக் கௌரவிக்கும் நிகழ்வொன்று கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெற்றுள்ளது.
கல்லூரியின் பழைய மாணவராகிய லக்ஸ்மன் டேவிட் மூன்றுதசாப்தங்களுக்கு மேலாக இராணுவத்தில் சேவையாற்றி வருவதுடன் தற்போது அதி சிரேஷ்ட தரத்திலான பதவியொன்றையும் வகித்து வருகின்றார்.
இந்த கௌரவிப்பு நிகழ்வின் பிரதம அமைப்பாளரும், பற்றிக்ஸ் கல்லூரியின் அதிபருமான அருட்தந்தை எம். ஜெரோ செல்வநாயகம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.
நிழ்வின் ஆரம்பத்தில் நிகழ்வு இடம்பெற்ற பிரதான கேட்போர் கூடத்துக்கு விழா நாயகர் நடந்து வந்த போது கல்லூரியின் கடேற் அணியினர் மரியாதை வழங்கினர்.
பின்னர் நிகழ்வு இடம்பெற்ற போது யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா உட்பட பலர் உரையாற்றினார்கள்.
நிகழ்வின் இறுதியில் நினைவுச் சின்னமொன்று கல்லூரியின் சார்பில் அதிபரால் விழா நாயகருக்கு வழங்கப்பட்டது. (க)

## முழுமழைநீரும் கடலுக்குள் செல்வதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குக

### திக்கம் மத்திய ச.ச. நிலையம் மனு

வடமராட்சி, மார்ச் 17
திக்கம் கிராமத்தில் உள்ள இரு வெள்ள வாய்க்கால்களுக்கும் வான் கதவுகளை ஏற்படுத்தி மழைநீர் முழுவதும் கடலுக்குள் செல்வதைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு திக்கம் மத்திய சனசமூக நிலையம், யாழ்.மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளரை மனு ஒன்றின் மூலம் கேட்டுள்ளது. மழை நீர் கடலுக்குச் செல்லும் இரண்டு பிரதான வாய்க்கால்கள் திக்கம் கிராமத்தில் உள்ளன. இவ் வாய்க்கால்கள் மூலம் மழை நீர் முழுவதும் கடலுக்குள் சென்றடைந்து விடுகின்றன. மழை நீரை குறிப்பிட்டளவு தேக்கி வைத்து விவசாய நிலங்களையும் நன்னீர்க் கிணறுகளையும் பாதுகாக்க வேண்டும். இப் பாதுகாப்புக்கென இரண்டு பிரதான வெள்ள வாய்க்கால்களிலும் வான் கதவு அமைக்கப்பட வேண்டும். வான் கதவுகள் அமைக்கப்பட்டால் மழை நீர் முழுவதும் கடலுக்குள் செல்வதைத் தடுக்க முடிவதுடன் கிராமத்துக்கான நீர் வளத்தையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்என அம்மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தகவல்கள் மற்றும் நடவடிக்கைகளுக்காக மனுவின் பிரதி கள் யாழ். அரச அதிபர், பருத் தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஓ-173)

**மழை நீரை குறிப்பிட்டளவு தேக்கி வைத்து விவசாய நிலங்களையும் நன் னீர்க் கிணறுகளையும் பாதுகாக்க வேண்டும்.**

## விடுதியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

### சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில்

தென்மராட்சி, மார்ச் 17
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடந்த வருடம் 11 ஆயிரத்து 734 பேர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.
விடுதிகளில் சேர்க்கப்பட்டோரை வகைப்படுத்தியபோது பல்வேறு நிலைகளில் காய மடைந்தவாறு சேர்க்கப்பட்டோர் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.
வகைப்படுத்தப்பட்ட முதல் பத்து இடங்களில் சுவாச நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இரண்டாவது இடத்தையும் நச்சுப் பதார்த்தங்கள் அருந்தியோர் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.
நோய்களின் தன்மைகளைப் பரிசோதனை செய்த வேளை வைரஸ் காய்ச்சல், ஆஸ்துமா, வயிற்றோட்டம், வயிற்றுளைவு, பொது நோய்கள், பிரசவம், தோல் புண் ஆகியவை ஏனைய இடங்களைப் பிடித்தன.
காயமடைந்தவர்களுக்கென தனியான சிகிச்சை விடுதி இல்லாத போதிலும் மருத்துவமனையில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் ஆண், பெண் விடுதிகள் ஆகியவற்றில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
நாடு முழுவதும் மருத்துவமனைகளில் விபத்துப் பிரிவுக்கானகட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதால் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு அவசியம் விபத்து சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# தேவையானதைப் பெறும் காலம் கனிந்து வருகின்றது

## தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவிப்பு



ஜெயலலிதா

கள்ளக்குறிச்சி, மார்ச் 17
தேவையானதை நாம் பெற்றுக் கொள்ளும் காலம் தற்போது கனிந்துள்ளது என்று தெரிவித்துள்ளார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"வெறும் ஆட்சி மாற்றத்திற்காக நடக்கும் சாதாரணத் தேர்தல் அல்ல. இந்திய மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தர உள்ள தேர்தல். அயல் நாடுகளின் அச்சுறுத்தல், பொருளாதார சீரழிவு ஆகியவற்றில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கான தேர்தல். உங்களின் துக்கங்களை போக்குகின்ற. துயரங்களில் இருந்து விடுவிக்கின்ற தேர்தல் இது. மத்தியில் இதுபோன்ற மோசமான அரசை நாம் பார்த்ததே இல்லை. பாதுகாப்பு துறையை கூட இந்த அரசு விட்டு வைக்கவில்லை. மத்திய அரசு மாறாந்தாய் எண்ணத்தோடு தமிழகத்தை நடத்தி வருகிறது. ஆனால் இந்தத் தேர்தல் மூலம் தமிழகத்திற்கு தேவையானவற்றை மத்திய அரசிடம் இருந்து பெறக்கூடிய காலம் வந்துவிட்டது. அதற்கான ஒத்துழைப்பை நீங்கள் அளிக்க வேண்டும்" - என்று தெரிவித்துள்ளார்.

(ற)

# எங்களுக்குத் திருமணம்; உங்களுக்கு வாக்குகள்

### அரியானா இளைஞர்களின் 'டீல்'

புதுடில்லி, மார்ச் 17
எங்களுக்கு பெண் பார்த்து திரும ணம் செய்து வைத்தால் உங் களுக்கு வாக்களிக்கின்றோம் என்று அரியானா இளைஞர்கள் ஒப்பந்தம் மேற்கொள்கின்றார்களாம்.
அரியானா மாநிலத்தில் ஆண் பெண் விகிதத்தில் மிகப்பெரிய வேறுபாடு உள்ளது. இதனால், இளைஞர்களுக்கு பெண் பார்த்து திருமணம் செய்வது மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது.
இந்தநிலையில் திருமணமாகாத ஆண்கள் எல்லாம் சங்கம் அமைத்து எங்களுக்கு பெண் பார்த்து கொடுத்தால் உங்களுக்கு வாக்குப் போடுகிறோம் என்று அரசியல்வாதிகளிடம் கூறி வருகின்றனர்.
இந்தமாநிலத்தில் 1000 ஆண்களுக்கு 877 பெண்கள் மட்டுமே உள்ளனர். இங்குள்ள கிராமங்களில் பெண் குழந்தைகளை கருச்சிதைவு செய்து விடுகின்றனர்.
இது குறித்து கிராமவாசி ஒருவர் கூறுகையில், "பெண் குழந்தைகளை கருச்சிதைவு செய்வதால் பெண்களின் பிறப்பு விகிதம் மிகவும் குறைவாக உள்ளது. எங்கள் ஊர் இளைஞர்களுக்கு உரிய வேலை வாய்ப்பு இல்லாததாலும் திருமணம் தள்ளி போகிறது. இதை தடுக்க அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார்.

(ற)



இந்தியாவின் மும்பை நகரில் அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விழுந்ததில் 7 பேர் உயிரிழந்துள்ளனர் நான்கு பேர் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகள் இன்னமும் நடந்துகொண்டிருக்கும் நிலையில் உயிரிழப்புகள் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகின்றது.

# கருத்துக் கணிப்பு முடிவால் கொதித்துப் போயுள்ள லாலு

புதுடில்லி, மார்ச் 17
பிஹாரில் பா.ஜ.கவுக்கு அமோக வெற்றி வாய்ப்புக்கள் உள்ளது என்று வெளியாகியுள்ள கருத்துக் கணிப்புகளை நிராகரித்துள்ளார் ராஷ்ட்ரீய ஜனதா தள தலைவர் லாலு பிரசாத் யாதவ். அனைத்துத் தொகுதிகளிலுமே பா.ஜ.க. வெற்றி பெறும் எவ்வாறு கூறலாம் என்று அவர் கோபத்துடன் கேள்வி எழுப்பியுள்ளார்.
இதுகுறித்து கருத்து தெரிவித்த லாலு,
"பிஹாரில் மொத்தமுள்ள 40 தொகுதிகளில் 20க்கும் மேற்பட்ட தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றி பெறும் என்றும் எஞ்சியவையே ஆர்.ஜே.டி., காங்கிரஸ், ஐக்கிய ஜனதா தளத்துக்கு கிடைக்கும் என்றும் கருத்துக் கணிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இதைக்காட்டிலும் அனைத்துத் தொகுதிகளிலும் பா.ஜ.கவே வெல்லும் என்று சொல்லியிருந்திருக்கலாம். பணத்தை வாங்கிக் கொண்டு இந்த கருத்துக் கணிப்புகள் நடத்தப்பட்டிருக்கின்றன.
நான் ஒரு வாக்குக் கணிப்பு டாக்டர். எனது அழுத்தமானியின் அளவீடு பா.ஜ.கவுக்கும், நிதீஷ்குமாருக்கும் எதிரான மனநிலையில் மக்கள் இருப்பதாக தெரிவிக்கிறது."- என்று தெரிவித்துள்ளார்.

(ற)

# தேர்தலின் பின்னான செயற்பாடுகளை தெளிவுபடுத்துமா தி.மு.க, அ.தி.மு.க?

### கேள்வி எழுப்புகின்றார் ப.சிதம்பரம்



சிதம்பரம்

புதுடில்லி, மார்ச் 17
தேர்தலின் பின்னர் மத்திய அரசில் அங்கம் வகிப்பது குறித்து அ.தி.மு.க., தி.மு.க. தெளிவுபடுத்த வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் சிதம்பரம் கூறியுள்ளார்.
சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய சிதம்பரம் மேலும் தெரிவித்ததாவது:
"காங்கிரஸ் கட்சி தற்போது வலுவிழந்திருந்தாலும் அது வலுவடையவாய்ப்புகள்உண்டு. அ.தி.மு.க., பாரதிய ஜனதாவின் இரண்டாம் அணி என விமர்சித்த சிதம்பரம் சிறுபான்மையினர் உள்ளிட்டோரின் வாக்குகளைப் பெறுவதற்காகவே அ.தி.மு.க. இவ்வாறு செயலாற்றி வருகின்றன். வருங்காலத்தில் பாரதிய ஜனதாவுக்கும் அ.தி.மு.கவுக்கும் கூட்டணி ஏற்பட வாய்ப்புகள் உண்டு.
தேர்தலுக்கு பிறகு பாரதிய ஜனதா ஆட்சிக்கு வந்தால் அதில் அ.தி.மு.கவும். தி.மு.கவும் அங்கம் வகிக்குமா என்பதை அந்தந்தக் கட்சிகள் கூற வேண்டும். வெற்றி பெற்றால் ராகுல் காந்தியே பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்" - என்று தெரிவித்துள்ளார்.

(ற)

# 200 தொகுதிகளில் காங்கிரஸ் வெல்லும்; ராகுல் காந்தி நம்பிக்கை

புதுடில்லி, மார்ச் 17
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 200 தொகுதிகளுக்கும் மேல் வெற்றி பெறும் என்று தெரிவித்துள்ளார் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல்காந்தி.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"100 ஆசனங்களை மட்டுமே காங்கிரஸ் பெறும் என்று பல கருத்துக்கணிப்புகள் முடிவுகளை வெளியிட்டு வருவது நகைச்சுவையானது. நீங்கள் அதைபுரிந்துகொள்ளவேண்டும். எதிர்வரும் தேர்தலில் காங்கிரஸ் 200 தொகுதிகளுக்கும் மேல் வெற்றி பெறும், நரேந்திரமோடி மற்றும் பா.ஜ.க. ஆட்சிக்கு வருவது குறித்து எந்த கேள்வியும் இல்லை.
உங்களை நம்பிக்கையிழக்க செய்வதற்காகவே எதிர்கட்சிகள் பரப்புரை செய்கின்றன. நீங்கள்



ராகுல் காந்தி

நம்பிக்கையை இழக்காமல் இருந்தால் நாம் அ...

...றுக்கி விடலாம். உங்கள் மனதில் சந்தேகம் இல்லாமல் இருந்தால் நாம் 200 தொகுதிகளுக்கும் மேல் வெற்றி பெறுவோம்.
இதேபோல கடந்த 2004 தேர்தலிலும் நாங்கள் தோல்வியடைவோம் என்று பல கருத்துக்கணிப்புகள் முடிவுகளை வெளியிட்டது. ஆனால் காங்கரஸ் வெற்றி பெற்றது. 2009 தேர்தலிலும் அப்படித்தான் கூறின. ஆனால் அதைவிட இரண்டு மடங்கு வெற்றியை பெற்றோம்.
இப்போது மூன்றாவது தேர்தலை எதிர்நோக்குகிறோம். காங்கிரஸ் சரியாக செயற்படவில்லை என்று அவர்கள் எப்போதும் கூறிக்கொண்டேதான் இருப்பார்கள். நாம் கருத்துக்கணிப்புகளை சட்டம் என கருதிவிடக் கூடாது. வலுவான தேர்தலுக்காக போராட வேண்டும்."- என்று தெரிவித்துள்ளார்.

(ற)



வெனிசுவேலாவில் அரசுக்கு எதிரான போராட்டங்களில் மூன்று பேர் உயிரிழந்தனர். அதையடுத்து போராட்டங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 25ஆக உயர்ந்துள்ளது. போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸாருக்குப் பதிலாக இராணுவம் குவிக்கப்பட்டுள்ளதாலேயே இந்த உயிரிழப்புகள் ஏற்படுகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. கடந்த ஒரு மாத காலமாக ஆயிரக்கணக்கானோர் அதிபர் நிகோலஸ் மதுரோவுக்கு எதிராக தலைநகரில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

## உக்ரைன் செல்கிறார் கனேடியப் பிரதமர்

றெறண்றோ, மார்ச் 17

கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் அடுத்தவாரம் உக்ரைனுக்கு பயணம் மேற்கொள்ள உள்ளார்.

உக்ரைனில் ஜனாபதிபதி விக்டர் யனுகோவிச்சின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு இடைக்கால அரசு ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது. அதன் பிரதமராக ஆர்செனி யட்சென்யுக் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் ஜி7 உறுப்பு நாடுகளில் ஒன்றான கனடாவின் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் அடுத்த வாரம் உக்ரைன் சென்று புதிய பிரதமரைச் சந்திக்கவுள்ளார்.

எதிர்வரும் 22ஆம் திகதி உக்ரைன் செல்லவுள்ள பிரதமர், நட்பு நாடுகளுடன் இணைந்து தங்களது அரசும் உக்ரைனின் இறையாண்மையை ஆதரிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ரஷ்யாவுடன் இணையும் கிரிமீயாவின் முடிவை தாங்கள் ஏற்கவில்லை என்று கனடாவின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜோன் பியர்ட் தெரிவித்துள்ளார். (ற)

## கூட்ட நெரிசலில் சிக்கி 7 பேர் உயிரிழப்பு

***நைஜீரியாவில் சம்பவம்***

லண்டன், மார்ச் 17

நைஜீரியாவில் அரச பணிகளுக்கான ஆள்தேர்வின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் அரச பணிகளுக்கான ஆள் தேர்வு தலைநகர் அபுஜாவில் உள்ள தேசிய விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது.

அதில் நாடு முழுவதிலும் இருந்து பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர் என்றும் ஏராளமானோர் காயமடைந்துள்ளனர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அந்தநாட்டு பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர், "சுமார் 60,000 பேர் வரை அமரும் இடவசதி உள்ள தேசிய விளையாட்டரங்கில் எத்தனை பேர் இருந்தனர் என்பது தெரியவில்லை. அதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகின்றது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## பர்வேஸ் முஷாரப்புக்கு பிடியாணை பிறப்பிப்பு

இஸ்லாபாத், மார்ச் 17

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பைக் கைது செய்வதற்கு பிணையில் வெளிவர முடியாத பிடி ஆணையை பிறப்பித்துள்ளது இஸ்லாமாபாத் சிறப்பு நீதிமன்றம்.

ராஜதுரோகக் குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்கு விசாரணைக்கு நேரில் அவர் முன்னிலையாகாதுவிடில் அந்தப் பிடியாணையைப் பயன் படுத்தி அவரைக் கைது செய்யவும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

இந்தநிலையில் இந்த உத்தரவு தொடர்பான நகல் கிடைக்கப் பெற்றதும் அதை எதிர்த்து மனுத் தாக்கல் செய்யப் போவதாக முஷாரப் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு மற்றும் உடல் நிலையை காரணம் காட்டி இந்த வழக்கு விசாரணைக்கு முன்னிலையாவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று பர்வேஸ் முஷாரப் தரப்பு கோரி வந்த நிலையில், சிறப்பு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (ற)

# ஆப்கனில் அமைதி ஏற்படுத்த அமெ. படை தேவையில்லை

***அந்நாட்டு ஜனாதிபதி தெரிவிப்பு***

காபூல், மார்ச் 17

ஆப்கனில் அமைதியை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கப் படைகள் தேவையில்லை. அவர்கள் இந்த ஆண்டு இறுதியில் ஆப்கனில் இருந்து வெளியேறலாம் என்று தெரிவித்துள்ளார் அந்நாட்டு ஜனாதிபதி ஹமீது ஹர்சாய்.

அடுத்த மாதம் ஆப்கனில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையிலேயே ஹர்சாய் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:


"நாட்டின் பாதுகாப்பில் 93 சதவிகிதத்தை நிர்வகிக்கும் தங்களது இராணுவத்தினர் விரைவில் முழு பொறுப்பையும் மேற்கொள்வார்கள் என்று அவர் குறிப்பிட்டார். அதனால் அமெரிக்கத் துருப்புகள் இந்த ஆண்டு இறுதியில் ஆப்கனிலிருந்து வெளியேறலாம்.

ஆப்கனில் அமைதி நிலை நிறுத்தப்படாமல் நேட்டோ படைகள் வெளியேற்றத்திற்குப் பின்னர் எஞ்சியிருக்கும் அமெரிக்கப் படைகளை மீண்டும் அங்கு தொடர வைக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியாது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## கைத்தொலைபேசிகள் மட்டுமே நேபாள பிரதமரின் சொத்துக்கள்

காட்மண்ட், மார்ச் 17

நேபாள பிரதமர் சுஷில் கொய்ராலாவின் சொத்துகளாக இரண்டு கைத்தொலைபேசிகளை மட்டுமே வைத்துள்ளார் என்று அவரது செயலாளர் வசந்தா கௌதம் தெரிவித்துள்ளார்.



பிரதமர் சுஷில் கொய்ராலாவிற்கு சொத்துக்கள் என்று எதுவும் இல்லாததால் சொத்து விவரப் படிவத்தில் எதைக் குறிப்பிடுவது என்ற குழப்பத்தை அந்நாட்டு அதிகாரிகள் எதிர்நோக்கி உள்ளனர்.

இதுகுறித்துக் கருத்து தெரிவித்த வசந்தா கௌதம், "சுஷில் கொய்ராலாவுக்கு என்று சொந்தமாக வீடோ, நிலமோ, காரோ, இருசக்கர வாகனமோ எதுவும் இல்லை. அவர் எந்த நிறுவனத்திலும் முதலீடும் செய்யவில்லை. கொய்ராலாவுக்கு என்று வங்கிக் கணக்கு கூட இல்லை. அவருக்குச் சொந்தமாக 2 கைத்தொலைபேசிகள் மட்டுமே உள்ளன. சொத்து விவரப் படிவத்தில் கைத்தொலைபேசிகளைச் சொத்துகளாகக் குறிப்பிட முடியாது. எனவே சொத்து விவரப் படிவத்தில் கொய்ராலாவுக்கு சொத்து ஏதும் இல்லை என்று குறிப்பிட உள்ளோம்." - என்று தெரிவித்துள்ளார்.

மிகவும் எளிய மனிதராக அறியப்பட்ட கொய்ராலா, பலுவட்டர் பகுதியில் உள்ள பிரதமர் இல்லத்திற்கு கடந்த பெப்ரவரி மாதம் குடிபெயர்ந்தார். அதற்கு முன்னர் நேபாள காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஒருவருக்குச் சொந்தமான வீட்டில் வாடகைக்குத்தங்கியிருந்தார். (ற)

# ஜப்பானின் அணு உலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்

டோக்கியோ, மார்ச் 17

ஜப்பானின் அணுவுலைகளை மீண்டும் திறக்கக்கூடாது என்று தெரிவித்து பல மத பிரதிநிதிகள் அந்நாட்டு தலைநகர் டோக்கியோவில் கூடிப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

2011ஆம் ஆண்டு நிலநடுக்கத்தை தொடர்ந்து அணு திட்டங்களினால் ஏற்படும் பாதிப்பு தீவிரமாகி வருகின்றது என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கவலை வெளியிட்டனர்.

மக்கள் மீதும், சுற்றுச்சூழல் மீதும் அணு திட்டங்கள் ஏற்படுத்தும் பாதகங்கள் இன்னும் தெரியவில்லை என வேதனை தெரித்த பிரதிநிதிகள், இந்த விவகாரத்தில் அரசு பொறுப்பற்ற முறையில் செயல்படுவதாக குற்றம்சாட்டினர்.

கோடை காலத்தில் ஏற்படும் மின் பற்றாகுறையை போக்க செயல்படாமல் உள்ள 48 அணுவுலைகளை மீண்டும் செயற்படுத்த ஜப்பான் அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. (ற)

# மாயமான மலேசிய விமானம் கடத்தப்பட்டிருக்கலாம் நாள்தோறும் வெளியாகின்றன புதிய தகவல்கள்

லண்டன், மார்ச் 17

காணாமல் போனதாகக் கூறப்படும் மலேசிய விமானத்தின் சமிக்ஞைகள் தமது செய்மதி கட்டமைப்புக்களில் பதிவாகியுள்ளது என்று பிரிட்டனைத் தளமாகக் கொண்ட செய்மதி நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

எம் ஏச் 370 என்ற குறித்த விமானம் 239 பேருடன் கடந்த 08ஆம் திகதி காணாமல் போயிருந்தது. அந்த விமானத்தை தேடும் பணிகள் சர்வதேச நாடுகளின் கப்பல்கள் மற்றும் விமானங்களின் ஒத்துழைப்புடன் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையிலேயே பிரிட்டன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதுகுறித்து பிரிட்டன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எமக்கு கிடைக்கப்பெற்றுள்ள இந்த சமிக்ஞைகள், தேடுதல் நடவடிக்கைகளுக்கு பெரிதும் உதவக்கூடும்" என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அதேவேளை, குறித்த விமானம் தொடர்பிலான உண்மைத் தகவலை வெளியிடுமாறு சீனா மலேசியாவைக் கோரியுள்ளது. அத்துடன் தமது தொழிநுட்ப வல்லுநர்களை மலேசியாவிற்கு அனுப்பியுள்ளதாகவும் சீனா அறவித்துள்ளது.

விமானத்தின் தொலைத்தொடர்பு கட்டமைப்பு திட்டமிட்ட வகையில் செயலிழக்கச் செய் யப்பட்டுள்ளதாக வெளியான தகவலையடுத்து இந்த நட வடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ள தாகவும் சீனா குறிப் பிட்டுள்ளது.

இவை ஒருபுறமிருக்க காணாமற்போன மலேசிய விமானத்தை தேடும் பணியை ஜப்பானும், வியட்நாமும் கைவிட்டுள்ளன. விமானத்தின் சிதைந்த பாகங்கள் கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதாலேயே இந்த முடிவுக்கு வந்திருப்பதாக அந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

விமானம் பற்றிய முழுமையான தகவல்களை தெரிவிக்க மறுக்கும் மலேசிய அரசு மீது வழக்குத் தொடரப் போவதாக அதில் சென்ற சீனப் பயணிகளின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். விமானம் குறித்து முரண்பட்ட தகவல்கள் நாள்தோறும் வெளியாகி வருவதால், மலேசிய அரசு அதனை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ற)

## அதிவேகப் பாதையைத் திறந்து வைத்தார் ஜனாதிபதி




அதிவேகப் பாதையை திறந்து வைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது மகன் நாமல் ராஜபக்ஷவுடன் காரில் பயணிக்கிறார்.

கொழும்பு,மார்ச் 17
தென் அதிவேக பாதையின் காலி முதல் மாத்தறை வரையான பாதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது.
காலி பின்னதுவ முதல் மாத்தறை கொடகம வரையான பாதையே இவ்வாறு திறக்கப்பட்டுள்ளது.
சர்வமத வழிபாடுகளின் பின்னர், இந்தப் பாதை திறந்து வைக்கப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

## போதைப் பொருளை நாட்டில் ஒழியுங்கள்

### துமிந்த சில்வா கோரிக்கை



துமிந்த சில்வா

கொழும்பு,மார்ச் 17
விசேட அதிரடிப்படையினரை பயன்படுத்தி கொலன்னாவ பிரதேசத்தில் பீடித்துள்ள போதைப் பொருள் என்ற தொற்று நோயை ஒழிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.
ஒருகொடவத்தை பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
கொலன்னாவ பிரதேசத்தில் பரவியிருக்கும் ஹெரோயின் போதைப் பொருளை ஒழிக்க ஜனாதிபதி விசேட அதிரடிப் படையினரை பயன்படுத்த வேண்டும் என்று அவர் கூறினார். (ச)

## சீனாவிடமிருந்து அதிக கடன் பெறுகின்றது இலங்கை அரசு

### திருப்பிச் செலுத்த மக்களிடம் பணம் அறவீடு என்கிறது ஐ.தே.க.



லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு,மார்ச் 17
சீனாவிடம் அரசு அதிகளவில் கடனைப் பெற்று வருகிறது. அவற்றை மோசடி ஆட்சியாளர்கள் கொள்ளையடிக்கின்றனர். பெற்ற கடனை மக்களின் பணத்தைக் கொண்டே திருப்பி செலுத்துகின்றனர்.
நாட்டில் போர் நடைபெற்ற காலத்தில் மக்கள் சிறப்பான முறையில் வாழ்ந்து வந்தனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
கொரக்கானே பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
போர் நடைபெற்ற காலத்தில் மக்கள் பொருளாதார கஷ்டங்கள் இன்றி சிறந்த முறையில் வாழ்ந்து வந்தனர்.
போர் முடிவடைந்து 5 ஆண்டுகளில் இந்த அரசு மக்களுக்கு எவ்விதமான நிவாரணங்களையும் வழங்கவில்லை. மக்களை சிரமங்களுக்கு உள்ளாகியுள்ள அரசு தொடர்ந்து ஏமாற்றி வருகிறது.
ஊழல், மோசடிகளில் அரசு மூழ்கியுள்ளது. அரசின் செயற்பாடுகளால் ஆட்சியாளர்கள் மக்கள் மத்தியில் செல்ல முடியவில்லை. அதனால் மக்களை ஏமாற்ற அரசு பொய்களை கூறி வருகிறது.
ஆட்சியாளர்கள் தற்போது ஜெனீவா பற்றி பேசுகின்றனர். ஆட்சியாளர்களை மின்சார நாற்காலியில் அமர்த்தப் போகின்றனராம் என்று கூறப்படுகிறது. அது மக்களின் அனுதாபத்தைப் பெற கூறும் கோமாளிக் கதைகள்.
அரசுக்கு அயல் நாடான இந்தியா உதவியளிப்பதில்லை. அந்த அளவுக்கு அரச தரப்பினர் நாட்டைச் சீரழித்துள்ளனர்.
சீனாவிடம் அரசு அதிகளவில் கடனைப் பெற்று வருகிறது. அவற்றை மோசடி ஆட்சியாளர்கள் கொள்ளையடிக்கின்றனர். பெற்ற கடனை மக்களின் பணத்தைக் கொண்டே திருப்பி செலுத்துகின்றனர். இது மிகப் பெரிய அநியாயம்.
திருடர்களுக்கு நாட்டைத் தொடர்ந்தும் கொள்ளையிட இடமளிக்க முடியாது. இந்த திருட்டுக் கூட்டத்தை விரட்டியடிக்க வேண்டும்.
நாட்டை ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே முன்னேற்ற முடியும். இதனை மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்- என்றார். (ச)

## மாணவர்களின் இடைவிலகலை தடுக்க திட்டங்கள்

மட்டக்களப்பு,மார்ச் 17
மாணவர்களின் இடைவிலகலை முற்றாக ஒழிக்கும் நோக்கில் மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேச செயலகம் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.
இந்தத் திட்டங்கள் பொருளாதார ரீதியில் கல்வியைத் தொடர முடியாத சிறுவர்களை இனங்கண்டு அவர்களை பாடசாலைக் கல்வியுடன் இணைக்கும் நோக்குடனும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## இந்த வாரம் நாட்டில் மழை

எதிர்வு கூறுகிறது காலநிலை அவதான நிலையம்

கொழும்பு,மார்ச் 17
இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் இந்த வாரம் முதல் மழை பெய்ய ஆரம்பிக்கும் என்று கால நிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.
கிழக்கு மாகாணத்தில் முதலில் மழை ஆரம்பித்து பின்னர் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் பெய்யும் என்று கடமையிலுள்ள காலநிலை அவதான ஆய்வாளர் கே.பி. சுஜீவ தெரிவித்தார்.
எதிர்வரும் நாள்களில் பருவப் பெயர்ச்சிக் காற்றும் நிலை கொள்ளவுள்ளது என்று அவர் கூறினார். (ச-22)

## போலி நாணய தாள்களுடன் ஒருவர் கைது

கொழும்பு,மார்ச் 17
சீதுவ - லியனகேமுல்ல பகுதியில் போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
5000 ரூபா போலி நாணயத் தாள்கள் 67 மற்றும் 1000 ரூபா போலி நாணயத்தாள்கள் நான்கும் சந்தேகநபர் வசமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.
ஒருபக்கம் மட்டும் அச்சிடப்பட்ட சில நாணயத்தாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.
சந்தேகநபர் கன்னதோடுவ பிரதேசத்தை சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## இலங்கையில் கால் பங்கினருக்கு நீரிழிவு நோய் ஏற்படும் அபாயம்

*கொழும்பு,மார்ச் 17*
*இலங்கை சனத்தொகையில் கால் பங்கினர் வரை நீரிழிவு நோய்க்கு உள்ளாகும் ஆபத்து ஏற்படும் என்று ஆய்வுகள் மூலம் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.*
*இலங்கையில் உள்ள நான்கு பேரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படுகிறன என்று ராஜரட்டை பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.*
*விவசாய இரசாயனங்களின் பாவனையே இந்த நிலைப்பாட்டுக்கு முக்கிய காரணியாகும் என்று அவர் கூறினார்.*

**25 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப் பட்டோருக்கே நீரிழிவு நோய் ஏற்படுகிறது.**

*25 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டோருக்கே நீரிழிவு நோய் ஏற்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)*


## திரவப்பால் கொண்டு வர மத்திய மாகாணத்தில் தடை

### சுகாதாரத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 17
பசுக்கள், திரவப்பால் , சாணம் போன்றவை பிற மாவட்டங்களில் இருந்து மத்திய மாகாணத்துக்கு எடுத்து செல்லப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று மத்திய மாகாண கால்நடை உற்பத்திகள் மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் குலேஸ்வர்குமார் தெரிவித்தார்.
மிருகங்களிடையே கால் மற்றும் வாய் நோய்கள் பரவிச் செல்வதைத் தவிர்க் கவே தற்காலிகமாக இத்த கைய தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
மத்திய மாகாணத்திலிருந்து பிற மாவட்டங்களுக்கு மாடுகளைக் கொண்டு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
இதேவேளை மத்திய மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் திரவப்பால் மற்றும் சாணம் போன்றவை பிற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து விவசாயப் பண்ணைகள் மற்றும் தனியாரால் வளர்க்கப்படும் மாடுகள், ஆடுகள் மற்றும் பன்றிகளுக்கு வாய் மற்றும் கால் நோய் தொடர்பான தடுப்பூசிகளை ஏற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார். (ச-22)

## பௌத்த சக்திகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் சர்வதேசம்


### எல்லாவள மேதானந்த தேரர் தெரிவிப்பு



எல்லாவள மேதானந்த தேரர்

கொழும்பு,மார்ச் 17
இலங்கையில் பௌத்த சக்திகளுக்கு எதிராக உலக நாடுகள் செயற்படுகின்றன என்று எல்லாவள மேதானந்த தேரர் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எழுச்சிப் பெற்று வரும் பௌத்த சக்திகளுக்கு எதிராகவே இந்த நாடுகள் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளன.
நாட்டுக்கு எதிராக வெளிநாட்டு சக்திகள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சந்தர்ப்பத்தில், நாட்டில் உணவு தவிர்ப்புப் போராட்டம், பேரணிகள் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் இலங்கையில் இருப்பவர்கள் மிலேச்சத்தனமானவர்கள் என்ற தவறான தோற்றம் சர்வதேசத்தில் ஏற்படும்.
இவ்வாறான சம்பவங்கள் நாட்டுக்கு எதிரான எதிராளிகளுக்கு ஆயுதங்களை கையில் கொடுப்பதற்கு ஒப்பானதாகும்-என்றார். (ச)

## ஐ.தே.க. உறுப்பினர் காலமானார்




சஜ்ஜீவ கவிரத்ன

கொழும்பு,மார்ச் 17
ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாணசபை உறுப்பினர் சஜ்ஜீவ கவிரத்ன நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார் என்று கண்டி பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.
இருதய கோளாறால் சில நாள்களுக்கு முன்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாகாண சபை உறுப்பினர் தீவிர கண்காணிப்புப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (ச)

# கொக்கிளாயில் தென்பகுதி மீனவர் டிராக்டர் மூலம் கரைவலை தொழில்

## நேரில் எச்சரித்தார் வடமாகாண சபை உறுப்பினர்

முல்லைத்தீவு, மார்ச் 17
முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதியில் சட்ட விரோதமாக டிராக்டரைப் பயன்படுத்தி கரவலைத் தொழிலில் சிலர் ஈடுபட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. இதனை நேரில் சென்று பார்வையிட்ட வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் இதற்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
தென் பகுதியில் இருந்து வந்து தமிழர்களின் தொழில் இடங்களை ஆக்கிரமித்துள்ளவர்களே இவ்வாறு சட்டவிரோத மீன்பிடி முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
இயற்கையையும் தொழிலையும் இறையாய் மதித்து தொழில் செய்து வந்தவர்கள் நாம்.
ஆனால் இன்று எங்கள் தேசத்தில் தொழில் விழுமியங்களை மீறி, சட்ட விரோதமான வலைகளைப் பயன்படுத்தி கடல் வளத்தை அழிக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளனர். 1983 ற்கு முன்னர் கொக்கிளாய் பகுதியில் கரைவலை வளைப்பதற்கான அனுமதியை 12 பாடுகளில் 11 தமிழர்கள் பெற்று தொழில்செய்துவந்தனர்.
ஒவ்வொருவரும் சுமார் 30-35 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி தொழில் செய்து வந்த நிலையில், இறுதிப்போரின் பின்னர் இந்தப் பாடுகளை தென்னிலங்கை சிங்கள மீனவர்கள் அபகரித்துள்ளனர்.
அவ்வாறு அபகரித்துள்ள தென்னிலங்கை மீனவர்கள் சட்டவிரோதமாக டிராக்டரை பயன்படுத்தி கரைவலை இழுக்கின்றனர்.
நான் நேரடியாக ஒரு கரைவலைப் பாட்டுக்குச் சென்றபொழுது அங்கு சுனித், சுசில் என்ற இருவரும் டிராக்டரைப் பயன்படுத்தி கரைவலை இழுத்தனர். இவர்கள் இருவரையும் நான் எச்சரிக்கை செய்துவிட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துவிட்டு திரும்பினேன் - என்றார்.
(ஜ-86)


கரைவலை இழுக்கும் டிராக்டர்

### ஓய்வூதியர் சங்கப் பொதுக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
நிதியத் தலைவர் அ. கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளநிகழ்வில்முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள்வார். (ஜ-18)

### வவுனியாவில் மகளிர்தின நிகழ்வு

மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை வங்கியின் ஏற்பாட்டில் வவுனியாவில் சிறப்பு நிகழ்வு இடம்பெற்றுள்ளது.
வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் இலங்கை வங்கியின் வவுனியாப் பிராந்திய முகாமையாளர் பி.நந்தகுமார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (க-421)


மன்னார் தலைமையக பொலிஸாரின் பொலிஸ் அணிவகுப்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கான மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த விக்ரமசிங்க பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். (ஐ)

## முல்லை.முஸ்லிம்களின் பிரச்சினைக்குத் தீர்வு

மன்னார், மார்ச் 17
முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் தெரிவித்தார்.
கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவுக்கு பயணம் செய்த அவர் அங்கு மீள்குடியேறியுள்ள மக்களை சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.
ஹிஜ்ராபுரம், நீராவிப்பிட்டி, தண்ணீரூற்று ஆகிய கிராமங்களில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் காணி, வீடு உள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பில் தான் உரிய நடவடிக்கை எடுப்பதாக அப்பகுதி மக்களிடம் உறுதியளித்தார்.
அத்துடன் தண்ணீரூற்று முஸ்லிம் வித்தியாலயத்தையும் அவர் சென்று பார்வையிட்டார்.
(ஜ- 56)

## ஆனைவிழுந்தான் பாடசாலை குறைபாடுகள் தீர்க்க கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 17
கிளிநொச்சி, ஆனைவிழுந்தான் குளம் அ.த.க. பாடசாலையின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றித்தருமாறு அப்பகுதி மக்கள் வடமாகாண கல்விஅமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இதற்கு பதிலளித்துள்ள கல்வி அமைச்சர் வடபகுதியில் பெரும்பாலான பாடசாலைகள் வளப்பற்றாக்குறையுடனேயே இயங்குகின்றன. பொதுவாக கட்டட வசதியின்மை, தளபாட வசதியின்மை, விளையாட்டு வசதியின்மை என்பவற்றுடன் ஆசிரியர் பற்றாக்குறையும் பெரும் பிரச்சினையாக உள்ளது. இவை குறித்து நாம் ஆராய்ந்து வருகிறோம். முதல் நிலைத் தேவையுள்ள பாடசாலைகளின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் ஆனைவிழுந்தான் பாடசாலையில் குறைபாடுகளையும் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.
(ஜ-18)

## கசிப்பு தொடர்பான குற்றச்சாட்டுகள்; ஒருவருக்கு 4½ லட்சம் தண்டம்

கிளிநொச்சி, மார்ச் 17
கசிப்புடன்தொடர்புடைய நான்கு குற்றங்களுக்காக கிளிநொச்சி நீதிமன்றம் ஒரு வருக்கு 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. கிளிநொச்சி புதுமுறிப்பைச் சேர்ந்த நபருக்கு கசிப்பு உற்பத்தி செய்தமை, உற்பத்தி செய்யும் பொருள்களை வைத்திருந்தமை, 15 லீற்றர் 750 மில்லி லீற்றர் கோடாவை வைத்திருந்தமை 6 லீற்றர் கசிப்பை வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுக்காக இந்தத் தண்டம் விதிக்கப்பட்டது. முதல் இரு குற்றங்களுக்காக தலா ஒரு லட்சம் ரூபாவும் மற்றைய இரு குற்றங்களுக்காக தலா ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் தண் டமாக விதிக்கப்பட்டது.
(ஜ-18)

## பனை ஓலை எடுத்துவரச் சென்ற மாணவனை தீண்டியது பாம்பு

### பாடசாலை நேரத்தில் சம்பவம்

கிளிநொச்சி, மார்ச் 17
பாடசாலை நேரத்தில் பனை ஓலை எடுக்கச் சென்ற மாணவன் பாம்புக் கடிக்கு இலக்காகி கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்.
இந்தச் சம்பவம் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. நாச்சிக்குடாவைச் சேர்ந்த அ.ஜேசுதாசன் (வயது - 13) என்ற முழங்காவில் நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை மாணவனே பாம்புக்கடிக்கு இலக்காகி உள்ளான்.
இதேவேளை, பாடசாலை நேரத்தில் ஆசிரியர் ஒருவரே பனை ஓலைகளை எடுத்து வருமாறு கூறினார் என்றும் பாம்புகள் மற்றும் விஷ ஜந்துகள் நடமாடும் இடங்களுக்கு பிள்ளைகளை விடுவது சரியல்ல என்றும் அந்தப் பாடசாலையில் அக்கறை கொண்ட சிலர் குறிப்பிட்டனர். (ஒ-ஜ-18)

## போர்க் காலத்தைப் போன்று மன்னாரில் திடீர் சோதனை

மன்னார், மார்ச் 17
மன்னாரில் கடந்த சில தினங்களாக போர்க்காலத்தில் நடந்தது போன்று படையினர் கடும் சோதனை நடவடிக்கை களை மேற்கொண்டு வருவ தால் மக்கள் மத்தியில் அச்ச நிலை காணப்படுகின்றது.
மன்னார்- தாழ்வுபாடு பிரதான வீதியில் பல இடங்களில் இராணுவத்தினரும், விசேட அதிரடிப்படையினரும் தனித்தனியாக சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை மன்னார்- தலைமன்னார் பிரதான வீதியிலும் இடம்பெற்று வருகின்றன.
வீதியால் வரும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு அதில் பயணிப்பவர்களது அடையாள அட்டைகள் பரிசீலினை செய்யப்படுகின்றன. மேலும் வாகனங்களின் இலக்கங்களைப் பதிவு செய்து கொள்வதோடு எங்கிருந்து எங்கே செல்லுகின்றீர்கள் என்ற கேள்விகளும் கேட்கப்படுகின்றன.
இதேவேளை மன்னார் நுழைவாயிலில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.
மன்னார் தள்ளாடி அந்தோனியார் ஆலயத்துக்கு முன்பாக இராணுவத்தினர் வீதித்தடைகளை அமைத்து வாகனங்களில் வருபவர்களை நிறுத்திச் சோதனைகளை மேற்கொள்கின்றனர். (க-56)

## மேத்தா நிறுவனத்தின் நடமாடும் சேவைகள் கிளிநொச்சி, முல்லைத்தீவில் அடுத்த வாரம்

மன்னார், மார்ச் 17
அவயவங்களை இழந்தவர்களுக்கான விசேட நடமாடும் சேவை முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. மேத்தாசெயற்கை அவயவங்கள் அமைக்கும் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த சேவை நடத்தப்படவுள்ளது.
இதன்படி எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையும், 24ம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரையும் இரு தினங்கள் இந்த நடமாடும் சேவை கிளிநொச்சி ஏ- 9 வீதியில் அமைந்துள்ள கருணை இல்லத்தில் நடைபெறவுள்ளது.
எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையும் மறுநாள் புதன்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியில் உள்ள மீனவர் கூட்டுறவு சங்க சமாசத்திலும் நடைபெறவுள்ளது.
(ஐ)



செயற்கை உறுப்புக்களை உருவாக்கும் மேத்தா நிறுவனம்

# முதலமைச்சர் பதவி கிடைக்காவிடில் கிழக்கில் அரசு ஆட்சி கவிழும்

## முற் கூட்டியே எச்சரிக்கிறார் ஹக்கீம்

திருகோணமலை,மார்ச் 17

அரசு வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக முதலமைச்சர் பதவி வழங்கப்படாவிட்டால், கிழக்கு மாகாணசபைக்கான ஆதரவு மீளப் பெற்றுக்கொள் ளப்படும். இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



ரவூப் ஹக்கீம்

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் பதவியை பகிர்ந்து கொள்ள முன்னர் இணக்கம் காணப்பட்டிருந்தது.

அரசு இணக்கப்பாடுகளை மதிக்காவிட்டால் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் அளவில் கிழக்கு மாகாணத்துக்கு வழங்கி வரும் ஆதரவை மீளப் பெற்றுக்கொள்ள நேரிடும்.

கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் வழங்கி வரும் ஆதரவு மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டால் மாகாணசபையை கலைக்க நேரிடலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

முதலமைச்சர் பதவியை தலா இரண்டரை ஆண்டுகளுக்கு பகிர்ந்து கொள்வதென ஆளும் கட்சியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணங்கியிருந்தன.

அதற்கமைய முதல் இரண்டரை ஆண்டுகளுக்கு அரச பிரதிநிதி ஒருவரும் பின்னர் முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதி ஒருவரும் முதலமைச்சராக பதவி வகிப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதல் இரண்டரை ஆண்டு காலம் பூர்த்தியாகின்றது.

அதனையடுத்து எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும்.

எதாவது காரணங்களுக்காக முதலமைச்சர் பதவி வழங்கப்படாவிட்டால் அரசுக்கான ஆதரவை மீளப் பெற்றுக் கொள்ள நேரிடும்-என்றார். (ச)

## ஆலையடிவேம்பில் அதிகரித்து வரும் திருட்டுக்கள்

அம்பாறை,மார்ச் 17

அம்பாறை,ஆலையடிவேம்பு பிரதேசத்தில் நிர்மாணிக்கப் பட்டு வரும் பல வீடுகளில் பொருத்தப்படுகின்ற கதவு நிலைகள் மற்றும் கட்டடப் பொருள்கள் திருடப்பட்டு வருகின்றன.

ஆள்கள் இல்லாத வீடுகள் அண்மைக்காலமாக உடைக்கப்பட்டுவருகின்றன என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்தப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற வீடுகளில் ஆள்கள் இல்லாததை அறிந்த திருடர்கள் இரவில் கதவு நிலைகள் மற்றும் கட்டடப் பொருள்களை திருடிச் செல்கின்றனர்.


இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் நாளாந்தம் இடம் பெற்று வருகின்றதால் இரவில் கண்விழித்து இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கவலை தெரிவித்தனர். (ச)

# ஓட்டோக்களுக்கு விசேட ஸ்ரிக்கர்

கொழும்பு,மார்ச் 17

காத்தான்குடியிலுள்ள ஓட்டோக்களுக்கு விசேட ஸ்ரிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

காத்தான்குடி ஓட்டோ சாரதிகள் நலன்புரி சங்கத்தால் பொலிஸாருடன் இணைந்து இந்த ஸ்ரிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.




பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.துசாற காத்தான்குடியில் ஓட்டோவுக்கு ஸ்ரிக்கர் ஒட்டுகிறார்.

இந்த ஸ்ரிக்கரை காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரிவுக்கான பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.துசாற ஓட்டோவுக்கு ஒட்டி ஆரம்பித்து வைத்தார்.

காத்தான்குடி ஓட்டோ சாரதிகள் நலன்புரி சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 464 ஓட்டோக்களுக்கு விசேட ஸ்ரிக்கர்களை

**காத்தான்குடி ஓட்டோ சாரதிகள் நலன்புரி சங்கம் பொலிஸாருடன் இணைந்து ஸ்ரிக்கர் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது.**

ஒட்டி அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் செயலர் ஏ.பி. ஏ.நிகார் தெரிவித்தார். (ச)



வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது, அம்பாள், பிள்ளையார், முருகன் மூன்று தேர்களில் தனித்தனியாக எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுத்த வேளையில்..... (ச-40)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 8 பேர் கைது

அக்கரைப்பற்று,மார்ச் 17

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற பெண் ஒருவர் உட்பட 8 பேரை நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கை மின்சார சபையின் அம்பாறை கிளையும், அக்கரைப்பற்று பொலிஸாரும் இணைந்து ஆலையடிவேம்பு, கண்ணகிபுரம், கோளாவில், பனங்காடு ஆகிய பிரதேசங்களில் நேற்று அதிகாலை 4 மணியளவில் சுற்றிவளைத்து சோதனையிட்டனர்.

இந்தச் சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்த எட்டுப் பேரை கைது செய்துள்ளதுடன், பெருமளவிலான மின்சார வயர்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர். (ச)

# வாகை மரத்துக்கு தீ வைத்த விஷமிகள்

## திருமலையில் சம்பவம்



நகர சபை உறுப்பினர்களும் கடற்படையினரும் தீயை அணைக்கும் நடவடிக்கையில்

திருகோணமலை,மார்ச் 17

திருகோணமலை, ஏகாம்பரம் வீதியில் அமைந்துள்ள வாகை மரம் ஒன்றுக்கு விஷமிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை தீ வைத்துள்ளனர்.

இந்தத் தகவலை அறிந்த நகர சபையினரும் பொலிஸாரும் கடற்படையினரின் உதவியுடன் தீயை அணைத்துள்ளனர்.

சனக்கூட்டம் நடமாடும் திருமலை, முற்றவெளிக்கு முன்னாள் உள்ள இந்த மரத்துக்கு சுற்றுப்புற சூழலில் அக்கறை இல்லாத விஷமிகள் தீயை வைத்துள்ளனர்.

பல பொந்துகளை கொண்டமைந்த மரத்தின் அனைத்துப் பொந்துகளாலும் தீ பரவத் தொடங்கியதை அவதானித்த பொதுமக்கள், வழங்கிய தகவலின் அடிப்படையில் நகர சபையினரும் கடற்படையினரும் இணைந்து தீ பரவுவதை கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளனர். (ச)

# நாட்டில் இன்று சுமுகமான சூழல்

## பிரான்ஸ் தூதரிடம் கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

திருகோணமலை,மார்ச் 17

கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற போரால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்த மக்கள் மத்தியில் இன்று சுமுகமான நிலை ஏற்பட்டுள்ளது. இவ் வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் தெரிவித்தார்.



பிரான்ஸ் தூதர் ஜீன் போல் மொன்சூ, முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கிழக்கு மாகாணத்துக்கு சென்ற பிரான்ஸ் தூதர் ஜீன் போல் மொன்சூ, முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போதே முதலமைச்சர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நாட்டில் சுமுகமான நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் சகல பிரதேசங்களிலும் ஜனநாயக கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் ஜனநாயக முறைப்படி தே[illegible] நடைபெற்று மக்களின் [illegible] நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு வடக்கு மாகாண சபை தேர்தல் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தற்போது நாடு அடைந்திருக்கும் சமாதானத்தையும், அபிவிருத்தியையும் இல்லாமல் செய்து மீண்டும் பயங்கரவாத பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கு சில சக்திகள் முயல்கின்றன-என்றார். (ச)

# அத்துமீறி மீன்பிடித்தால் இந்திய மீனவர் கைதாவர்

## இலங்கை சட்டத்துக்கு அமைய நடவடிக்கை என்கிறது அரசு

கொழும்பு,மார்ச் 17
இந்திய மீனவர்கள் அத்து மீறி இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபட்டால் கைது செய்யப்படுவர்என்று இலங்கைஅரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் பிரவேசிக்க கூடாது. பேச்சுக்கள் நடத்தப் பட்டாலும் சட்டவிரோதமான முறையில் இலங்கைக் கடற் பரப்புக்குள் பிரவேசிக்கும் இந்திய நபர்கள் தண்டிக்கப்படுவர் என்று மீன் பிடித்துறை அமைச்சின் செயலர் நரேந்திர ராஜ பக்ஷ தெரிவித்தார்.

“ சட்டவிரோமான முறையில் நாட்டுக்குள் பிரவேசிக்கும் மீனவர்களுக்கு எதிராக இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இரு தரப்பு மீனவர்களுக்கு இடையில் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ள நிலையில் அவர் இந்தத் தகவலை தெரிவித்தார்.

இருதரப்புக்கும் இடையேயான பேச்சுக்கள் எதிர்வரும் 25 ஆம் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான மீனவர் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு காண்பதே எமது விருப்பம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், இந்திய மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட மாட்டாது என்று அவர் கூறினார்.

சட்டவிரோமான முறையில் நாட்டுக்குள் பிரவேசிக்கும் மீனவர்களுக்கு எதிராக இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## அமைச்சு செயலர்களுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு

### ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு,மார்ச் 17
மூன்று அமைச்சு செயலர்களுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் லஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலர்களில் இருவர் குறித்த பதவியை வகிப்பதற்கு முன்னர் கூட்டுத்தாபன தலைவர்களாக கடமையாற்றியுள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இருவரும் லஞ்சம் பெற்றுக்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

மாவட்டச் செயலர் பதவியை வகித்த மற்றுமொரு அமைச்சின் செயலரும் குறித்த காலத்தில் லஞ்சம் பெற்றுக்கொண்டுள்ளார் என்று குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

“ மாவட்டச் செயலர் பதவியை வகித்த மற்றுமொரு அமைச்சின் செயலரும் குறித்த காலத்தில் லஞ்சம் பெற்றுக்கொண்டுள்ளார் என்று குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச)

## போகம்பரை சிறைச்சாலை மக்கள் பார்வைக்கு

கொழும்பு,மார்ச் 17
கைதிகளின்றி வெற்றிடமாகியுள்ள போகம்பரை சிறைச் சாலை நேற்றுமுன்தினம் முதல் மக்கள் பார்வைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

போகம்பரை சிறைச்சாலை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும், சிறைச்சாலைகள் ஆணையாளர் காமினி குலதுங்க தெரிவித்தார்.



போகம்பறை சிறைச்சாலை

“ எதிர்வரும் 25 ஆம் திகதி வரை சிறைச்சாலையைப் பார்வையிட முடியும்

காலை 9 மணிமுதல் மாலை 4.30 மணி வரை மக்கள் சிறைச்சாலையை பார்வையிட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச)



உலக உணவுத் திட்டத்துக்கு 50,000 மெற்றிக் தொன் அரிசியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி செயலகத்தில் வைத்து உலக உணவுத்திட்ட வதிவிடப் பிரதிநிதியான இலங்கை பணிப்பாளர் இஸ்மாயில் ஓமரிடம் கையளித்தார். அருகில் அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா ஆகியோர் காணப்படுகின்றனர்.

## அதிவேக வீதியில் பஸ் சேவைகள் நேற்று ஆரம்பம்

கொழும்பு,மார்ச் 17
தெற்கு அதிவேக வீதியின் கடுவலை தொடக்கம் மாத்தறை வரையான பகுதியில் பஸ் போக்குவரத்து சேவை நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

இந்தச் சேவைகள் நேற்று அதி காலை 5.30 மணி தொடக்கம் ஆரம் பிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கான தலைமை அதிகாரி எம்.எம்.சந்திரசிறி தெரிவித்தார்.

இந்த அதிவேக வீதியுடனான போக்குவரத்துக்காக 30 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

## அசுத்தமான நாணயத்தாள்கள் மத்திய வங்கியிடம் ஒப்படைப்பு

இலங்கையில் பாவனைக்கு உதவாத நாணயத் தாள் மத்திய வங்கிக்கு மீள அனுப்பி வைக்கப்படவுள்ளது.

அசுத்தமான மற்றும் கிழிந்த நாணயத் தாளே இவ்வாறு மீள ஒப்படைக்கப்பட உள்ளது. எதிர் காலத்தில் சுத்தமான நாணயத் தாள்கள் மட்டும் புழக்கத்தில் விடப்படும் என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது. நாணயத் தாள்களை பயன்படுத்துவது குறித்து மக்களுக்கு விளக்கம் அளிக்கப்பட உள்ளது என்று மத்திய வங்கி கூறியுள்ளது.

அசுத்தமான நாணயத்தாள்களை வங்கியில் கொடுத்து அதற்குப் பதிலாக சுத்தமான நாணயத்தாள்களை பெற்றுக் கொள்ள முடியும் என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ச)

# அரசுடன் ஒட்டிக்கொள்ளும் கொள்கையை கொண்டுள்ளது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்.


## பொதுபல சேனா குற்றச்சாட்டு

கொழும்பு. மார்ச், 17
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எந்த அரசு ஆட்சியமைத்தாலும் ஒட்டிக்கொள்ளும் கொள்கையையே கொண்டுள்ளது என்று பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

பொது பல சேனா பௌத்த அமைப்பினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் ததாவது:-

நாட்டில் முஸ்லிம் தீவிரவாதத்தை பரப்பி கிழக்கைப் பிரிக்கும் செயற்பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் செய்து வருகின்றது.



கலகொட அத்தே ஞான சார தேரர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாட்டின் தீர்மானிக்கும் சக்தி என மார்தட்டிக் கொள்கின்றனர். எனினும் முஸ்லிம் காங்கிரஸினால் நாட்டில் அல்லது அரசில் எந்த மாற்றங்களையும் செய்ய முடியாது. அரச பணத்தில் சுகம் அனுபவித்துக் கொண்டு மக்களையும் நாட்டையும் சீரழிக்கும் செயலையே முஸ்லிம் காங்கிரஸ் செய்து வருகின்றது.

எந்த அரசு ஆட்சி அமைத்தாலும் அவர்களுடன் ஒட்டிக் கொண்டு தம்மை பெரியவர்களாகக் காட்டிக் கொள்கின்றனர்.

நாட்டில் தீவிரவாதத்தைப் பரப்பி கிழக்கில் தனி முஸ்லிம் ஆட்சியை அமைக்கும் முக்கிய செயலை ஹக்கீமே செய்து வருகின்றார்.

நாட்டில் அநாவசியமான முறையில் பள்ளிவாசல்களையும் மதத் தலங்களையும் அமைத்து முஸ்லிம் சமூகத்தை தீவிரவாத கொள்கைக்குள் மாற்றி நாட்டில் பிரிவினையைத் தூண்டும் கொள்கையிலேயே அவர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

எனவே இலங்கையில் மூவின சமூகங்கள் அமைதியாக வாழ வேண்டும் என்றால் முஸ்லிம் தீவிரவாதக் கொள்கையை கட்டுப்படுத்த வேண்டும்- என்றார். (ச-10)

# இலங்கையில் முதற் தடவையாக சிறை கைதிகளுக்கு பாடசாலை

## 21 இல் திறந்து வைப்பார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

இலங்கையில் சிறைக் கைதிகளுக்கு என்று தனியான பாடசாலை ஒன்று எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறக்கப்படவுள்ளது என்று புனர் வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தப் பாடசாலை தலைநகர் கொழும்புக்கு வெளியே ஹோமாகம பிரதேசத்தி லுள்ள வட்டரெஹெல சிறைச்சாலைக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு கூறியுள்ளது.

சிங்கள மொழி மூலமான இந்தப் பாடசாலை எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்படவுள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

குற்றச்செயல் ஒன்றினால் கைதி ஒருவரின் கல்வி இடை நடுவில் தடைப்பட்டிருந்தால், அதனை அவர் தொடர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பதே இந்தப் பாடசாலை அமைக்கப்பட்டதன் நோக்கம் என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலர் ஜி. எஸ் விதானகே கூறினார்.

இந்தப் பாடசாலையில் 8 ஆம் தரத்திலிருந்து கற்பித்தல் ஆரம்பிக்கப்படும். அத்தோடு ஜி. சீ. ஈ. சாதாரண தரம் மற்றும் உயர் தரம் வரை கற்பித்தல் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

அரச பாடசாலை போன்று தான் சிறைச்சாலை பாடசாலையும் செயற்படும். பாடவிதானம், ஆசிரியர் வளம், இலவச பாடநூல், சீருடை அனைத்தும் கல்வி அமைச்சினால் வழங்கப்படும். பாடசாலை நிர்வாகம் முழுமையாக கல்வி அமைச்சுடன் தொடர்புடையதாக இருக்கும். கைதிகளை பாடசாலை ஒழுங்கு விதிகளுக்கமைய அங்கு அனுப்புவதுதான் சிறைச்சாலை திணைக்களத்தின் பொறுப்பு என்று அவர் சுட்டிக்காட்டினார்.

சிறைச்சாலைகளிலுள்ள 16 வயது தொடக்கம் 30 வயது வரையிலான கைதிகளில் கல்வியை தொடர விரும்புவர்களிடம் விருப்பம் பெறப்பட்டு போட்டிப் பரீட்சை மூலம் தெரிவான 120 பேர் முதல் தொகுதியாக இந்தப் பாடசாலையில் அனுமதி பெறவுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

தமிழ் மூல பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்கு நோக்கம் இருந்தாலும் தகுதியானதமிழ்க் கைதிகள்போதுமானதாக இல்லை. எதிர்காலத்தில் அவ்வாறாக பாடசாலை அமையும்போது, அது வடக்கு-கிழக்கு மாகாணங்களிலே அமைக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இந்தியாவின் வெட்டிப் பேச்சு தமிழர் உரிமைகளைப் பெற்றுதரா...

இலங்கை அரசும் இந்திய அரசும் ஏற்படுத்திய ராஜீவ் காந்தி - ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தின் அடிப்படையில், கொழும்பு அரசு நடைமுறைக்கு கொண்டு வந்த அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம், முழு அளவில் செயற்படுத்தப்படாமல் அரை அவியலாகப் பேணப்படும் காலம் இது.

வடக்கு - கிழக்கு இரண்டாகப் பிரிக்கப்பட்டு விட்டது. கிழக்கில் தமிழ் மக்களை மூன்றாம் தரப் பிரஜைகளாக்குவதற்கான- சிறுபான்மையினராக்குவதற்கான - முன்னெடுப்புகளை கொழும்பு அரசு வேக வேகமாக செயற்படுத்துவது குறித்து, இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டி இருந்தோம்.

இத்தகைய நிலையில், அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை மேம்படுத்துவதற்கான வற்புறுத்தலை, சில மாதங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு பயணம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் உன்னி, அழுத்திக் கூறியதாகத் தகவல்கள் தெரிவித்தவர், இந்திய வெளிவிவகார அமைச்சர் குர்ஷித்.

இந்திய அரசின் ஆட்டத்திற்கு, இலங்கை ஆடமாட்டாது என்பதனை நிலைநிறுத்தும் போக்கில், தமிழர் தரப்பு இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்த வேண்டும் என்று இப்போது வலியுறுத்தி உள்ளார் அவர்.

கடந்த புதன்கிழமை லண்டனில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்ட குர்ஷித், அங்கு இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து ஊடகவியலாளர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே, இலங்கை அரசுடன் தமிழர் தரப்பு பேச்சு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் என்ற தகவல் வெளிப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்கள் இலங்கை அரசுடன் பேச வேண்டும். அப்போது மட்டுமே அரசியல் தீர்வு குறித்து இலங்கை அரசு மீது, இந்தியாவால் அழுத்தம் கொடுக்க முடியும் என்று புதுக்கதையைக் கட்டவிழ்த்துள்ளார் அவர்.

வெளிநாடுகளின் தலையீடின்றி பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே தீர்வு காணப்படவேண்டுமானால், இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தது போன்று, உள்நாட்டிலேயே பேச்சு நடத்தப்படவேண்டும் என்பது வாத்ஸவமே.

இதனைக் கருத்தில் கொண்டே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அரசதரப்புடன் பேச்சுகளை ஆரம்பித்தது. ஆனால் இப்போது முடக் கழுதை போன்று அது விழுந்து கிடக்கிறது. நாடாளுமன்றத் தெரிவுக் குழு என்ற ஒரு தடைக் கல்லை நட்டு நிறுத்தியுள்ளது எமது நாட்டு அரசு. அந்தத் தடைக்கல் இன்னும் அகற்றப்படவில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசு விடுத்து வந்த அழைப்பை, அது ஏற்காமல் இருந்து வந்தமையே தீர்வொன்றை அடைவதற்கான முக்கிய தடையாக உள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஜெனிவாவில் தெரிவித்துள்ளார். இது இந்தியாவை மட்டுமன்றி உலகத்தையே ஏமாற்றும் உத்தி!

சுயமரியாதையுடனான நிரந்தர அமைதி, சமத்துவம் மற்றும் நீதி ஆகியவற்றை இனங்களிடையே கட்டியெழுப்புவதற்கு பொறுப்புக் கூறலும், மீளிணக்கமும் முக்கியமானவை.

ஆனால், பேச்சுக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே தடையாக உள்ளனர் என்று அமைச்சர் பீரிஸ் குற்றம்சாட்டுவது தமிழர் தரப்புத்தான் தடையாக இருக்கிறது என்ற ஓர் எண்ணத்தைத் தோற்றுவிக்கும் மிக மோசமான முயற்சி எனலாம்.

இன்னொரு வகையில் நோக்கில், தமிழர் தரப்பு அரசாங்கத்துடன் பேச்சு நடத்த வேண்டும் என்று சல்மான் குர்ஷித் கருத்து வெளியிடுவது, ஜெனிவாவில் அமெரிக்காவால் பிரேரணை தாக்கல் செய்யப்படவுள்ள வேளையில் சர்வதேச சமூகத்தை திசை திருப்பும் முயற்சியே ஆகும்.

பேச்சுக்கள் தடைப்பட்டதற்கான காரணத்தைக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஓர் அறிக்கை மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். ஒன்றுபட்ட, நாடு பிரிக்கப்படாத தீர்வொன்றுக்கான திட்ட வரைவு ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்ததன் பின்னரே, இலங்கை அரசுக்கும் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே 2011 ஜனவரியில் இருதரப்புப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

அதன் பின்னர், அவ்வாண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் அதற்கான யோசனைகளுடன் இலங்கை அரசுக்கு தனது திட்ட வரைவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சமர்ப்பித்தது.

அடே, அப்பா! தமிழ்த் தேசியத் கூட்டமைப்பு முன்வைத்த யோசனைகளுக்கு எழுத்து மூலம் பதில் அளிப்பதாக இலங்கை அரசின் குழுவினர் வாக்களித்திருந்த போதிலும், ஐந்து மாத காலம் கடந்த பின்னரும், ஏழு பேச்சுக்கள் நடந்து முடிந்த பின்னரும், அதை அவர்கள் நிறைவேற்ற வில்லை!

அரச பிரதிநிதிகள் தாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற மறுத்த வேளையிலும், நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலமாகவே இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்ற ஒரு தடைக்கல்லைப்போட்ட போதும், இந்தியா சற்றுக்காரமாக நடந்திருப்பின், இலங்கை தனது கடும்போக்கைத் தளர்த்தும் நிலைமை உருவாகி இருக்கலாம்.

அப்பொழுது வாளாதிருந்த இந்தியா, தற்பொழுது தமிழர் தரப்பும் இலங்கை அரசும் பேச்சு நடத்தினாலேயே, அரசியல் தீர்வுக்கான அழுத்தத்தைக் கொடுக்கலாம் என்று கூறுவது வெறும் வெட்டிப் பேச்சே.

இலங்கைத் தமிழர்களுக்குச் சேர வேண்டிய அரசியல் அதிகாரங்கள் கிடைக்க வேண்டும் என்பதில் இந்தியாவுக்கு அக்கறை இருப்பின், 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாக செயற்படுத்துமாறு இந்திய அரசு இலங்கைக்குப் போதிய அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அதனைக் கூடச் செய்ய இயலாத இந்தியாவால், இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு அழுத்தம் கொடுப்பது என்பது கணக்கிலோ நம்பிக்கையிலோ எடுக்கக் கூடியது அல்லவே.

# திருத்தங்கள் மூலம் மேலும் வலுவானது தீர்மான வரைவு

## இந்திய விருப்பத்துக்கும் இடம்

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து- கோகுலன்

இலங்கைக்கு எதிரான தனது புதிய வடிவிலான தீர்மான முன் வரைவை அமெரிக்கா ஜெனிவா மனித உரிமைகள் சபை பணிமனையில் நாளையதினம் (இன்று) தாக்கல் செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

சர்வதேச விசாரணை ஒன்று இதில் இலங்கை மீதான போர்க் குற்றங்கள் தொடர்பாகக் கோரப்படும் என்பது தெளிவாகத் தெரிகின்றது. மேலும் மனித உரிமை ஆணையாளர் பணிமனைக்கு வழங்கப்படுகின்ற ஆணை தொடர்பாகவும் தீர்மான வரைவில் விளக்கப்படவிருக்கின்றது. தீர்மான வரைவின் திருத்தப்பட்ட 8 ஆவது பிரிவு பின்வருமாறு அமைந்துள்ளது.

இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்கள் மற்றும் தெளிவான பெறுபேறுகளுடனான நம்பகத் தன்மை கொண்ட தேசிய நடைமுறை யொன்று இல்லாத பட்சத்தில் சர்வதேச விசாரணை பொறி அமைப்பு ஒன்றின் தேவைகுறித்த ஆணையாளர் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மற்றும் முடிவு களை கவனத்தில் எடுத்துக் கொள்வதுடன் ஆணையாளர் பணிமனையைகேட்டுக்கொள்வதாவது:-

(அ) இலங்கையின் மனித உரிமைகளின் நிலைமைகளைத் தொடர்ந்து கண்காணிப்பு செய்க. அத்துடன் சம்பந்தப்பட்ட தேசிய செயற்பாடுகளின் முன்னேற்றத்தை பகுப்பாய்வு செய்க.

(ஆ) பாரதூரமான மீறல்கள் மற்றும் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் மற்றும் இரு தரப்பினராலும் நிகழ்த்தப்பட்டுள்ள இவை தொடர்பான குற்றச்சாட்டுக்களை விரிவாக ஆய்வு செய்வதனை முன்னின்று நடத்துவதுடன் அவ்வாறான மீறல்கள் மற்றும் தண்டனையிலிருந்து தப்புவதற்காக அவ்வாறான குற்றங்கள் இரு தரப்பினராலும் புரியப்பட்ட சூழ்நிலைகள் மற்றும் உண்மைகளை நிலைநாட்டி பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த இது தொடர்பில் சம்பந்தப்பட்ட நிபுணர்களின் உதவிகளையும் பெற்றுக் கொள்க.

(இ) மனித உரிமைகள் சபையின் 27 ஆவது அமர்வின் போது தற்கால நிலை குறித்து வாய் மூலமும் இப்போதைய தீர்மானத்தின் முன்னேற்றம் குறித்த விவாதத்தின் பின்னர் 28 ஆவது அமர்வின் போது விரிவான அறிக்கையையும் தாக்கல் செய்க.

இவ்வாறு அது அமைந்துள்ளது.

உண்மையில் தீர்மான வரைவின் புதிய வடிவத்தின் சொற் பிரயோகம் மேலும் வலுவானதாக்கப்பட்டுள்ளது. முதல் வரைவில் இரு தரப்பினராலும் இழைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் மற்றும் அவை தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும்படியே கேட்பதாக வரையப்பட்டிருந்தது. இப்போது இறுதியாக்கப்பட்டுள்ள தீர்மான வரைவில் "பாரதூரமான" (Serious) என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது.

எதுவானாலும் விசாரணை ஒன்றின் பின்னர் நடவடிக்கை ஏதும் இடம் பெறுமானால் அதனை மனித உரிமை சபையே தீர்மானிப்பதாய் இருக்கும் என்பதை இந்த செயற்பாட்டுக்குரிய பிரிவு தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. மனித உரிமை ஆணையாளர் தாம் கண்டறிந்தவற்றை சபைக்கு அறிக்கையிடுவதன் பேரில் இந்த நடவடிக்கை தொடரும் என்று தெரிகின்றது.

இப்போதுள்ள புதிய தீர்மான வடிவில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் இணை அனுசரணையாளர்கள் ஏனைய உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடன் நடத்தியுள்ள பூர்வாங்கமற்ற சந்திப்புக்களின் பயனாக ஏற்பட்டவையாகும்.

அமெரிக்காவுடன் இணை அனுசரணை நாடுகளாக மொன்டினேகுரோ, முன்னைய யூகோஸ்லேவியா குடியரசு நாடான மெஸடோனியா மற்றும் இங்கிலாந்து ஆகியவை இருக்கின்றன. இந்த நாடுகளின் ஜெனிவாவிலுள்ள பிரதிநிதிகள் ஏனைய நாடுகளின் பிரதி நிதிகளுடன் சந்திப்புக்களை நடத்தியிருந் தார்கள்.

இந்தப் புதிய தீர்மானம் செவ்வாய்க் கிழமை (நாளைய தினம்) காலையில் உறுப்பு நாடுகள் மற்றும் உறுப்பு அல்லாத நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் ஒரு கூட்டத்தில் விவாதிக் கப்படவிருக்கிறது. தீர்மானத்துக்கு இறுதி வடிவம் கொடுப்பதற்கு முன்னர் பல மாற்றங்கள் இடம் பெறக்கூடும் என்று ஜெனிவாவி லுள்ள ராஜதந்திரிகள் கருதுகிறார்கள். இந்த சந்திப்புகளில் ஆரம்ப நகல் வரைவில் பல நாடுகள் மாற்றம் கோரினார்கள். சில கேள்விகளும் எழுப்பினார்கள்.

உண்மை கண்டறியும் பொது அமைப்பு எதற்கு என்று ரஷ்ய தரப்பினர் கேட்டிருந்தார்கள். ஆரம்ப தீர்மானம் அதிகமாக மக்கள் குறித்து பேசாமல் வணக்கத் தலங்கள் பற்றியே பேசுகிறது என்றனர் ஜேர்மன் பிரதிநிதிகள். அதன் சொற்றொடர்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். சுவிட்சர்லாந்து அந்தக் கருத்தை ஆதரித்தனர். தாக்குதல் நடந்துள்ளது என்ற சொல் பிரயோகிக் கப்பட்டுள்ள இடங்களில் எல்லாம் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள என்ற சொல் இடம்பெற வேண்டும் என்று கோரிய பாகிஸ்தான் அவ்வாறே செய்து கொள்வதிலும் வெற்றி பெற்றது. இலங்கை என்ன செய்துள்ளது தொடர்பான உண்மை தகவல்களை இலங்கை அரசு சபைக்கு சமர்ப்பித்துள்ளது. அதன் படி அறிவிக்கப்பட்ட எல்லா சம்பவங்கள் குறித்தும் அவர்கள் விசாரணைகள் நடத்தியுள்ளார்கள் என்றனர் ஜேர்மன் தரப்பினர். செயற்படுத்துவதற்கான பந்தி அவசியமில்லையென்று சீனா தெரிவித்தது. இதன் பின்னணியில் உள்ள விடயங்களில் எமக்கு கவலையில்லை. ஆனால் சொற்பிரயோகமானது இலங்கையின் உள்ளக விவகாரத்தில் தலையிடுவது போல் தோன்றுகின்றது. எனவே வடக்கு மாகாண சபை தொடர்பான பிரஸ்தாபம், வடமாகாண சபை முறையாக செயற்படுவது தேவைப்படுவதாகும் என்பது போன்று பொதுவாக குறிப்பிட வேண்டும் என்று மெக்ஸிக்கோ தெரிவித்தது. வடக்கு மாகாணத்தில் வாழும் சிங்கள மக்கள் விடயத்தில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகின்றது என்ற பிரயோகத்தை முற்றாகவே நீக்குவதில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. பிரிட்டிஷ் பிரதிநிதி பேசுகையில் வடக்கு மாகாண சபை தேர்தல் நடத்தப்பட்டுள்ளது என்ற அறிவித்தலை கடந்த ஆண்டு நாங்கள் வரவேற்றிருந்தோம். தேர்தல் நடந்து விட்டதன் பின் இனி என்ன நடக்க வேண்டும் என்பதை நாம் இனி கவனிக்க வேண்டும் என்றார். வடக்கு மாகாண சபை போதுமான அளவு மூல வளங்கள் இருந்தால் சிறப்பாக செயற்படும் என்று கூற விரும்புகிறோம் என்றார்.

### வடக்கு மாகாண சபை பற்றிய குறிப்பு

இவ்வாறான கருத்துக்கள் முன் வைக்கப்பட்டதன் பின்னர் வடக்கு மாகாண சபை தொடர்பான குறிப்பு பின்வருமாறு அமைந்துள்ளது. வடக்கு மாகாண சபை சிறப்பாக செயற்படுவதை இலங்கை அரசமைப் பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைவாக இலங்கை அரசை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறது என்று மாற்றப்பட்டுள்ளது.

### இந்தியாவின் வலியுறுத்தல்

இந்தியாவின் வலியுறுத்தலின் காரணமாகத் தீர்மான வாசகத்தில் இன்னொரு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தீர்மான வாசகத்தை செயற்படுத்துவது தொடர்பாக சிறப்பு ஆணை பெற்ற செயற்பாட்டாளர்களின் தொழில்நுட்பம் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்புது தொடர்பானது இந்திய விரும்பும் திருத்தம் இந்த விடயம் இலங்கை அரசின் சம்மதத்தோடு செய்யப்படுவதாக இருக்க வேண்டும் என்பதாக இந்தியா விரும்புகின்றது. இந்தியாவின் இந்தச் செயற்பாடானது பெரும்பாலும் இலங்கை அரசை மகிழ்ச்சியுறச் செய்வதற்கானது என்று கருதப்பட்ட போதிலும் ஜெனிவாவிலுள்ள இந்திய ராஜதந்திரிகள் வேறு விதமாக வாதிக்கிறார்கள். சிறப்பு ஆணை பெற்றவர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்கான தீர்மான பிரிவை ஆதரித்து வாக்களிப்ப தானது இப்படியான அதிகாரிகளை சம்பந்தப்பட்ட நாடுகளின் சம்மதமின்றியே நியமிப்பதற்கான முன்மாதிரியை ஆதரிப்பதாக முடிந்துவிடும் என்று அவர்கள் கருதுகிறார்கள். இருந்தாலும் குறித்த நாட்டின் சம்மதமின்றி சிறப்பு ஆணையாளர்கள் செயற்படுவதை ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானிக்க முடியும். இருந்தாலும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் செயற்படுத்தப்படாமை, வடக்கு மாகாண சபைக்கும் முதல மைச்சருக்கும் போதிய வளங்கள் வழங்கி ஆட்சி புரிய அதிகாரங்கள் வழங்காமை மற்றும் அரசியல் அதிகாரப்பகிர்வு ஆகியவை இப்போது திருத்தப்பட்ட தீர்மான வரைவில் இடம்பெற்றே உள்ளன.

அந்த வகையில் இலங்கை இந்திய உறவில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் அம்சங்கள் இப்போது அதிகரித்துள்ளதாகவே கருத வேண்டும். அதனால் தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களிப்பதென்பது உறுதியாகிவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

இலங்கையிலுள்ள அமெரிக்க பிரிட்டிஷ் தூதுவர்கள் மனித உரிமை சபையின் பிரதிநிதிகளைச் சந்தித்து தீர்மானத்துக்கு ஆதரவு திரட்டுவதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளார்கள். அமெரிக்கத் தூதுவர் மிச்சல் சிசன் வாஷிங்டனில் இருந்து இப்போது ஜெனிவாவுக்கு பறந்துள்ளார். பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் ரங்கின் லண்டனில் பிரதமர் கமரூனுடன் ஆலோசனை நடத்துவதற்கு லண்டனுக்கு சென்றிருந்தார்.

ஜெனிவாவிலுள்ள தமிழ் புலம்பெயர்ந்தோர் அமைப்புகள் இன்னமும் திருப்தி கொண்டதாக இல்லை. தீர்மானம் நீர்த்துப் போகச் செய்யப்பட்டுள்ளதாக சிலர் கருதுகிறார்கள். கோபமடைந்த அமெரிக்க ராஜதந்திரி ஒருவர் இதற்கும் அதிகமாக என்னத்தை விரும்புகிறீர்கள், இலங்கை அரசு இதனை எதிர்க்கிறது. நீங்கள்தான் இதனைக் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தினீர்கள் என்று அவர்களைப் பார்த்துக் கூறினார். அதனால்தான் தற்பொழுது ஜெனிவாவிலுள்ள சுமந்திரன் எம்.பி தமிழ்த் தரப்பை தீர்மானம் பற்றிக் கடுமையாக விமர்சிப்பதை கைவிடும்படி கேட்டுக்கொண்டிருந்தார். வடமாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் புறநிலை கூட்டமொன்றில் அங்கு பேசிய போது தீர்மான வாசகம் இங்கு நடந்த இனக்கொலை தொடர்பாகவலுவாகஅமையவில்லை என்று தமிழ் மக்கள் கருதுவதாக கூறியிருந்தார். கிளிநொச்சி தர்மபுரத்தில் இளம் விதவை ஒருவர் தமது 13 வயது புதல்வியுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கும் விடயத்தையும் அவர் அங்கு கிளப்புவதற்குத் தவறவில்லை. இந்த விடயம் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்குச் சென்ற த.தே.கூ. எம்.பிக்கள் மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், மாகாண சபை உறுப்பினர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஆகியவர்கள் கிளி நொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எட்மன்ட் மகேந்திராவை சந்தித்துப் பேசினார்கள்.

ஜெனிவாவில் சுமந்திரன் எம்.பி இந்தச் சம்பவம் பற்றி எடுத்துக் கூறுகையில் , காணாமற்போனவர்கள் தொடர்பாக பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் வந்த போதும் அவரிடம் இவர்கள் காணாமற்போனவர்கள் குறித்து எடுத்துக்கூறியிருந்தார்கள். ஜெனிவாவில் அமெரிக்க தீர்மானத்தை ஆதரிக்கும்படி வன்னி மக்கள் மத்தியில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தார்கள் என்றும் அவர் விளக்கியிருந்தார்.

# சீரழிவை நோக்கி நகரும் எங்கள் தமிழர் சமூகம்



த.ரூபினி

காலம் எவ்வளவு மாறினாலும், எமது சமூகத்தை மாற்றுவதென்பது கல்லில் நார் உரிப்பதைப் போன்ற மிகக் கடினமான ஒன்றாகவே இருக்கின்றது. இந்தச் சமூகத்தை மாற்ற வேண்டிய தேவை இருந்தும் கூட அது இயலாத ஒன்றாகவே மாறிவிட்டது. படித்தவர்களும் சரி, பண்பட்ட மனிதர்களும் சரி நாமுண்டு, நம் வேலையுண்டு என்று இருந்து வருகின்றனர். முன்பிருந்த யாழ்ப்பாணம் போய் இப்போது திறந்த கலாசாரம், பண்பாடு, பழக்கவழக்கம் கொண்ட புதிய யாழ்ப்பாணம் வந்துவிட்டது. மற்றவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அது நல்ல விடயங்களாக இருந்தால்தான் நல்லது. போலியான சந்தோஷங்களும், வரட்டுக் கௌரவமும் பீடித்துள்ள எமது சமூகத்திடம் இருந்து எமது எதிர்கால சமூகம் எதைத்தான் கற்றுக்கொள்ளப் போகின்றது? இல்லை இவர்கள் எதைக் கற்றுக் கொடுக்கப் போகின்றார்கள்.?

உறவினர், அயலவர், நண்பர் என்று தெரிந்தவர்கள் கண்முன்னே வந்தாலும் சிரிப்பதா அல்லது விட்டு விடுவதா என்று யோசிப்பவர்கள் தான் இன்றுள்ளனர். தெரியாதவர்கள் போன்று இருந்தால் பிரச்சினை வராது என்று நினைப்பவர்களும் இன்று உண்டு. பக்கத்து வீடு, முன் வீடு, பின்வீடு என்று சுற்றிவரச் சுற்றம் இருந்தாலும் ஒருவர் மற்றவர் வீட்டுக்குப் போவது என்பது அரிதான விடயமாகவே மாறிவிட்டது. முன் வீட்டில் சனநடமாட்டம் அதிகம் இருந்தால் கூட என்ன நடக்கின்றது என்று அறிய விருப்பம் இல்லாதவர்களாகவே எம்மவர் இருக்கின்றனர். நமக்குள்ளேயே இருந்துவரும் சாதி வர்க்க முரண்பாடுகளையும் தாண்டி உத்தியோகம், பணம், வெளிநாடு என்ற ஆதிக்கமும் மற்றவரோடு நம்மைச் சேராது தடுக்கின்றது.

இன்றைய யாழ்ப்பாணத்தில் பலரிடம் போலியான வரட்டுக் கௌரவம் இருக்கத்தான் செய்கின்றது. இது இன்றைய சமூகத்தை உயர் வர்க்கம், தாழ்ந்த வர்க்கம் என்று இரண்டு கூறுகளாகப் பிரித்துவிட்டது. படித்த, பணக்கார, வெளிநாட்டுக்காரக் குடும்பங்கள் கீழ் மட்டங்களில் உள்ளவர்களை ஒதுக்கி வைக்கின்ற; புறக்கணிக்கின்ற நிலையே இங்கு காணப்படுகின்றது. வசதி வாய்ப்புக்கள், படிப்பு, அந்தஸ்து இல்லாதவர்கள் உயர் மட்டங்களிலிருந்து தாமாகவே விலகிப் போகின்றனர்.

தற்கால யாழ்ப்பாண சமூகத்தில் சில மூர்க்கத்தனமான ஆசைகள், பிடிவாதங்கள் மேலோங்கிக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

அதாவது:-

பலர் தம் பிள்ளைகளுக்குப் பிடிக்காவிட்டாலும் தமது இஷ்டம் போல கல்வியைத் திணிக்கின்றனர். மேலும் பிள்ளைகளில் ஒன்றையேனும் வெளிநாடு அனுப்பி வைத்து வெளிநாட்டுக்காரர் என்ற பெயர் வாங்க வேண்டும் என்ற வெறியும் ஏற்பட்டுள்ளது.

பணம், மோட்டார் சைக்கிள், நகை, கார் என்று எல்லாமே எம்மிடம் இருக்கும் போது ஏன் மற்றவர்களுடன் உறவு வைக்க வேண்டும் என்ற அகங்காரமும் இங்கு பலரிடம் காணப்படுகின்றது.

இந்த உடல், சேர்த்து வைத்த சொத்து எல்லாம் எத்தனை காலத்துக்குத்தான் அழியாமல் இருக்கும்?

நம்மூரைப் பொறுத்த வரையில் பெண் பிள்ளைகளைப் பெற்றுவிட்ட ஏழைப் பெற்றோர்கள் உண்மையிலேயே பரிதாபத்துக்கு உரியவர்கள். சீதனம் என்ற கொடுமையால் இன்னும் திருமணம் செய்து கொள்ளாத கன்னிப் பெண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆண் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்கள் தம் மகன் உள்நாடென்றாலும் சரி வெளிநாடென்றாலும் சரி வரப்போகும் மணமகளிடம் இருந்து பல லட்சம் காசு, வீடு வளவு, நகை என்று அப்படியே வாங்கி குவித்துவிட வேண்டும். அல்லது அதன் மூலம் ஊராரிடம் பெருமை சேர்த்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் அலைகின்றனர். இப்போதெல்லாம் யாழ்ப்பாணத்தில் இவை எல்லாம் மலிந்துவரும் கலாசாரமாக உருவெடுத்துவிட்டன.

ஆரம்ப காலத்தில் பண்டமாற்று பொருளாதாரத்தில் பெயர் பெற்றிருந்த யாழ்ப்பாணம் ஒழிந்து கொண்டே போகின்றது. கந்தபுராண கலாசாரம் மாறிப்போய் காசு புராணக் கலாசாரம் உருவாகிவிட்டது.

இன்று திருமணம், மரணவீடு என்ற சடங்குகளில் கூட ஆரம்பகால விதிமுறைகளையும், மரபு ரீதியான பழக்க வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் புறம் தள்ளி வைக்கின்ற புதிய சமூகம் உருவாகியுள்ளது.

முன்பிருந்த யாழ்ப்பாணம் போய் இப்போது திறந்த கலாசாரம், பண்பாடு, பழக்கவழக்கம் கொண்ட புதிய யாழ்ப்பாணம் வந்துவிட்டது. மற்றவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அது நல்ல விடயங்களாக இருந்தால்தான் நல்லது. போலியான சந்தோஷங்களும், வரட்டுக் கௌரவமும் பீடித்துள்ள எமது சமூகத்திடம் இருந்து எமது எதிர்கால சமூகம் எதைத்தான் கற்றுக்கொள்ளப் போகின்றது?

## தவக்காலச் சிந்தனை



### நோன்பில் வெளிவேடம் வேண்டாம்

"நீங்கள் நோன்பு இருக்கும் போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். நீங்கள் நோன்பு இருப்பது உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும்" (மக் 6:16:18) என்று இறைமகன் நமக்கு தெளிவுபடுத்துகின்றார். ஆனால் கிறிஸ்தவ விசுவாசிகள் சிலர் தாங்கள் வாரத்தில் ஒரு நாள் நோன்பு இருக்கின்றோம் என்று கூறி தாங்கள் நோன்பு இருப்பதை பகிரங்கப்படுத்தி தாங்கள்தான் உண்மைக் கிறிஸ்தவர்கள் என்று தங்களுக்கு தாங்களே சான்று பகருகின்றார்கள். ஆனால் இப்படித் தாங்கள் நோன்பு இருப்பதை பகிரங்கப்படுத்துவது இறைமகன் இயேசு கற்பித்தவற்றுக்கு எதிர்மாறானது என்பதை இந்த வாசகமூடாக உணர வேண்டும்.

கடவுளின் கிருபைக்காய் நோன்பு இருப்பவர்கள் சுயநலத்தையோ அல்லாது பொதுமக்களின் பாராட்டையோ எதிர்பார்க்கக்கூடாது. மாறாக கடவுளுடைய இரக்கப் பெருக்கத்துக்காக அவரது நிறைந்த அன்புக்காய் அனைத்தையும் மறந்து உணவையும் மறந்து ஆண்டவரின் வார்த்தையே உணவு அவரது சித்தமே எனது பானம், அவரது கருணையே எனது வாழ்வு என்று ஆண்டவருக்காய் காத்திருக்கும் மனம் இந்த ஏக்கத்தால் வாழும் விசுவாசிகள் மேற்கொள்வதே நோன்பாகும்.

நம் இறைமகன் இயேசு நாற்பது நாள்கள் நோன்பிருந்தார். தூய ஆவியால் அழைத்துச் செல்லப்பட்டார். மனித சந்தடியை விட்டு விலகி மாமிச உடலுக்கு ஆதாரமாயிருக்கும் உணவைத் தள்ளி வைத்து தமது பரம தந்தையின் சித்தத்தையும், விருப்பத்தையும் நாடினார். இந்தச் சம்பவம் நோன்பின் மகத்துவத்தை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

## பொறுப்பாக நடந்து கொள்வார்களா?

வாசகர் திருமுகம்

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் மல்லாவி மத்திய கல்லூரியில் இந்த ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்தும் விதத்தில் முன்னெடுக்கப்படும் அடைவு மட்ட விருத்தி முயற்சியில் பின்தங்கிய தொலைதூர கிராமப்புறத்தில் இருந்து வரும் மாணவர்கள் பலரும் பாதிப்படைகின்றனர்.

இரவு நேர வகுப்புகள் ஆசிரியர்களால் நடத்தப்படுகின்றபோது அதில் கலந்து கொள்ள கல்விளான் போன்ற பிரதேசங்களில் இருந்து வருகின்ற மாணவர்கள் பெரிதும் இடர்படுகின்றனர். மாலை வேளைகளில் யானைகள் நடமாடும் வீதியில் வகுப்புக்கு வருவதோ அல்லது இரவு திரும்பிச் செல்வதோ முடியாத விடயம். இரவு நேர வகுப்பில் கலந்து கொள்ளாத மாணவர்கள் பகல் நேர பாடசாலை வகுப்பில் கலந்து கொண்டாலும் பாடப்பரப்புத் தொடர்ச்சி இன்மையால் தாம் பாதிப்படைவதாக வேதனைப் படுகிறார்கள்.

அரசினால் முன்னெடுக்கப்படும் கிராமப்புற மாணவர்களுக்கான கல்வி வாய்ப்பு, கல்வி விருத்தி போன்ற பல செயற்பாடுகளின் அடிப்படையில் இந்த மாணவர்களுக்கான பொருத்தப்பாடான தீர்வை பாடசாலையும், வலயக் கல்விப் பணிமனையும் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

ஏழை மாணவர்களுக்கு இந்தப் பாடசாலையால் ஏற்படுத்தப்பட்ட விடுதி வசதியை விஸ்தரித்துக் கொள்ளலாம். இரவு நேர வகுப்பை காலை முதல் மாலை வரை உள்ள 12 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளலாம். சனி, ஞாயிறு வகுப்புக்களை நடத்தலாம் எனப் பெற்றோர் பலர் கருது கின்றனர். பாடசாலை, மாணவர்களுக்கானது. அவர்கள் கல்வி பெற முடியாத பாடசாலை பயனற்றதாகிவிடும். இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் தங்களது கவனத்தை திருப்பி நல்ல தீர்வைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அனைவரது கௌரவமும் பாதுகாக்கப்படும் எனப் பெற்றோரும், நலன் விரும்பிகளும் கருதுகின்றனர்.

**- அன்பன்**

## இவருக்கு இல்லையா கின்னஸ்

26.02.2014 உதயனில் அஞ்சலியாக பிரசுரிக்கப்பட்ட அமரர் திருமதி பர்வதம் சுப்பையா அவர்களுக்கு வயது 111 (நூற்றிப்பதினொன்று) (1903 - 2014) என்ற வகையில் இலங்கை மட்டுமல்ல, உலகமே உலகின் மூத்த பிரஜை எனப் பதிவு செய்ய, நாம் விண்ணப்பிக்க மிகவும் தகுதி கொண்டவர்களாக இருந்தும், முடியவில்லையே என யான் கவலை கொள்கின்றேன். அதே உதயனில் உலகின் மூத்த மனிதர் லண்டனில் ஒலிஸ் ஹெடஸ் சோமர் தனது 110 ஆவது வயதில் ஒஸ்கார் விருதுக்கும் கின்னஸ் சாதனைக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ள செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட குடும்பத்தவர்களும் உரிய அலுவலர்களும் இவரது மூப்பினை உறுதிப்படுத்துவார்களாயின், 'பர்வதம்' அம்மா வரலாற்றுப் பொக்கிஷமாகப் போற்றப்படுவார். வணங்கப்படுவார்.

**கே.எஸ்.சிவஞானராஜா,**
**கொக்குவில்.**



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக்கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தைப் புரிந்து கொள்வீர்கள்.



**இடபம்**: கடந்தகால இனிய அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். வெளியூர் பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.



**மிதுனம்**: உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பர்.



**கடகம்**: சோர்வு நீங்கி துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.



**சிங்கம்**: எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் சற்று தாமதமாகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகும்.



**கன்னி**: செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். வியாபாரத்தில் வேலையாள்களால் மறைமுக பிரச்சினைகள் வந்துப் போகும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் நிதானம் தேவைப்படும் நாள்.



**துலாம்**: உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். எங்கு சென்றாலும் நல்ல வரவேற்பு கிடைக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.



**விருச்சிகம்**: சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். நம்பிக்கைக்குரியவரை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரை தருவார்கள்.



**தனுசு**: உங்கள் பிடிவாதப்போக்கை மாற்றிக் கொள்வீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.



**மகரம்**: எளிதாக முடிய வேண்டிய விடயங்கள் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். திட்டமிடாத செலவுகளை போராடி சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.



**கும்பம்**: பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். புதிய நட்பு மலரும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். எதிலும் முன்எச்சரிக்கை தேவைப்படும் நாள்.



**மீனம்**: கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

## நாளை

**பங்குனி-04 செவ்வாய்க்கிழமை | 18.03.2014**

திதி: துதியை பி.ப.12.20 வரை
நட்சத்திரம்: அத்தம்
பி.ப.03.35 வரை

சுபநேரம்: 10.49-12.19 வரை
இராகுகாலம்:.03.19-04.49 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### அன்பு மதம்


அனுபூதியின் உச்சியை அடைவதற்கு முன் ஒருவன் குறிகளையும் சின்னங்களையும் சடங்குகளையும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருப்பதால், "ஒரு மதத்தில் பிறப்பது நல்லது; ஆனால் ஒரு மதத்தானாகச் சாவது தீது" என்று நாங்கள் இந்தியாவில் கூறுவது உண்டு. ஒரு சிறு செடியின் பாதுகாப்புக்கு அதைச் சுற்றி ஒரு வேலி வேண்டும்.

அது வளர்ந்த பிறகு அந்த வேலி மரத்துக்கு இடையூறாகவே இருக்கும்.

ஆகவே பழைய முறைகளைக் குறை கூறுவதும் கண்டிப்பதும் அவசியம் இல்லை. சமய வளர்ச்சி இருக்க வேண்டும் என்பதை நாம் மறந்து விடுகிறோம்.

முதலில் நாம் ஓர் உருவக் கடவுளை நினைக்கிறோம். அவரைப் படைப்புக் கடவுள், எல்லா ஆற்றலும் பெற்றவர். எல்லா ஞானமும் பெற்றவர் என்று பலவாறு அழைக்கிறோம். ஆனால், அன்பு தோன்றும் போது, கடவுள் அன்பு மயமாகவே ஆகிவிடுகிறார். அன்போடு தொழுபவன் கடவுள் எப்படிப்பட்டவர் என்பதைக் கருதுவதில்லை. ஏனெனில் , அவன் கடவுளிடமிருந்து எதையும் பெற விரும்புவதில்லை. "நான் பிச்சைக்காரன் அல்ல !" என்று இந்தியப் பெரியார் ஒருவர் கூறுகிறார். அவர் அஞ்சுவதும் இல்லை. கடவுளை ஒரு மனிதராகவே கருதி அன்பு செலுத்துகிறார்.

# எளிமையே பெருமை



மின்சார மோட்டார், மின்சார ஜெனரேட்டர் ஆகியவற்றின் தந்தை என்றழைக்கப் படுபவர் விஞ்ஞான மேதை மைக்கேல் ஃபாரடே.

அவர் மிக எளிமையான ஆடைகளை அணிந்து கொண்டு தான் ஆய்வுக் கூடத்துக்குச் செல்வார்.

ஒருநாள் ஆய்வுக் கூடத்தைப் பார்வையிட வந்த ஓர் உயர் அதிகாரி ஃபாரடேயைப் பார்த்து முகத்தை சுளித்தவாறே,'' யாரய்யா நீ?" என்று கேட் டார்.

ஃபரடே அடக்கமாக பதில் சொன்னார்.''நான் ஆய்வுக்கூடத்தில் வேலை செய்கிறவன்.

"அப்படியா! எவ்வளவு காலமாக இங்கே வேலை செய்கிறாய்?" என்றார் அந்த அதிகாரி.

கடந்த பல ஆண்டுகளாக நான் இங்கே வேலை செய்து வருகிறேன் என்று பதில் சொன்னார்.

"பல ஆண்டுகளாக வேலை செய்கிறேன் என்கிறாய்.. நல்ல ஆடைகளை வாங்கி அணியக்கூட உனக்கு வசதி இல்லையா? இங்கே உனக்கு சரியாக சம்பளம் கொடுப்பதில்லையா?" என்றார்.

''இல்லை,இல்லை.அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. சம்பளமெல்லாம் அதிகமாகவே கொடுக்கிறார்கள்'' என்றார் ஃபரடே.

அதைக் கேட்ட அதிகாரி சற்று ஏளனமாக, "சரி, சரி உன் பெயர் என்ன?" என்று கேட் டார்.

''என் பெயர் மைக்கேல் ஃபரடே!" என்றார்.. அதைக் கேட்ட அதிகாரி வியப்பில் விழிபிதுங்கி நின்றார்.. பரடேயிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 8 | | | | 3 | | |
| 2 | 4 | | | 1 | 3 | | | |
| | | | 4 | 5 | 9 | | 1 | |
| 4 | | 6 | 9 | | | 2 | | 1 |
| | 9 | | 1 | | 2 | | 5 | |
| 1 | | 2 | | | 8 | 4 | | 9 |
| | 2 | | 5 | 8 | 1 | | | |
| | | | 6 | 3 | | | 2 | 8 |
| | | 1 | | | | 5 | 6 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 5 | 4 | 8 | 1 | 7 | 9 | 2 |
| 7 | 4 | 2 | 3 | 9 | 6 | 5 | 1 | 8 |
| 1 | 9 | 8 | 7 | 5 | 2 | 4 | 3 | 6 |
| 2 | 7 | 9 | 6 | 3 | 5 | 8 | 4 | 1 |
| 5 | 1 | 3 | 9 | 4 | 8 | 6 | 2 | 7 |
| 8 | 6 | 4 | 2 | 1 | 7 | 3 | 5 | 9 |
| 4 | 2 | 6 | 1 | 7 | 3 | 9 | 8 | 5 |
| 9 | 8 | 1 | 5 | 6 | 4 | 2 | 7 | 3 |
| 3 | 5 | 7 | 8 | 2 | 9 | 1 | 6 | 4 |

# தியாகத்தின் உருவமே பெண்கள்



மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டும் என்ற பாரதியின் குரலுக்குச் சாட்சியாக இன்று பெண்கள் வாழ்கின்றனர். அன்று அடுப்பங்கரையில் முடங்கிய பெண் அகிலமே அதிசயிக்கும் அளவுக்கு அற்புதபடைப்பாக செயலாற்றுகின்றாள். அவளது பொறுமையுடன் கூடிய தியாகமானது கால வளர்ச்சிக்கு ஏற்ப வளர்ச்சி கண்டுள்ளது. மனித வாழ்வில் ஒரு பெண்ணின் சேவையானது குடும்பம் என்கிற மலர்க் கொத்தை வாடவிடாது உயிர்ப்படையச் செய்கிறது என்றால் மிகையாகாது. ஆணின் உடற் பசிக்கு விருந்தாகும் மருந்தான அன்று அடுக்களையில் அடங்கி படுக்கையறையில் சுவை பார்க்கப்பட்டவள் இன்று வீட்டுக்குள்ளேயும், வெளியேயும் பல பொறுப்புக்களையும் சுமைகளையும் தன் பக்கம் இழுத்துக் கொண்டு செயற்படுவது மட்டுமல்ல, கணவனை சுமைகள், பொறுப்புகளில் இருந்து தளர்த்தி ஓய்வு கொடுக்கிறாள்.

வீட்டு வேலைகளை அர்ப்பணிப்புடன் செய்யும் பெண் ஆணுக்கு நிகராக உத்தியோகம் பார்க்கிறாள். உத்தியோகம் பார்க்காத பெண்கள் வீட்டில் இருந்தவாறே தையற்கலை, அழகுக் கலை, சமையற் கலை மூலமாக பணம் சம்பாதிக்கிறார்கள். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்களிப்பை பெண்களே இன்று செய்கின்றனர். அதிகாலையில் எழுந்து பிள்ளைகளை பராமரித்து சத்துணவு வழங்கி பாடசாலைக்கு கொண்டு சென்று சேர்க்கின்றனர். பாடசாலை முடிந்ததும் மீண்டும் அழைத்து வந்து பிரத்தியேக வகுப்புகளுக்கு கொண்டு சென்று தொடர் கல்வியை வழங்குகின்றனர். இந்தப் பணியின் மூலம் அறிவு கொடுப்பவர் அப்பா என்ற சேவையின் சுமையை ஆணுக்கு இலகுவாக்குகிறாள் பெண்.

பாடசாலையில் போட்டியோ ஒரு பெற்றோர் கலந்துரையாடலோ இடம்பெற்றால் அங்கு அதிகூடியவராக தாய்க்குலமே இருப்பார்கள். பிள்ளை நோயுற்றாலும் வைத்தியசாலை கொண்டு செல்வது முதற்கொண்டு இரவு நித்திரை விழித்து பிள்ளையை பராமரிப்பது வரை தாய்மாரே.

போதை தலைக்கேறிய நிலையில் வரும் ஆண்களின் வாயினின்று புறப்படும் அசிங்கமான வார்த்தைகளுக்கும், அபரிமிதமான சித்திரவதைகளுக்கும் முகம் கொடுத்து "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்ற பெண்ணடிமைமைக் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்து தாங்கி உணவளித்து பரோபகார சேவையினை வழங்குகின்றாள்.

இவ்வாறு தியாக உணர்வோடு செயற்படும் பெண் தன்னைப் பற்றி சிறிதும் சிந்திப்பதில்லை. வேளா வேளைக்கு உணவு எடுப்பதில்லை. கணவன், பிள்ளைகள் என்ற துடிப்போடு சேவை செய்து கூடுதலான நேரங்கள் பசி கிடக்கிறாள். அல்லது மிகுதியான உணவை உண்டு நிம்மதியடைகிறாள். நோயுற்றாலும் கூட தன் நோயைப் பற்றி சிந்திக்காமல் குடும்ப வளர்ச்சிக்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுவதைக் காண முடியும். தன்னலமற்ற குடும்ப சேவையினால் அநேகமான பெண்கள் நோயினால் பீடிக்கப்படும் நிலை உருவாகின்றது. ஆண்களை விட பெண்கள் நோய்களுக்கு ஆளாகின்றனர்.

அதேவேளை குடும்ப வறுமை, கணவன், கணவனின் உறவுகளால் ஏற்படும் தாங்கமுடியாத பிரச்சினைகளால் மன நோய்களுக்கும் ஆளாகின்றனர் என்கின்ற கசப்பான உண்மையை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

இவ்வாறு கணவன் மேல் மதிப்பும் மரியாதையும் கொண்டு தன் குடும்பம் தளைக்க ஒரு பரோபகாரியாக செயற்படும் பெண் அதே குடும்பத்தில் சுயமாக வாழ முடிகிறதா? தானாக ஒரு முடிவை எடுக்க முடிகிறதா? எந்த ஒரு அடிமைக் கோட்பாடும் அவள் வாழ்வில் திணிக்கப்படுவதில்லையா? அவள் மனநிறைவோடு உள்ளுர சந்தோசப்பட்டுத்தான் குடும்பத்துக்கு சேவையாற்றுகிறாளா? என்றால் அது இல்லவே இல்லை. என்னதான் வேலை செய்தாலும் பெண் என்பவள் ஒரு சுமைதாங்கியாக இரண்டாம் பட்சமாக ஆண்களாலும் சமுதாயத்தினாலும் பார்க்கும் நிலையே இன்றும் உள்ளது. இந்த நிலை மாறுமா? மாற்ற வேண்டியவர்கள் பெண்களே. கணவனுக்கு நல்ல மனைவியாக, பிள்ளைகளுக்கு நல்ல தாயாக ஒரு பெண்ணால் வழங்கப்படும் சேவையானது "தியாகம் நிறைந்த கருணை வடிவமானது" என்பதை ஒவ்வொரு ஆண்மகனும் உணர்ந்து கொள்ள மறந்துவிடக்கூடாது. குடும்பத்தில் வன்முறை இல்லாதொழிந்தால் சமுதாயத்தில் வன்முறை என்ற சொல்லே இராது.

> மனித வாழ்வில் ஒரு பெண்ணின் சேவையானது குடும்பம் என்கிற மலர்க் கொத்தை வாடவிடாது உயிர்ப்படையச் செய்கிறது என்றால் மிகையாகாது.



உடுவிலூர் கலா

# மார்பகப் புற்றுநோய் ஆபத்தை குறைக்கும் ஆற்றல் நிலக்கடலைக்கு



நிலக்கடலை எனக் குறிப்பிடப்படும் கச்சான் கடலையை உணவில் சேர்த்துக் கொள்வதன்மூலம் பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதற்கான ஆபத்தைக் குறைத்துக்கொள்ள முடியுமென்பதை ஆகப்பிந்திய ஆய்வொன்று உறுதிப்படுத்தியுள்ளது. இளம்பிராயத்திலுள்ள பெண் பிள்ளைகள் தினமும் முறைப்படியாக நிலக்கடலையை உணவுடன் சேர்த்துக் கொள்வதால் அவர்கள் முப்பது வயதை எட்டும் போது அவர்களுக்கு மார்பகப்புற்று ஏற்படும் ஆபத்தை நூற்றுக்கும் 39 வீதமாகக் குறைத்துக் கொள்ள முடியுமென்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இவர்களுள்ளும் ஒன்பது வயதிலிருந்து 15 வயது வரையிலான பராயத்தினுள்ளோர் நிலக் கடலையை உணவாகக் கொள்வதன் மூலம் மார்பகப் புற்று ஏற்படும் சாத்தியம் குறைவடைந்து உடற்பலமும் அதிகரிப்பதற்கு காரணமாகிறது.

இந்த ஆய்வு தொடர்பாக 18 வயதிலிருந்து 30 வயது வரையிலான ஆயிரம் பேர் வரையிலான பெண் பிள்ளைகள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதோடு அவர்களுக்கு ஆறுமாத காலத்துள் வாரத்துக்கு இருதடவைகள் என்றவாறு நிலக் கடலை உணவாக வழங்கப்பட்டிருந்தது.

ஆறுமாதங்களுக்குப் பின்னர் பெறப்பட்டிருந்த தகவல்களுக்கு அமைய அவர்களுள் நூற்றுக்கு 80 வீதம் வரையிலானோரிடம் மார்பகப் புற்று ஏற்படுவதற்கான ஆபத்து குறைவடைந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த ஆய்வுகளை அடுத்து அந்த ஆய்வாளர்களினதும் மருத்துவர்களினதும் அனுமதியுடன் நிலக் கடலையைப் பயன்படுத்தி உணவாகக் கொள்ளத்தக்க புதிய வகை "பட்டர்" தயாரிக்கப்பட்டுள்ளது. "நிலக்கடலை பட்டர்" எனக் குறிப்பிடப்படும் இதை பாண் மற்றும் பிஸ்கட்டில் தடவி உணவாக்கிக் கொள்ள முடியும்.

நிலக் கடலையை விட போஞ்சி, பருப்பு, சோயா மற்றும் சோளம் போன்ற உணவுகளிலும் கூட மார்பகப்புற்று ஏற்படுவதைத் தவிர்த்துவிடும் ஆற்றல் அமைந்துள்ளது.

ஆனாலும் கூட இத்தகைய உணவுகளில் புரோட்டீன் மற்றும் காபோவைதரேற்று உள்ளடங்கியிருப்பதால் உடல் பலத்துக்கும் வளர்ச்சிக்கும் பங்களிப்பு வழங்குவதோடு மார்பகப்புற்று போன்ற நோய் நிலைப்பாட்டைத் தவிர்த்துவிடும் ஆற்றல் சாதாரணமாகவே நிலவுகிறது.

ஆனால் நிலக்கடலையில் உள்ள கொழுப்பு உடற்பலத்தை வழங்குவதற்குப் பங்களிப்புச் செய்வது போன்றே மார்பகப்புற்று ஏற்படுவதைத் தவிர்த்து விடுவதற்கு நேரடியாகவே செயற்படும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

மேலும் நிலக்கடலை மற்றும் விற்றமின் ஈ செறிந்துள்ள உணவு வகைகளைச் சேர்த்துக் கொள்வதால் ஈரல் சார்ந்த புற்றுநோய் ஏற்படுவதையும் கூட தவிர்த்துக் கொள்ள முடியுமென இதற்கு முன்னர் சீனாவில் மேற் கொள்ளப்பட்டிருந்த ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

நிலக்கடலை மற்றும் விற்றமின் ஈ செறிந்த உணவுப்பாவனையின் காரணமாக இதய நோய்கள் போன்றே முதிய வயதில் ஏற்படும் எலும்பு சம்பந்தப்பட்ட நோய்களையும் கூட குறைத்துக் கொள்ள முடியும். அதேவேளை நிலக் கடலையில் உள்ள எண்ணெய் இதய நோய்கள் தொடர்பாக அந்தளவுக்கு உகந்தது அல்ல.

*(ஆதாரம் டெய்லிமெயில்)*
*லங்காதீபவிலிருந்து சரா*

> " நிலக்கடலை மற்றும் விற்றமின் ஈ செறிந்துள்ள உணவு வகைகளைச் சேர்த்துக் கொள்வதால் ஈரல் சார்ந்த புற்றுநோய் ஏற்படுவதையும் கூட தவிர்த்துக் கொள்ள முடியுமென இதற்கு முன்னர் சீனாவில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்வுகளில் உறுதிப் படுத்தப்பட்டிருந்தது.



## புராண நாடகம்

உடுப்பிட்டி, மார்ச் 17


உடுப்பிட்டி, இமையாணன் மேற்கு ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலயத்தில் "மாலைக்கு வாதாடிய மாரியின் மைந்தன்" என்னும் புராண நாடகம் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வை அ.சிவா அப்பா தயாரித்து வழங்குகின்றார். (ஓ)

## சங்கரத்தை பத்திரகாளி தேர்

வட்டுக்கோட்டை, மார்ச் 17

சங்கரத்தை - பிட்டியம்பதி ஸ்ரீ வீரபத்திரசுவாமி சமேத ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து தேரேறி பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுப்பார்.

நாளை செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் கொடியிறக்கமும் இடம்பெறும். (ஓ)



கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

**மணவாளக்கோலத் திருவிழா**

காலம் : இன்று (17.03.2014) திங்கட்கிழமை காலை 8.00 மணி முதல் அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும், பரிவாரமூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம்பெற்று அம்பாள் எழுந்தருளி உள், வெளி வீதி உலாவந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

அடியவர்கள் அனைவரும் கலந்து அம்பாளின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மாகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

பரிபாலன சபை, கொக்குவில்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ, வணிக பீடத்தில் உள்வாரியாக மற்றும் வெளிவாரியாக பட்டம் பெற்று வெளியேறிய வெளிமாவட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும்.

வெளிமாவட்ட உள்வாரி, வெளிவாரி பழைய மாணவர்களை இதில் கலந்து கொள்ளுமாறு பீடாதிபதி கேட்டுள்ளார். (ஓ)

## ஆன்மிக உரை

அளவெட்டி, மார்ச் 17

அளவெட்டி கரவச்சை ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்று வரும் உற்சவத்தில் இன்று இரவு 7 மணியிலிருந்து 8 மணி வரை யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் 'கீதை காட்டும் பாதை' என்ற கருப்பொருளில் அருளுரை நிகழ்த்துவார். (ஓ)

## பொதுக் கூட்டம்

அச்சுவேலி, மார்ச் 17

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுச் சங்கத்தின் ஐந்தாவது வருடாந்த பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் வை.குணசேகரம் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பிரதேச செயலக கணக்காளர் திருமதி கலைச்செல்வி ரமணனும் கலந்துகொள்வார். (ஓ-11)

♦ ♦ ♦

யாழ்ப்பாணம், மார்ச் 17

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் நாளை மறு தினம் புதன்கிழமை பாடசாலை மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும். இந்த வருடத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவும், பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான விடய கலந்துரையாடலும் இடம்பெறும். (ஓ)

## விலைக்கேள்விக்கான கோருதல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

1. தவிசாளர் பிரதேச சபை பெறுகைக்குழு சார்பில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகத்திற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில்(ICTAD)கட்டடம் நிர்மாணிப்பதற்கு C5 தரத்தினை அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம்பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section IV) இலும், மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறைகொண்டுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல: 021-3202277 தொலைநகல் 021-2240327) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இந்த முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நாள்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறைகொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல: 021-3202277 தொலைநகல் 021-2240327) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 17.03.2014 முதல் 07.04.2014 வரை 9.00 மணியிருந்து 15.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 5000/-ஐ கட்டணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் 08.04.2014 ஆம் திகதியன்று 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தவிசாளர், பிரதேச சபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்** எனும் முகவரியில் இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் 08.04.2014 ஆம் திகதியன்று 14.00 மணிக்கு விலைக்கேள்விகள் திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான கேள்வி முன்னோடிக் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகத்தில் 27.03.2014 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு கேள்வியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இல. | வேலை விவரம் | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணை விவரம். | |
|---|---|---|---|---|---|
| | | | | தொகை(ரூபா) | தேவைப்படும் காலம் |
| NP/14/41/15 (1) 2 Maru.M arket/04 | மருதனார்மடம் சந்தைக் கட்டட தொகுதி நிர்மாணித்தல் கட்டம் I | 08 மாதங்கள் | C5 அல்லது அதற்கு மேல் (கட்டடங்கள்) | 450,000.00 | 03.09.2014 வரை |

தி.பிரகாஷ்,
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

## நல்லூர் பிரதேச சபை, நல்லூர் உபஅலுவலகம்
## ஆதனப்பெயர் மாற்றம்

**58, நாவலடி ஒழுங்கை, வட்டாரம் - 08**

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் - 08 நாவலடி ஒழுங்கையிலுள்ள இல. 58, எனும் ஆதனம் எமது பதிவேட்டில் நாகமணி செல்லம்மா எனும் பெயரில் காணப்படுகின்றது.

சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் சத்தியப்பிரமாண ஆணையாளருமான செ.கனகசபாபதி அவர்களால் வரையப்பட்ட 30/30.11.2012 ஆம் இலக்க உறுதி மூலம் வேந்தகோணார் வளவு எனும் பெயர் கொண்ட நிலப்பரப்பு 3½ அளவுடைய இவ் ஆதனம் தனது தாயாரான இராமலிங்கம் நாகமணி செல்லம்மா என்பவரிடமிருந்து **இலட்சுமணசாமி கைம்பெண் மகாலட்சுமி** ஆகிய தன்னை வந்தடைந்ததாக வெளிப்படுத்தல் உறுதி தயாரித்து நல்லூர் பிரதேச சபையின் ஆதனப் பதிவேட்டில் குறித்த ஆதனத்தினை தனது பெயரிற்கு மாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இலட்சுமணசாமி கைம்பெண் மகாலட்சுமி என்பவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ப.வசந்தகுமார்,
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

17.03.2014 (ரி.12710) (45.3.6)

## வேலைவாய்ப்பு

காப்புறுதியின் முன்னோடியாகிய இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனது 52ஆவது ஆண்டு நிறைவில் துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து காப்புறுதி ஆலோசகருக்கான விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

* நீங்கள் விற்பனைத் துறையில் ஆர்வமுள்ளவரா?
* பகுதிநேர வேலைவாய்ப்பினைத் தேடி நிற்பவரா?
* துடிப்பும் ஆர்வமும் உள்ளவரா?
* 18 வயதினைக் கடந்தவரா?
* குறுகிய காலத்திலேயே அதிக வருவாயை உழைப்பதில் ஆர்வமுள்ளவரா?
* ஒரு குழுவுடன் இணைந்து செயற்படுவதில் ஆர்வமுள்ளவரா?
* சிறந்த தொடர்பாடல் திறன் உடையவரா?
* ஓய்வூதியரா?

**இன்றே காப்புறுதியின் முன்னோடியும் அரச நிறுவனமுமான எம்முடன் இணையுங்கள்!**

தகைமை

G.C.E. O/L 6 பாடங்களில் சித்தி கணிதம், தமிழ் அடங்கலாக.

நீங்கள் எம்முடன் இணைந்தால்.

* அரச காப்புறுதியில் இணைவதன் மூலம் காப்புறுதி உலகில் ஓர் அங்கீகாரம்.
* வெளிநாட்டுச் சுற்றுலா
* ஆரோக்கியமான போட்டிகளும் அதற்கேற்ற பரிசில்களும்
* இலங்கையின் மாபெரும் நட்சத்திர விடுதிகளில் பயிற்சிகள் மற்றும் விருந்துபசாரங்கள்
* வாகன கடனுதவி
* போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு வருடாந்த கௌரவிப்புகள்
* தகைமை காலத்தில் சிறப்பாக செயலாற்றியவர்களுக்கு BANK ASSURANCE சந்தைப்படுத்தல் அதிகாரி போன்ற நிரந்தர வேலைவாய்ப்பு மற்றும் EPF, ETF, வைத்தியசாலைக் கொடுப்பனவுகள்.

காப்புறுதியில் முன்அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட மேலதிக சலுகைகள். இவற்றில் ஆர்வமுள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 25.03.2014 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**விற்பனை முகாமையாளர்**
**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்**
**இல. 571, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.** (45748)(7.6.3)



நூலை வெளியிட்டு வைக்கிறார் கல்வி அமைச்சர்

## 'தென்னவன்' நூல், 'சுவடுகள்' சஞ்சிகை வெளியீடுகள்

தென்மராட்சி, மார்ச் 17

தென்மராட்சி கல்வி வலயத்தினால் கடந்த டிசெம்பர் மாதம் நடத்தப்பட்ட பௌர்ணமி விழாவின் தொகுப்பு நூலான 'தென்னவன்' நூல் வெளியீடும் வலயத்தின் செயற்பாட்டைப் பிரதிபலிக்கும் 'சுவடுகள்' சஞ்சிகை வெளியீடும் அண்மையில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் சிறப்பு விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினமும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில், மகா வித்தியாலயத்துக்கு 'வேள்ட் விஷன்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட 'இன்னியம்' இசைக் கருவிகளை மாணவர்களுக்கு பயிற்றுவித்த இசைக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

**நிகழ்வில், மகா வித்தியாலயத்துக்கு வேள்ட் விஷன் நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட 'இன்னியம்' இசைக் கருவிகளை மாணவர்களுக்கு பயிற்றுவித்த இசைக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.**

நூலின் வெளியீட்டுரையை ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் ஆய்வுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் நிகழ்த்தினர். (வ-9)

# அறநெறிப் பாடசாலையில் கற்பிப்போர் சமய அறிவில் பாண்டித்தியம் அவசியம்

### இந்து கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 17


அறநெறிப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் சமய அறிவை விருத்தி செய்யும் வகையில் தர்மாசிரியர் பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும் என்று இந்து கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தர்மாசிரியருக்கான பாட நெறியானது ஐந்து பகுதிகளைக்கொண்டதாகக் காணப் படுகின்றது. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் மாவட்டங்கள் தோறும் இது நடத்தப்படவுள்ளன. அறநெறிப் பாடசாலையானது இன்று எமது சமுதாயத்துக்கு அத்தியாவசியமானது. இந்த அமைப்பின் மூலமாகவே நாம் சிறுவர்கள் மத்தியில் நற்பண்புகளைப் போதிக்க முடியும். இன்றைய இளம் தலைமுறைகள் ஒழுக்க நெறி பிறழ்ந்து காணப்படுகின்றது. அதனை மாற்றி சகல பிள்ளைகளும் ஒழுக்க சீலர்களாக மாறுவதற்கு அறநெறிகளைப் போதிக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும்"- என்றார்.

தர்மாசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சையில் தோற்றும் இரத்தினபுரி, பதுளை, மாத்தளை, நுவரெலியா, கண்டி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கான இரண்டு நாள் வதிவிடச் செயலமர்வு அண்மையில் கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம் பெற்றது. இதன்போது இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ம.சண்முகநாதன், திணைக்களக் கணக்காய்வாளர் எஸ். காண்டீபன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (வ-400)

## இடர்களை எதிர்கொள்வது தொடர்பான செயலமர்வு



செயலமர்வில் கலந்துகொண்ட மாணவர்கள்

கிளிநொச்சி, மார்ச் 17

கிளிநொச்சி விவேகானந்த நகர் வித்தியாலய மாணவர்களுக்கு இடர்களை எதிர்கொள்வது தொடர்பான செயலமர்வு வெள்ளிக்கிழமை வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரின் ஏற்பாட்டில் 'வேள்ட் விஷன்' நிறுவன அனுசரணையுடன் நடத்தப்பட்ட செயலமர்வுக்கு வித்தியாலய அதிபர் தலைமை தாங்கினார்.

செயலமர்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலக இடர் முகாமைத்துவப் பிரிவு உதவிப் பணிப்பாளர் க.சுகுணதாஸ், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலர் இ.செந்தூரன், மாவட்ட உளவள அலுவலர் தே.துஷ்யந்தன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர். (வ-9)

## குருதிப் பரிசோதனை இடம்பெறுவதில் தடங்கல்

கிளிநொச்சி, மார்ச் 17

அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் நீரிழிவு நோயாளர்களுக்கான குருதிப் பரிசோதனை இடம்பெறுவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையை நம்பி பெருமளவு நோயாளர்கள் உள்ளனர். ஆனால் நீரிழிவு நோயாளர்களுக்கு கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக குருதிப் பரிசோதனை இங்கு இடம்பெறவில்லை. இதனால் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு இவர்கள் செல்ல வேண்டியுள்ளது. (க-18)

## உவர் ஆபத்தை ஆராய்வதற்கு விவசாய அமைச்சரை அழைப்பேன்

### *ஆனைவிழுந்தானில் வடமாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, மார்ச் 17

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம் ஆகிய கிராமங்களின் உவர் ஆபத்துத் தொடர்பாக ஆராய்வதற்கு வடமாகாண விவசாய அமைச்சரை இப்பகுதிக்கு அழைத்து வருவேன் என்று தெரிவித்தார் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா.

ஆனைவிழுந்தான்குளம் மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி இடம் பெற்றது. அங்கு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; இங்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. மே மாதத்தில் இதனைத் தீர்த்து வைப்போம். பெற்றோர்கள் கல்வியில் அக்கறை காட்டும் போதுதான் மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெற முடியும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு சத்துள்ள உணவுகளை வழங்கிய பின்னர் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும்.

இனிமேல் வறட்சி காலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பிள்ளைகளின் உடல் நலத்தில் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (க-18)

## சாவகச்சேரி மருத்துவமனையில் சமய அனுஷ்டான நிகழ்வுகள்

தென்மராட்சி, மார்ச் 17

சுகாதார அமைச்சின் தேசிய சுகாதார வார இறுதிநாளான நேற்று சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சமய அனுஷ்டானங்கள் இடம் பெற்றன.

சுகாதார வார இறுதி நாள் நிகழ்வாக சமய ரீதியான நிகழ்வுகளை நடத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்து. மருத்துவமனையில் விசேட சமய வழிபாடுகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

நிகழ்வில் கலந்துகொண்ட மதகுருமார் விசேட வழிபாடுகளை நடத்தியதுடன் சமயச் சொற்பொழிவுகளை வழங்கியதுடன் மருத்துவமனை மேலும் வளர்ச்சியடைய ஆசீர்வாதங்களையும் வழங்கினர். இந்த நிகழ்வில் மருத்துவமனை மருத்துவர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் வெளிநோயாளர் பிரிவுக்கு வந்தோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (வ-9)

## கண்டாவளை கிராமத்துக்கு இ.போ.ச. பஸ்சேவை நடத்தக் கோரிக்கை

கண்டாவளை, மார்ச் 17

கண்டாவளை கிராமத்துக்கு இ.போ.ச.பஸ் சேவையை வழங்குமாறு அந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கிராமத்தில் 300 வரையான குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

பரந்தன்- புதுக்குடியிருப்பு வீதியிலுள்ள வெலிக்கண்டல் சந்தியிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் உள்ள கண்டா வளைக் கிராமத்துக்கு பஸ் சேவை இடம்பெறாமையால் அந்தக் கிராம மக்கள் போக் குவரத்துக்கு நெருக்கடியை எதிர் கொண்டுள்ளனர். (வ-18)

# சாவகச்சேரி வணிகர் மன்றத்தால் மாணவர்களுக்குக் கொடுப்பனவு

தென்மராட்சி, மார்ச் 17


சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் புலமைப்பரிசில் நிதியத் திட்டத்திலிருந்து 94 மாண வர்களுக்கு ஆயிரம் ரூபா தொடக்கம் 3 ஆயிரம் ரூபா வரை நிதிக் கொடுப்பனவும் 23 மாணவர்களுக்கு மாதாந்த கல்வி வளர்ச்சி நிதிக் கொடுப்பனவுகளும் நேற்று வழங்கப்பட்டன.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 35 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே இவ்வாறான உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் சன்றைஸ் நிறுவன ஊனமுற்றோர் நிதியத்திலிருந்து மூன்று பேருக்கும் அமரர் கு.தவராஜசிங்கம் நினைவு விதவைகள் நிதியத்திலிருந்து இருவருக்கும் உதவித் தொகைகள் வழங்கப்பட்டன. மேலும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற 3 மாணவர்களுக்கும் உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. அத்துடன் சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளராகக் கடமையாற்றிய ஓய்வு பெற்ற க.சண்முகலிங்கத்துக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் மன்றத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்க மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், பொருளாளர் இ.சுரேஸ் ஆகியோர் நினைவுப் பரிசிலை வழங்கினர்.

சங்கத்தின் சேமிப்புத் திட்டத்தில் அதிக நிதியை வைப்பிலிட்ட முதல் மூன்று வர்த்தகர்களும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வுக்கு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் சாவகச்சேரி 11 ஆவது இலகுகாலாட் படைப் பிரிவின் கட்டளைத் தளபதி கேணல் கே.கேமரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர். (வ-9)



தென்மராட்சிப் பிரதேச செயலர் மாணவர் ஒருவருக்கு உதவித் தொகை வழங்குகிறார்.

# தமிழரைத் திட்டமிட்ட பட்டினிச் சாவுக்குள் தள்ளிக் கொண்டிருக்கிறது மஹிந்த அரசு

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 17

போர் வெற்றிக் கர்வத்தால் இலங்கையிலிருந்து தொண்டு நிறுவனங்களை வெளியேற்றிக் கொண்டிருக்கும் மஹிந்த அரசு, ஆசியாவின் நோயாளி எனும் தன்னுடைய உண்மை நிலையை மூடிமறைக்க வறட்டுக் கௌரவத்துக்காக குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் தன்னிறைவற்ற நிவாரணத்தை வழங்கி விட்டு தற்போது அதையும் நிறுத்தி தமிழ் மக்களை திட்டமிட்ட பட்டினிச்சாவுக்குள் தள்ளிக் கொண்டிருப்பதாக, வடக்கு மாகாணசபை உறுப்பினர் சி.சிவமோகன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதி மக்களாலும் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டாகவே இது இருப்பதாக, சுட்டிக்காட்டியுள்ள மாகாணசபை உறுப்பினர் இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தட்டிப் பறிக்கும் அரசு

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த உணவு வழங்கும் திட்டத்தை, இடம்பெயர்ந்த லட்சக்கணக்கான எமது மக்கள் தமது சொந்த நிலங்களில் மீளக்குடியேறி, அவர்கள் சுயமாக உழைத்து தமது வாழ்வாதாரத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கு முன்னரே நிறுத்தி, நாட்டிலிருந்தே ஐ.நாவின் பல்வேறு தொண்டு நல அமைப்புகளையும் இலங்கை அரசு பலவந்தமாக வெளியேற்றி வருகின்றது.

எம்.எஸ்.எவ், யுனிசெப், யு.என்.டி.பி, உலக உணவுத் திட்டம் உள்ளிட்ட முக்கிய நிறுவனங்கள் எமது மக்களின் இடர் நெருக்கடி வாழ்வை கணிசமான அளவில் நிவர்த்திசெய்து வந்தன. இந்த நிலையில் தன்னால் எதையும் செய்ய முடியும் என்ற போர் வெற்றிக் கர்வத்தால் தொண்டு நிறுவனங்களை வெளியேற்றி வரும் மஹிந்த அரசு, ஆசியாவின் நோயாளி எனும் தன்னுடைய உண்மை நிலையை மூடிமறைக்க வறட்டுக் கௌரவத்துக்காக குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் தன்னிறை வற்ற நிவாரணத்தை வழங்கி விட்டு தற்போது அதையும் நிறுத்தி எமது மக்களை திட்டமிட்ட பட்டினிச் சாவுக்குள் தள்ளிக் கொன்று கொண்டிருக்கின்றது.

மனிதப் பேரவலம்

மஹிந்த அரசின் இத்தகைய போலி ஏமாற்று மோசடி நடவடிக்கைகளால், சர்வதேச தொண்டு நல நிறுவனங்களால் மனிதாபிமான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வந்த சுகாதாரம், உளவளம், கல்வி மேம்பாடு, போசாக்கு, சுய தொழில் வாய்ப்புகள் போன்ற நல்ல பல திட்டங்கள் கணிசமான அளவுக்குக் குறைவடைந்தும், படுமோசமாக வீழ்ச்சியடைந்தும் பெரும் மனிதப் பேரவலம் எமது மண்ணில் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எதிர்காலத்தில் நலிவுற்ற உடல் உளஆரோக்கியமற்ற ஒரு சமூகம் உருவாகப்போகும் அபாயசூழலைத் தடுத்து நிறுத்தி, எமது மக்களுக்கான ஊட்டத்தை வட மாகாணசபை ஊடாக வேனும் முன்னெடுப்பதற்கு போதிய நிதியை மத்திய அரசு வழங்காத வங்குரோத்து நிலையில், வாழ்வாதாரமின்றி தவிக்கும் இடம்பெயர்ந்து மீளக் குடியேற்றப்பட்ட மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட் நிவாரணத்தை வழங்குவதற்கு ஐ.நா நிறுவனங்களை மீள அழைக்க விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பிலும் வடக்கு மாகாண சபையின் அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எமது மக்கள் தமது தொழிலைப் பெருக்கி, தம் வாழ்வாதாரத்தை நிலை நிறுத்திக் கொள்ளும் காலம் உருவாகும் வரை, ஐக்கிய நாடுகள் சபை தனது மனிதாபிமான செயற்பாடுகளை தங்கு தடையின்றி சுதந்திரமாக மேற்கொள்ளும் சூழலுடன் கூடியதாகவே இந்த நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. (வ-5)

---

புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**கண்ணீருடன்**

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் 15.03.2014 அன்று நடைபெற்ற துயர நிகழ்வில் அகால மரணமடைந்த எமது பழைய மாணவன்

**ஜெயரட்ணம் தனுஷன் அமலன்**

அவர்களின் மறைவுக்காக வேதனையுடன் மனம் வருந்துகின்றோம். அவரை இழந்து நிற்கும் குடும்பத்தினருக்கு எமது கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது.

இவரது மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இன்று (17.03.2014) திங்கட்கிழமை துக்கம் அனுசரிக்கும் வகையில் கல்லூரி மூடப்பட்டிருக்கும்.

அதிபர் (45819) (7.6.3)

---

**இதய அஞ்சலி**

**ஜெயரட்ணம் தனுஷன் அமலன்**

நேற்றுமுன்தினம் (15.03.2014). சனிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற துர்பாக்கியமான சம்பவத்தில் அகால மரணமான எமது பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினரான **ஜெயரட்ணம் தனுஷன் அமலன்** அவர்களுக்கு எமது இதயபூர்வமான அஞ்சலியை தெரிவிப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதா பத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆன்மா இறை சன்னிதானத்தில் நித்திய இளைப்பாற்றி அடைய இறைவனை இறைஞ்சி வேண்டுகின்றோம்

பழைய மாணவர் சங்கம்

(45823) (45.6.3)

புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

---

**கண்ணீர் அஞ்சலி**

பெற்றா பார்மசியின் விற்பனைப் பிரதிநிதியாளரான

**ஜெயரட்ணம் தனுஷன் அமலன்**

என்பவரின் மரணச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைவதோடு அவரது குடும்பத்தினருக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வனிக்கா மெடிக்கல்ஸ்**

203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (45619) (7.6.3)

---

**மரண அறிவித்தல்**

**திருமதி மகேஸ்வரி நடராஜா**



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா மகேஸ்வரி நேற்று முன்தினம் (15.03.2014) சனிக்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நஞ்சனாதேவி மற்றும் வரதராஜன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சண்முகநாதன், பாமா ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, கோடீஸ்வரி, சிவலிங்கம் மற்றும் ஈஸ்வரி ஆகியோரின் சகோதரியும் மேனகா, அநு, விபுசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நஞ்சினிதேவி, நஜனி, ரவீந்திரன், பாஸ்கரன், லதா, பிரபாகரன், கருணாகரன், விஜிதரன் ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2014) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் கோயில் வீதி, கல்வியங்காடு.
தொ.பே. - 021 490 5642 (45811) (7.6.3)

தகவல் : குடும்பத்தினர்.

---

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்

மாவிட்டபுரம் சாயுடையைச் சேர்ந்த எல்லுப்



போலை சின்னத்தம்பி கடந்த 14 ஆம் திகதி மல்லாகம் நீதிமன்ற நீதிவான் எஸ். சசிதரன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், அந்தப் பிரதேசத்தின் பல சமூக பொது அமைப்புகளின் தலைவரும் வலி.வடக்கு ஓய்வூதியர் சங்கத்தின் பொருளாளரும் ஆவார். (ஒ)

---

**6ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



திருமதி
**அன்னலட்சுமி (கிளி) முருகையா**

தாய்மடி 27*03*1946
ஆண்டவன் மடி 22*03*2008

திதி: பிரதமை

ஆறாண்டுகள் ஆகியதோ அம்மா! தாயே உம்மைப் பிரிந்து
பார்க்கும் இடமெல்லாம் உங்கள் முகம் தெரிகிறதம்மா
நீங்கள் வாழ்ந்த வீட்டிலே - அம்மா
இருள் தெரிகிறதம்மா! கனவில் வரும் உங்கள் முகம்
இப்போது பார்த்து என்னால் ஆறமுடியவில்லை அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய பூதராயரைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவாலும் துயரத்தாலும் வாடும்
கணவர் - முருகையா, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
[மகள் - ஜெயராணி, பிரதேச வைத்தியசாலை அளவெட்டி.]

பன்னாலை,
தெல்லிப்பழை.

(45814)(7.6.3)

---

**14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

திருமதி
**மகேஸ்வரி பரராஜசிங்கம்**

திதி: 17.03.2014



ஆண்டுகள் பதின்நான்கு
ஆனதுவோ அம்மா
எமைப்பிரிந்து
ஆண்டவன் அடியினிலே
ஆத்மாசாந்தி பெற
வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

இ. பரராஜசிங்கம்,
82/1, செட்டிதெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம். 021 222 5623

தோற்றம் 10.09.1936
மறைவு 21.03.2000

---

**5ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 1984 | 2009 |
| 05 | 03 |
| 27 | 17 |

**இராசேந்திரம் சபேஷன்**


(முன்னாள் தொண்டு நிறுவன பணியாளர்,
கெயார் சர்வதேசம் - முல்லைத்தீவு)

திதி: அபரபக்க சப்தமி

எம் குடும்பத்தின் குல விளக்கே நிஜமாக நீங்கள் மறைந்து
ஐந்தாண்டுகள் ஆனதுவோ அம்மாவையும் ஆறுதலிற்கு
அழைத்து விட்டீர்கள் ஐயா - இன்று
நீங்கள் இருவரும் இல்லா மனை பொலிவிழந்து போனதுவோ
காலங்கள் ஓடிக் கடந்தாலும் - என்றும் நாம் உங்கள் நினைவோடு வாழ்கின்றோம்
என்றுமே நீங்கள் எம்மோடு வேண்டும் எமக்கென்றும் ஆசிகள் தந்திட வேண்டும்

நிரந்தர முகவரி: ஒலுமடு, மாங்குளம்.
தற்காலிக முகவரி: பொன்னாவரசங்குளம்,
வவுனியா.
(43212)(12.3)

சோ. இராசேந்திரம்
குடும்பத்தினர்



சிவனொளிபாதமலைக்கு புதிதாக அமைக்கப்பட்ட தங்க முலாம் பூசப்பட்ட வேலிகள் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

## சிவனொளிபாதமலைக்கு தங்கம் முலாம் பூசப்பட்ட வேலி

கொழும்பு,மார்ச் 17
சிவனொளிபாதமலையிலுள்ள இரும்பு வேலிகளை அகற்றி அதற்கு பதிலாக தங்கம் முலாம் பூசப்பட்ட வேலிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டன.
இந்த நிகழ்வு சிவனொளிபாதமலைக்கு பொறுப்பான தேரர் பெங்கமுவே தம்மதின்ன தலைமையில் நடைபெற்றது.
தங்கம் முலாம் பூசப்பட்ட வேலிகள் நல்லதண்ணி, கல்ப் பருக்ச விகாரையிலிருந்து சிவனொளிபாதமலை உச்சிக்கு யாத்திரிகர்கள் மூலமாகவும் பொலிஸார் மூலமாகவும் கொண்டு வந்து பொருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மூதூரில் இந்து ஆலயத்தின் களஞ்சிய உடைப்புக்கு கண்டனம்

## பௌத்த பிக்கு தலைமையிலான குழுவினரின் செயல் குறித்து இந்து மா மன்றம் கவலை

திருகோணமலை,மார்ச் 17
இந்து ஆலயங்களில் மீண்டும் மீண்டும் தெய்வ விக்கிரகங்கள் உடைத்து அழிக்கப்பட்டு வருவதும், பெறுமதிமிக்க பொருள்கள் கொள்ளையிடப்படுவதும் தொடர்நிகழ்வுகளாக உள்ளன.
திருகோணமலை, மூதூர் பிரதேசத்தில் கங்குவேலி கிராமத்தில் அமைந்துள்ள திருக்கரைசையம்பதி எனப்படும் அகஸ்தியர் ஸ்தாபன சிவன் ஆலயத்துக்குள் கடந்த வெள்ளிக்கிழமை பௌத்த பிக்கு தலைமையில் புகுந்த குழுவினர் ஆலய களஞ்சியசாலையை உடைத்து அங்குள்ள பெறுமதியான பொருள்களை எடுத்துச் சென்றுள்ளனர்.
இந்தச் சம்பவத்துக்கு அகில இலங்கை இந்து மா மன்றம் தனது ஆழ்ந்த கவலையையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளது
இந்தச் சம்பவம் குறித்து இந்து மா மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

> “
> சகல மதத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் இவ்வாறான சம்பவங்கள் தொடராது இருக்க உத்தரவாதம் வழங்குமாறு அரசை வலியுறுத்த வேண்டும்

இந்தச் சம்பவம் நடைபெறுவதற்கு முன்னரும் இந்த ஆலயம் உடைக்கப்பட்டு அங்கிருந்த சிவலிங்கம் சேதமாக்கப்பட்டிருந்தது.
இந்த ஆலயம் புராண பாடல் பெற்ற தலமென்பதுடன் அகத்தியர் பெருமான் வழிபட்ட ஆலயமுமாகும். கடந்த காலங்களில் இவ்வாறான அழிப்பு மற்றும் களவு கள் சம்பந்தமாக அகில இலங்கை இந்து மா மன்றம் உடனுக்குடன் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளது.
இந்தச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு செயலர், ஜனாதிபதி ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வந்தும் அவற்றின் சூத்திரதாரிகள் கைதுசெய்யப்படவில்லை; சட்டத்தின் முன் நிறுத்தப்படவும் இல்லை.
அதனால் இவ்வாறான அழிப்பு நடவடிக்கைகளை மேற் கொள்பவர்களுக்கு உந்து சக்தியாக இருக்கிறது.
இந்து ஆலயங்களில் மீண்டும் மீண்டும் தெய்வ விக்கிரகங்கள் உடைத்து அழிக்கப்பட்டு வருவதும், பெறுமதிமிக்க பொருள்கள் கொள்ளையிடப்படுவதும் தொடர்நிகழ்வுகளாக உள்ளன.
இந்த நாட்டில் சிறுபான்மையினராக இருப்பவர்களின் வணக்கத்தலங்களில் சட்டவிரோத நிகழ்வுகள் நடப்பதைத் தடுக்க அரசும், நீதிக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பான அதிகாரிகளும் தவறி விட்டனர் என்று இந்து மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இந்தச் சம்பவங்கள் குறித்து அரசோ அல்லது பொலிஸ் திணைக்களமோ இதுவரை உரிய நடவடிக்கைகள் எதனையும் எடுக்காதது கண்டிக்கத்தக்கது.
எனவே சகல மதத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் இவ்வாறான சம்பவங்கள் தொடராது இருக்க உத்தரவாதம் வழங்குமாறு அரசை வலியுறுத்த வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கொஞ்சக் கதைகள் கொஞ்சம்.......

செல்வ வேலாயுதம்

### காவு கொள்ளும் கடப்புகள்

வீதியில் வாகனங்களும் செல்ல வேண்டும், பாதசாரிகளும் கடக்க வேண்டும். இரண்டும் ஒழுங்கு முறையாக நடைபெற வேண்டியே வீதியின் குறுக்காக மஞ்சள் கோடுகள் வரையப்பட்டிருக்கின்றன. இவற்றினூடாக வீதியைக் கடக்கலாம், அப்படிக் கடக்கும்போது வரும் வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும் என வீதியைக் கடப்போரும்; போய்ச் சேர வேண்டிய இடம் மற்றும் நேரத்தில் குறியாக, இவர் கடக்குமுன் இவரைக் கடந்து விடலாம் என வாகனச் சாரதிகளும் நினைக்கின்றனர். இவ்வாறு நடந்து கொள்வதாலேயே மஞ்சள் கோட்டுக் கடவை விபத்துக்களுக்குக் காரணமெனலாம். இது பற்றிய தெளிவை இருபகுதியாருக்கும் ஏற்படுத்துவதற்குக் குறித்த கடவைகளில் பொலிஸார் சுழற்சி முறையிலாவது நின்று பழக்கப்படுத்தி உதவ வேண்டும்.
பாதுகாப்பற்ற கடவையில் ரயில் வருவதற்கு முன் கடந்துவிடலாம் எனக் கடப்பவர் திடீர் என ரயிலைக் கண்டதும், அதன் இரைச்சலைக் கேட்டதும் அதிர்ச்சியில் நிதானிக்கும் முன்னரே ரயில் இவரை மோதித் தள்ளிவிடும். சில கடவைகளில் ரயில் கண்ணுக்குத் தென்பட்டதன் பின்னரே அதன் இயந்திரச் சத்தம் கேட்பதுண்டு. வாகனங்கள் கடவைகளைத் தாண்டுகையில் தண்டவாளங்களுக்கு நடுவில் இயங்காமல் நின்று விபத்துக்கள் ஏற்படுவதுமுண்டு. அதிர்ச்சி, பயம் இரண்டும் பாதுகாப்பு உணர்வைத் தடுக்க விபரீதம் நிகழ்ந்துவிடும்.
உயிர்களைக் காவுகொள்ளும் கடப்புகள் விடயத்தில் பிறேக் என்ற ஒன்று இருப்பதையே மறந்துவிடும் வாகனங்கள் மனித உயிர்களின் மீதான அக்கறையின்மையையே வெளிப்படுத்துகின்றன. முன்னரெல்லாம் சில அரச பஸ்களில் அதன் சாரதி பிறேக்கில் கால் வைத்ததுமே அவருக்கு எதிரே சற்று உயரத்திலிருக்கும் கண்ணாடிப்பெட்டி ஒளிரும். அதில் தெய்வங்களின் படங்களும் "யாமிருக்கப் பயமேன்" என்ற வாசகமும் பயணிகளுக்குத் தெளிவாகத் தெரிய, சாரதி நிதானமாகத்தானுள்ளார் என்பது உறுதியாகும். கடவையை மோதி உடைக்கும் வரை பிறேக்கை மறந்து விடுவோரது நிதானம் பற்றி பயணிகளுக்கு எப்படி உணர்த்துவது என்பதுதான் தெரியவில்லை.

# தேர்தலையொட்டி பாதுகாப்பு இரு மடங்காக அதிகரிப்பு

## ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 17
மேல் மற்றும் தென் மாகாணங்களில் பாதுகாப்பு இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட உள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்தும் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக அடுத்த இரண்டு வாரங்களுக்கு தேர்தல் சட்ட விதிமுறைகள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.
ஏற்கெனவே பொலிஸார் கட்சி பேதமின்றி தேர்தல் சட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்தி வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.



அஜித் ரோஹண

# 7 மாகாணங்களுக்கு 86 அம்புலன்ஸ்கள்

## வழங்கியது சுகாதார அமைச்சு

கொழும்பு,மார்ச் 17
இலங்கையின் ஏழு மாகாண வைத்தியசாலைகளுக்கு நவீன முதலுதவி வசதிகளுடன் கூடிய 86 அம்புலன்ஸ் வாகனங்கள் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ளன.
வடக்கு,வடமத்திய, வடமேல், சப்பிரகமுவ, மத்திய, ஊவா, கிழக்கு மாகாண மருத்துவமனைகளுக்கே இந்த அம்புலன்ஸ் வாகனங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.
அதனடிப்படையில் வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 7 அம்புலன்ஸ் வாகனங்களும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 6 வாகனங்களும், யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 5 வாகனங்களும் மன்னார் மாவட்டத்துக்கு 3 வாகனங்களும் கையளிக்கப்பட்டுள்ளன.
வடமத்திய மாகாணத்துக்கு 9 வாகனங்களும், வடமேல் மாகாணத்துக்கு 5 வாகனங்களும், சப்ரகமுவ மாகாணத்துக்கு 11 வாகனங்களும், மத்திய மாகாணத்துக்கு 11 வாகனங்களும், கிழக்கு மாகாணத்துக்கு 13 வாகனங்களும் கையளிக்கப்பட்டுள்ளன. (ச)

# வட்டவளையில் தீ பற்றி எரிந்தது காடு



வட்டவளையில் தீ பற்றி எரியும் காடு

கொழும்பு,மார்ச் 17
மலையகப் பகுதிகளில் நிலவி வரும் கடும் வறட்சியான கால நிலையால் காடுகள் தீப்பற்றி எரிந்துள்ளன.
நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லொனக் தோட்டத்தின் எல்லையில் அமைந்திருந்த பற்றைக்காடு தீப்பற்றியதால் சுமார் மூன்று ஏக்கர் பகுதி எரிந்துள்ளதுடன் தொடர்ந்து புகை வெளிவருகின்றது.
இந்த தீ பரவலால் நீரூற்றுக்கள் பாதிக்கப்படுவதுடன் சிறு பறவைகள் மற்றும் பிராணிகள் அதிகளவில் பாதிப்பை எதிர் நோக்கும் என்று மக்கள் தெரிவித்தனர். (ச)

## கணித விஞ்ஞான செயலமர்வு

கிளிநொச்சி, மார்ச் 17

ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான கணித விஞ்ஞான செயலமர்வு இன்று தொடக்கம் மூன்று தினங்கள் முழங்காவில் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணி தொடர்க்கம் பி.ப. 2 மணிவரை நடைபெறவுள்ள செயலமர்வில் ஜெயபுரம் மகா வித்தியாலயம், நாச்சிக்குடா முஸ்லிம் வித்தியாலயம், இரணைதீவு றோ.க. வித்தியாலயம், முழங்காவில் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் சாதாரண தர மாணவர்களை கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி விஞ்ஞான வள நிலையத்தினால் இந்த செயலமர்வு நடத்தப்படுகிறது. (ஜ-55)

### மரண அறிவித்தல்

**திருமதி வேதாம்பிகை லோறன்ஸ்**



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா வேப்பங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேதாம்பிகை லோறன்ஸ் (15.03.2014) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்தியமானார்.

அன்னாரின் மரண ஆராதனை வவுனியா வேப்பங்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று (17.03.2014) திங்கட்கிழமை பி.ப. 1 மணிக்கு பூதவுடல் வேப்பங்குளம் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேப்பங்குளம், வவுனியா. தகவல்:
T.P : 077 3284943 குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

**திரேசம்மா அருளானந்தம்**



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரேசம்மா அருளானந்தம் (15.03.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சலமோன் - மரியம்மா தம்பதியரின் அன்புமகளும் பிலிப் அருளானந்தத்தின் அன்புமனைவியும் அனற்அமுதா (பிரான்ஸ்), ஜொனாலி றொபின் (பிரான்ஸ்), அருட்தந்தை யாவிஸ் (இயக்குநர் - கரித்தாஸ்), கியூடெக் - கிளிநொச்சி), அனற்ஷீபா (பிரான்ஸ்), ஜஸ்ரின் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் வின்சன் (பிரான்ஸ்), ரஞ்சினி (பிரான்ஸ்), உதயன் (பிரான்ஸ்), கோமதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமாமியும் விக்ரோறியா டெய்சி, அல்பிறட் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, ஞானம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் செ. போல் பிரதீப் பின் பெரியம்மாவும் ஹெபின், ஹொலின், ஹொட்வின், ஜசிக்கா, கிறிஸ்ரினா, கிறிஸ்ரியன், கிறிஸ்ஷாந், அன்ரனி, ஜெறமி, ஷெபானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 19.03.2014 புதன்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: அருட்தந்தை யாவிஸ் (மகன்),
இயக்குநர் கரித்தாஸ், கியூடெக் (கிளிநொச்சி)

### மரண அறிவித்தல்

**ஜெயரட்ணம் டனுஷன் அமலன்**


(Medical Representative, Pettah Pharmacy (PVT) Ltd, புனித சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவன்)



மாட்டீன் வீதி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கதிற்றல் லேன் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயரட்ணம் டனுஷன் அமலன் (15.03.2014) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயரட்ணம் - டொறின் சிறிமகள் ஆகியோரின் அன்புமகனும் ரொமி சிந்தியாவின் அன்புக்கணவரும் அக்ஷயனின் அன்புத்தந்தையும் இராசேந்திரம், உதயன் (குயின்ரஸ்), சகுந்தலா (சாந்தா) ஆகியோரின் அன்புமருமகனும் எட்வின் அகிலன், மேரிடிலானி, வினோஷன், மதிவதனன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் புஷ்பராணி, ஆனந்தரமணன், சிந்துஜன், விஜிதா, விதுன் ஷாருஜன் (யாழ். புனித சாஸ். ம.வி மாணவன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சச்சின், கஷானா, ரிஷாந் ஆகியோரின் மாமனும் டினோ, டனு ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2014) திங்கட்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்:

கதிற்றல் லேன், யாழ்ப்பாணம் குடும்பத்தினர்



கோப்புப்படம்

## குறுந்தூர பயணிகளை ஏற்றாத இ.போ.ச.பஸ்கள்

*சாவகச்சேரி நகரசபை மாதாந்தக் கூட்டத்தில் குற்றப் பிரேரணை முன்வைப்பு*

தென்மராட்சி, மார்ச் 17

தூர இடங்களுக்குச் செல்லும் தனியார் பஸ்களைப் போன்று இ.போ.சபையின் பஸ்களும் யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் வரை பஸ் தரிப்பிடங்களில் நிற்கும் பயணிகளை ஏற்றுவதில்லை.

இவ்வாறு சாவகச்சேரி நகர சபையின் கடந்த மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் த.சுதர்சனால் குற்றம்சுமத்தப்பட்டு பிரேரணை முன்வைக்கப்பட்டது.

இ.போ.சபையின் கோண்டாவில் சாலையினரால் போதிய பஸ்கள் இல்லாததால் 769 மார்க்கத்துக்கு அரைமணி நேரத்துக்கு ஒருபஸ் என்ற அடிப்படையில் சேவை நடத்தி வருகின்றனர். இந்தச் சேவை களுக்கு இடைப்பட்ட நேரத்தில் தூர இடங்களுக்குச் செல்லும் இ.போ.ச. பஸ் யாழ்ப்பாணம் தொடக்கம் கொடிகா மம் வரையிலான பஸ்தரிப் பிடங்களில் நிற்கும் அரச உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள் உட்பட பொது மக்களை ஏற்றுவதில்லை.

இதனால் அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள் உரிய நேரத்துக்குச் செல்ல முடியவில்லை என்றும் இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்ப வேண்டும் என்றும் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## இலங்கைக்கு கடத்தவிருந்த சுவாமி சிலைகள் பறிமுதல்

சென்னை, மார்ச்.17

இலங்கைக்கு கடத்தவிருந்த 22 இந்துக் கடவுளர்களின் சிலைகள் தமிழ்நாடு சீர்காழி அருகே கொள்ளிடம் சோதனைச் சாவடியில் கைப்பற்றப்பட்டுள்ளன.

தேர்தல் பறக்கும்படை அதி காரிகள் சோதனையில் ஈடுபட்டிருந்தவேளை இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

சுவாமி சிலைகள் கும்பகோணத்தில் இருந்து மகா பலிபுரம் வழியாக ஒரு காரில் இலங்கைக்கு எடுத்துச் செல்லப்படுவது தெரிய வந்தது.

உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்பட்ட விநாயகர், அம்மன், முருகன் உள்ளிட்ட சுவாமி சிலைகளை அதிகாரிகள் கைப்பற்றினர்.

இவை, ஒரு அடி முதல் இரு அடிகள் வரை இருந்தன. இவற்றின் மதிப்பு ரூ.10 லட்சம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெண்கலம், பித்தளை போன்ற வற்றாலான இந்த சிலை களை எடுத்துச் சென்றது தொடர்பாக இலங்கையைச் சேர்ந்த ஒருவரிடம் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## 'இந்து ஒளி' சிறப்பிதழ் வெளியீடு

திருகோணமலை, மார்ச்.17

பாடல்பெற்ற தலமான திருக்கோணேஸ்வரர் ஆலய உற்வசம் ஆரம்பமாவதை முன்னிட்டு, இன்று திங்கட்கிழமை ஆன்மீக இதழான 'இந்து ஒளி' சிறப்பிதழ் வெளியிடப்படவுள்ளது.

இந்தச் சிறப்பிதழை அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியிட்டு வைக்கவுள்ளது.

இந்தச் சிறப்பிதழை ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் வெளியிட்டு வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் அகில இலங்கை இந்து மாமன்றத்தலைவர் கந்தையா நீலகண்டன், பொதுச் செயலர் முத்தையா கதிர்காமநாதன் உட்பட பல சமயப் பெரியார்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

### மரண அறிவித்தல்

**திருமதி பொன்னம்மா முருகேசு**

கைதடியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்மா முருகேசு நேற்று (16.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு முருகேசு (வைத்திலிங்கம்) வின் அன்புமனைவியும் கந்தையா - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான தம்பு - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சிவபாதசுந்தரம் (சிவபாதம் - மல்லாகம்), செல்லம்மா, இராஜேஸ்வரி (கனடா) காலஞ்சென்ற மகேந்திரன் ஆகியோரின் அன்புத்தாயும் புவனேஸ்வரி (கந்தரோடை), தேவராஜா (கனடா) ஆகியோரின் மாமியும் சுரேஸ் (கனடா), றமேஸ் (கனடா), தேவகி (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் பவிசா, கோபிகா, உபநயா, கரிகாலன் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2014) திங்கட்கிழமை 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பங்களாலேன் மல்லாகம். சிவபாதம் (மகன்)

## கும்பாபிஷேகம்

தென்மாரட்சி, மார்ச் 17

பளை வேம்பொடு கேணி நவுணவெளி கண்ணகை அம்பாள் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை அடியார்கள் எண்ணெய் சாத்தும் நிகழ்வு இடம்பெறும். போரின் போது சேதமடைந்த இந்த ஆலயம் இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர் அடியார்களால் புனரமைப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-400-9)

### வீடு வாடகைக்கு

யாழ். மானிப்பாய் வீதியில், ஓட்டுமடம் சந்திக்கு அண்மையில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது

தொடர்பு :- 077 4440300

### மரண அறிவித்தல்

**சுப்பிரமணியம் குணரத்தினம்**



உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் குணரத்தினம் நேற்று (16.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - இராசம்மா (பூரணம்) தம்பதியரின் அன்புமகனும் பரமலிங்கம்-பாலாம்பிகை தம்பதியரின் அன்புமருமகனும் அம்பிகாதேவியின் அன்புக்கணவரும் திருமதி சி. தக்ஷா, ஈசானன், சத்தியா (கொறத்தொடுவை முஸ்லிம் வித்தியாலய ஆசிரியை) ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவகுமார் (ஆசிரியர் பரிதோமாவின் கல்லூரி கல்கிசை)அவர்களின் அன்புமாமனும் சுவேதா, கிருத்திகன், சர்வற்மன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2014) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மானிப்பாய் வீதி, உரும்பிராய். குடும்பத்தினர். 071 9190491

### மரண அறிவித்தல்

**செல்வி சுதாஸ் அஸ்னா**



உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி அஸ்னா நேற்று ( 16.03.2014) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சுதாஸ் ( வேல் மருந்தகம், கொடிகாமம்) மைதிலி ஆகியோரின் பாசமிகு மகளும் சுபீட்சன் (மாணவன்) யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்) அஸானா ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ் சென்றவர்களான குலராஜசிங்கம் சிவக்கொழுந்து மற்றும் சுப்பிரமணியம் சிவபாக்கிய சுசீலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிவனேஸ்வரனின் பாசமிகு மருமகளும் சுரேஸ் (ஜேர்மனி) சுபாஸ்(லண்டன்) சுதேஸ், சுபேஸ் ஆகியோரின் பெறாமகளும் சுரேகாவின் (லண்டன்) மரு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2014) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் 2 மணியளவில் நடைபெற்று ஈச்சங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
சு.சுதாஸ் (ஆசை)
உசன், மிருசுவில் வேல் மருந்தகம் - கொடிகாமம்)

### கண்ணீர் அஞ்சலி

**ஜெயரட்ணம் தனுசன் அமலன்**



கண்ணீருக்குள் நின்குடும்பம் ஆழ்ந்திருக்க
எண்ணமதில் உந்தன் இழப்பால் கதறியழ
கண்களும் இமைக்க மறந்ததையா - உந்தன்
பதுமையான பேச்சும் பதுமை நடையும்
நொடியினில் காணாது தவிக்கின்றோம்.
தொலைபேசியில் உந்தன் செய்தி வந்த கணம் முதல்
உந்தன் வாய்மொழி நின்றாலும்
மூடிய விழி மலர்ந்திட நின்றாலும் அமலனே
எங்கள் மூச்சினில் கலந்திருப்பாய்
என்றும் எங்கள் பேச்சினில் நிறைந்திருப்பாய்
வாழ் நாள் தனில் எம்மோடு வாழ்ந்திடுவாய்
நண்பனின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடமாகாண மருத்துவ பிரதிநிதி நண்பர்கள்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### குடாநாட்டு

எடுக்கப்பட்டது.

தமிழ்ப் பெண்களை மட்டும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதன் பின்னணியில் உள்ள மர்மம் என்ன என்று வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கேள்வி எழுப்பியிருந்தார் என்பதுடன் விசனமும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் சத்தம் சந்தடியின்றி இராணுவத்துக்குத் தமிழ் இளைஞர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. வரணி சிட்டிவேரம் கண் ணகை அம்பாள் ஆலயத் திற்கு அருகில் போடப்பட்ட விசேட கருமபீடத்தில் நேற்று படைக்கு தமிழ் இளைஞர்களைத் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட் டது. தமது அழைப்பை அடுத்து படையில் சேர்வதற்காகப் பல இளைஞர் யுவதிகள் தமது விவரங்களைத் தம்மிடம் பதிவு செய்து கொண்டனர் என்று விசேட கருமபீடத்திலிருந்த படையினர் தெரிவித்தனர். ஆனால், வீதியில் சென்ற இளைஞர், யுவதிகளை அழைத்து வலுக்கட்டா யமாக விவரங்களைப் பெற்று கையொப் பமும் பெறப்பட்டதாகச் சிலர் 'உதயன்' பத்திரிகையிடம் குற் றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

இதற்கிடையே, யாழ். நகரத்தின் கரையோர ஊர்களான கொழும்புத்துறை, மணியந்தோட்டம், குருநகர், பாசையூர், நாவாந்துறை ஆகியவற் றில் வீடு வீடாகச் சென்ற படையினர் இளைஞர்களைப் படையில் சேர அழைத்தனர் என்று மக்கள் தெரிவித்தனர். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதி விட்டு வீட்டில் இருக் கும் இளைஞர்களைக் குறிவைத்து, அத்தகையவர்கள் இருக்கும் வீடுகளுக்கே படை யினர் குறிப்பாகச் சென்று பரப்புரை செய்தனர் என்றும் கூறப்பட்டது.

இராணுவத்தில் இணைந் தால் அதிக சம்பளம் கிடைக்கும், உங்கள் வீட்டுக் கஷ்டங்கள் தீரும், உங்களை இரா ணுவத்தின் சிவில் விவகாரங் களைக் கவனிப்பவர்களாக நாங்கள் உருவாக்குவோம் என்று இளைஞர்களுக்குப் படையினர் ஆசை வார்த்தைகள் கூறுகின்றனர் என்றும் மக்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையே, வடக்கு மாகாண கல்வி அமைச்சும் இலங்கை இராணுவமும் இணைந்து ஒழுங்கமைத்த தனிநபர் ஆளுமை விருத்திச் செயலமர்வு கடந்த வெள்ளி, சனி இரு தினங்களும் யாழ்.நகரி லுள்ள சிவில் பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் இடம்பெற்றபோதும் மாணவர்களைப் படைகளில் சேருமாறு ஊக்கப்படுத்தும் பரப்புரைகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் செயலமர்வுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலைகளில் இருந்து இந்த ஆண்டு கல்விப் பொதுத் தராத உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இரு நாள்கள் நடந்த இந்தக் கருத்தரங்கில் இராணுவத்தினர் மட்டுமே கருத்துரைகளை வழங்கினர். செயலமர்வின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் சனிக்கிழமை, இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் இணைந்து கொள்ளலாம் என்று மாணவர்கள் ஊக்கப் படுத்தப்பட்டனர்.

இராணுவ பயிற்சிக் கல்லூரியில் இணைந்து படித்த பின்னர், வெளியிடங்களில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும், அவர்கள் விரும்பினால் இராணுவத்தில் தொடர்ந்து இருக்க லாம் என்றும் அப்போது படையினர் கூறியுள்ளனர். அத்துடன் இராணுவத்தில் நேரடியாக இணைந்து அதிகளவு வருவாயைப் பெற்றுக் கொள் ளலாம் என்றும் கவர்ச்சி காட் டியுள்ளனர் படை அதிகாரிகள்.

இந்த நிகழ்வின் முடிவில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழில், யாழ். மாவட்ட இராணுவக் கட்ட ளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுல ராஜாவும் கையெழுத்திட்டுள்ளனர். (உ-5-9)

### சட்டரீதியற்ற

தொடர்பாக சுற்றாடல் அமைச்சும், வனபரிபாலன திணைக் களமும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

குருநாகலைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு எதிராகவே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு வீதி அபிவிருத்திப் பணிகளுக்கான மண்ணைப் பெற்றுக் கொள்வதற்காகவே குறித்த காடுகள் அழிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. அதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அனுமதிப் பத்திரம் வழங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் தாம் அவ்வாறான அனுமதிப் பத்திரத்தை வழங்கவில்லை என்று வீதி அதிகார சபை மறுத்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள வனவள பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுர சத்துருசிங்க,

"இந்த விடயம் தொடர்பான முழுமையான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு அமைச்சுக் கோரியுள்ளது. எதிர்வரும் இருவாரங்களில் இது தொடர்பிலான அறிக்கைகளைக் கையளிப்போம். இதுதொடர்பாக விசாரணைகளுக்கு இரணைமடுவில் உள்ள விமானப்படையினரிடமும் உதவிகள் பெறப்பட்டுள்ளது. இந்தக் காடழிப்பு நடவடிக்கைகள் கடந்த இரு வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது." என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### மீனவர்

இரண்டாம் கட்டப் பேச்சு நடைபெறவிருக்கின்றது.

எல்லைதாண்டி மீன்பிடிப் பதே தற்போது பிரச்சினையாக உள்ளது. எனினும் எமது பிரச்சினையை இருநாட்டு அரசுகளும் அரசியல்மயப் படுத்தி விட்டன. மீனவர் பிரச் சினையில் இருநாட்டு அரசுகளும் ஒன்றிணைந்து சுமுகமான முறையில் தீர்வு காண வேண்டும். இரண்டு நாட்டு மீனவர்களது பொருளா தாரமும் பாதிக்கப்படாமல் தீர்வுஎடுக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினையில் நல்ல தொரு முடிவை எதிர்பார்த்துள்ளோம்" - என்று தெரிவித்துள்ளனர். (ற-10)

### கிளிநொச்சி

கிராஞ்சியிலும் வேரவில், வலைப்பாடு ஆகிய கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்குள்ளும் புகுந்து இராணுவத்தினர் தேடுதல் நடத்தினர். இராணுவத்தினருடன் பொலிஸாரும் சென்றிருந்தனர். எனினும் கேட்டுக்கேள்வியின்றிப் பல வீடுகளுக்குள் இராணுவத்தினர் புகுந்ததால் மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் முறுகல் நிலை எழுந்ததாகவும் கூறப்பட்டது.

அதேவேளை, முல்லைத்தீவு விசுவமடு றெட்பானா, வள்ளுவர்புரம், மூங்கிலாறு ஆகிய பகுதிகளிலும் சுற்றி வளைப்பு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏ-35 வீதியின் ஐந்து இடங்களில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சோதனைகள் மேற்கொள்ளப்படும் பல இடங்களில் பொலிஸாரோ பெண் இராணுவத்தினரோ இல்லை என்று தெரிவிக்கும் மக்கள், இராணுவத்தினர் மட்டுமே சோதனையிடுகின்றனர் அசௌகரியமாக இருப்பதாகவும் கூறுகின்றனர். அதனால் தாம் அச்சமுடனேயே பயணிக்க வேண்டியுள்ளது என்றும் மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, முல்லைத்தீவு ஆனந்தபுரம் பகுதியில் சகோதரர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். டிரக்டர் சாரதியான யோசப் கலாதரன் வயது 35,அவரது தம்பியான யோசப் சுகாகரன் (வயது-31) ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ-ற-55-18-426)

### கைதான

படுத்தப்பட்டு சிறுவர் இல்லம் ஒன்றுக்குப் பாரப்படுத்தப்படுவார் என்று கூறப்படுகின்றது.

கிளிநொச்சி தருமபுரத்தில் கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றதாகக் கூறப்படும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில், பயங்கரவாத தடுப்புப் பொலிஸார் ஒருவர் காயமடைந்ததார். குறித்த தாக்குதலுடன் தொடர்புடைய தாக்குதலாளிக்கு அடைக்கலம் கொடுத்த குற்றச்சாட்டில் ஜெயகுமாரி மற்றும் அவரது மகளான விபூசிகா இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் இருவரையும் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவானின் வீட்டில் முற்படுத்திய சமயம், ஜெயகு மாரியை பூஸாவில் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதியளித்த பதில் நீதிவான், 13 வயதான விபூசிகாவை வைத்தியப் பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்க உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் இன்றையதினம் சிறுமி விபூசிகா முற்படுத்தப்பட்டு, பாதுகாப்பான சிறுவர் இல்லம் ஒன்றுக்குப் பாரப்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப் படுகின்றது. (ற-5)

### நாளை

வுள்ளன. அத்துடன் 7 உறுப்பினர்களால் 15 தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர் அன் ரன் ஜெகநாதனால் சமர்ப்பிக் கப்பட்டுள்ள தீர்மானத்தில், முள்ளிவாய்க்கால் மீள்குடியமர்வு நடைபெறவில்லை என்பதற்காக இடைநிறுத்தி வைக்கப்பட்ட கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்குரிய தேர்தல்களை நடத்த வேண்டும்.

புதுக்குடியிருப்பு பிரதேசத் திற்குட்பட்ட பெரிய கைவேலியிலிருந்து விசுவமடு மஞ்சள் பாலம் வரையிலான பரந்த விவசாய பூமியின் மையமான உடையார் கட்டில் மக்கள் வங்கியின் பிராந்தியக் கிளையை திறக்குமாறு கோரு தல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்றொரு முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் வள்ளிபுனத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் தும்புத் தொழிற் சாலை அமைத்தல்,நன்னீர் மீன்பிடித் தொழில் அபிவிருத்திக்காக வட்டுவாகல், நந்திக் கடல் எல்லைக்குட்பட்ட பகுதியை ஆழமாக்கல்,ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட குமிழமுனை மாகவித்தியாலயம் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் ஆராயப்படுவதுடன் மீளவும் இணைக் கப்படுதல் வேண்டும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட மாகாண சபை உறுப்பினர் ஞா.குணசீலனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தில், வவுனியா மாவட்ட வைத்தியசாலையை மாகாண வைத்தியசாலையாக தரமுயர்த்துதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசாவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தில், வவுனியா மாவட்டம் வெண்கலச் செட்டிக்குளம் பிரதேசத்தில் பாவற்குளம் யுனிற்றில் அமைந்துள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்த எடுத்துள்ள முயற்சியை நிறுத்தக் கோருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட மாகாண சபை உறுப்பினர், அ.அஸ்மின் சமர்ப்பித்துள்ள தீர்மானத்தில், வடக்கில் போரின் பின்னரான சமூக சீர்கேடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொக்கிளாய் கடல் நீரேரியில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள், முறைகள் பயன்படுத்துவதை முழுவது மாக தடை செய்தல், இதனால் பாதிக்கப்படுவர்களுக்கு மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் ஏனைய மாகாணங்களில் வழங்கப்பட்ட உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரி நியமனத்தை வடக்கிலும் வழங்குதல்.

வடக்கு பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள ஆய்வுகூட உதவியாளர், நூலகருக்கான வெற்றிடத்தை நிரப்புவதற் காக 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை முடிவுகளை வெளியிடல் என்றும் கோரியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தில், பூநகரியில் உவர்நீர் தடுப்பணை அமைத்தல்.

மாகாண சபைக்குரிய கிளிநொச்சி மாவட்டச் செயலக கட்டத்தை, மாவட்டச் செயலகம் புதிய இடத்திற்குச் சென்ற பின்னர், குறித்த கட்டத்தின் பிரதான மண்டபத்தை கிளிநொச்சி மாவட்ட மத்திய நூல் நிலையத்திற்கு வழங்குதல், இரணைதீவிலிருந்து வெளியேறிய குடும்பங்களை மீளவும் குடியமர்த்தி, அவர்கள் முன்னர் செய்த தொழில்களை தடையின்றி தொடர வழி வகுத்தல், கிளிநொச்சி தொழில் நுட்ப நிறுவகத்தை மாகாணசபை பொறுப்பெடுத்தல் போன்ற தீர் மானங்களே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. (ற-5)

### சிறப்பாக

இரவு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இரு நாள்கள் நடைபெற்றது.நேற்றுமுன்தினம் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் ஆலயத்துக்கு வந்திருந்த நிலையில், நேற்றும் பெருந் தொகையான பக்தர்கள் திரு விழாவுக்கு வந்திருந்தனர்.

வருடாந்தத் திருவிழாவில் யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் கலந்துகொண்டு திருப்பலி ஒப்புக்கொடுத்ததுடன் திருச்சொரூப ஆசீர்வாதத்தையும் வழங்கினார்.

நிகழ்வில் விசேட அதிதிகளாக துணை கடற்படை அதிகாரி ஜயனத் கொழும்பகே, இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் தயாரட்ண, கரையோர பாதுகாப்புப் படை பணிப்பாளர் ரியர் அட்மிரல் விஜய குணரட்ண, வடமா காண கடற்பிரதேச தளபதி மேஜர் திஸநாயக்க, யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா, யாழ் மாவட்ட நீதிபதி ஏ.ஏ. ஆனந்த ராஜா, ஊர்கா வற்றுறை நீதிபதி எஸ்.லெனின், நெடுந்தீவு தளபதி கப்டன் காரிய பெரும, யாழ். அரச அதிபர் சு.அருமைநாயகம், இந்திய துணைத் தூதரக இணைப்பாளர் ரவீந்திரன், நெடுந்தீவு பிரதேச செயலர் ஸ்ரீ, நாடாளுமன்ற உறுப்பினர் அலன்ரீன் சில்வேஸ் திரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய துணைக் கடற்படை அதிகாரி ஜயனந்த கொழும்பகே, "மகிழ்ச்சியான ஒரு நாள் இது. 6 ஆயிரத் துக்கும் அதிகமானோர் இலங்கை மற்றும் இந்தியா வி லிருந்து திருவிழாவில் கலந்துகொண்டிருக்கின்றனர். விழாவை இனியதாக அமைப்பதென்பது சாதாரண காரியம் அல்ல. அதற்காக நான் இலங்கை பொலிஸார், இராணுவத்தினர், கடற்படையினருக்கும் இந்திய துணைத் தூதரகத்திற்கும் நன்றிகளை தெரிவிக்கின்றேன்' என்று தெரிவித்துள்ளார்.

நிகழ்வின் இறுதியில் நெடுந்தீவுக் கடற்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்திய மீனவ ரது வலைத் தொகுதியை அவர்களிடம் திருப்பிக் கைய ளிக்கும் நிகழ்வு இடம்பெற் றது. இந்திய துணைத்தூதரக உயரதிகாரிகள் மற்றும் இலங்கை இராணுவத் தளப திகள் இணைந்து இலங்கை மீனவர்களிடமிருந்து வலையைப் பெற்று இந்திய மீனவ ருக்கு வழங்கினர். இருநாட்டு மீனவரிடையே நல்லுறவைக் கட்டியெழுப்பும் விதமாக இந்த நிகழ்வு ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை திருவிழாவில் பெரியளவான திருட்டுச் சம்பவங்கள் எவையும் பதிவாக வில்லை. எனினும் இலங்கைப் பெண் ஊடகவியலாளர் ஒருவரது ஒலிப்பதிவுக் கருவி திருடப்பட்டுள்ளது.

இலங்கை ஆங்கில ஊடக பெண் ஊடகவியலாளர் ஒருவர் இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பில் நேர்காணல்களை ஒலிப் பதிவு செய்து கொண்டிருந்த போது திருடன் ஒலிப்பதிவுக் கருவியை பறித்துக்கொண்டு ஓடியுள்ளான். பொதுமக்கள் இணைந்து திருடனைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தபோதும் குறித்த பெண் ஊடகவியலாளர் பணி முடித்துப் புறப்படும் வரை குறித்த ஒலிப்பதிவுக் கருவி கண்டு பிடிக்கப்படவில்லை. (ற-10-14)

### அமலன்

பற்றிக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி நேற்றுமுன்தினம் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது. ஆட்டத்தின் நடுவில் இரு பாடசாலைகளின்பழைய மாணவரசிகர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஜெய ரட்னம் தாசன் அமலன் (வயது 23) அடித்துக் கொல் லப்பட்டார்.

அவரது இறப்புடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சுந்தரலிங்கம் சிவாகா, சிவசங்கநாதன் மதுசன், இன்பசீலன் பிருந்தா பன், ரமேஸ் கொன்ரன்கரன் ஆகியோர் தேடப்பட்டனர். நேற்று முன்தினம் இரவு அவர்கள் பொலிஸாரிடம் சரணடைந்தனர். அவர்களை மல்லாகம் நீதிவான் பஙீர் மொக மட் முன்னிலையில் பொலிஸார் நேற்று முற்படுத்தினர்.

நால்வரையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி மல்லா கம் நீதிவான் உத்தரவிட்டார். இவர்கள் தவிர மேலும் சில ரையும் இந்தக் கொலை தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் தேடிவருகின்றனர். (உ-101)

### மீள்குடியமர்வு

தின் கலந்துரையாடல் நேற்றுக் காலை, வலி.வடக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற் றது. அதில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவும் கலந்து கொண்டிருந்தார். அந்தக் கலந்துரையாடலின் போதே இந்த முடிவு எடுக் கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் இராணுவத் தளபதிக்கும், மீள்குடி யேற்றக் குழுவுக்கும் இடையில் நடந்த ஆறு சுற்றுப்பேச்சுத் தொடர்பாகத் தெளிபடுத்தப்பட்டது. கலந்துரையாடலில் கலந்து கொண்ட மக்கள், தமது சொந்தக் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதிலும், சொந்த இடத்தில் குடியமர்த் துவதற்கு இராணுவம் சம்மதித்தால் மட்டுமே அவர்களுடன் இனிப் பேச்சில் ஈடுபட வேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தனர். கலந்துரையாடலில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவும் இதேகருத்தையே வெளிப்படுத்தினார்.

இந்த விடயம் தொடர்பாக உடனடியாகப் போராட்டங்கள் முன்னெடுப்பது சாத்தியமற் றது என்றும், ஐ.நா. அமர்வுகள் முடிவுற்ற பின்னர் போராட்டம் நடத்துவது தொடர்பாக ஆராய்வது என்றும் கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது. (ற-5)

### 140 இந்திய

செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் நீதிமன்றங்களினால் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் ஊர்காவற்றுறை நீதிமன்றத் தால் விடுவிக்கப்பட்ட 116 பேரும் மன்னார் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட 24பேருமாக மொத்தம் 140பேர் இன்று இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்பட்ட மேலும் 32 இந்திய மீனவர்களின் மருத்துவப் பரிசோதனைகள் நிறை வடையாத காரணத்தால் அவர்களை இந்தியாவுக்கு அனுப்புவது தாமதித்திருப்பதாக அதிகாரி கள் கூறினர். மருத்துவ சோதனைகளின் பின்னர் நாளை மறுதினம் அவர்களும் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப் படுவர் என்று அவர்கள் கூறினர். (உ-101)

### மதகுரு

உட்படுத்தப்பட்ட பின்னர் நள்ளிரவு 12 மணியளவில் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதாக உறுதிப்படுத்தப்படுகிறது.

தருமபுரம் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களை அவதானித்து மக்களிடம் கருத்தறிய முற்பட்டவேளை, இவர்களை தாம் கைது செய்ததாகப் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் கிளிநொச்சியைச் சேர்ந்த வேறுசில பங்குத் தந்தைகளிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

சம்பவம் குறித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துடன் தொடர்புகொண்டபோது, அங்கு இரவு கடமையில் இருந்தவர்கள் தமிழ் தெரியாது என தகவல் தர மறுத்துவிட்டனர்.

இதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகரை தொடர்பு கொண்டபோதும் உடனடியாக கருத்துக்களை அவர்களிடம் இருந்து பெற முடியவில்லை என்று தெரிவித்தார்.

(ஜ-5-18)

# அன்ரனிஸ், பாடும்மீன் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்.பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் இடம்பெற்றன.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

அதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

> “ஆட்டநேர முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இரு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற்றதை அடுத்து வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக இரு அணிகளுக்கும் தலா 5 சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

அதில் இரண்டு அணியினரும் தலா மூன்று கோல்களைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதையும் சமநிலையில் முடிந்தது.

அதனால் இரண்டு அணியினருக்கு தலா ஓர் தண்டனை உதை வழங்கப்பட்டது.

அதனை பாஷையூர் சென். அன்ரனிஸ் அணியினர் கோல் ஆக்கினர். நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியின் கோல் ஆக்கத் தவறினர்.

ஆட்டநேர முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ற-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 17

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அவற்றில் இன்று திங்கட்கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் ‘வடக்கின் சூப்பர் கிங்” உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அவற்றில் இன்று திங்கட்கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் மாலை.4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ற-23)

* * *


யாழ்ப்பாணம், மார்ச் 17

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அவற்றில் இன்று திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் ‘பி’ அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நக்கீரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழக ‘பி’ அணி மோதவுள்ளது. (ற-23)

## உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம், மார்ச் 17

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.


கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நக்கீரன் விளையாட்டுக்கழகஅணியைஎதிர்த்து டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதி யது. அதில் டயமன்ஸ் , விளையாட்டுக் கழக அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதியது. அதில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நக்கீரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

அதில் பலாலி விண்மீன் விளை யாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## கபடியில் கிண்ணத்தை சுவீகரித்தன அருணோதய, நாரந்தனை அண்ணா



யாழ்ப்பாணம், மார்ச் 17

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான கபடி சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் அண்மையில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றன.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் அனலைதீவு அருணோதய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊர் காவற்றுறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் அனலைதீவு அருணோதய விளையாட்டுக் கழக அணி 21:9 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அனலைதீவு அருணோதய விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழக அணி 39:14 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவானது. (ற-23)

*பாடசாலை மட்ட உதைபந்து*

## புனித சவேரியார், சென். லூசியா மன்னார் கோட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம்,மார்ச் 17

மன்னார் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயது, 17 வயது,19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் கடந்த 6 ஆம், 7 ஆம் திகதிகளில் மன்னார் நகர சபை மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் 15 வயது, 19 வயது ஆகிய இரு பிரிவுகளிலும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி வெற்றி பெற்றது டன் 17 வயதுப்பிரிவில் பள்ளிமுனை சென்.லூசியா மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணியை எதிர்த்து பள்ளிமுனை சென். லூசியா மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணி 2:0 என்ற கோல்க் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆகியது.

17 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணியை எதிர்த்து பள்ளிமுனை சென். லூசியா மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. ஆட்ட நேர முடிவில் இரண்டு அணிகளும் ஒவ்வொரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் பள்ளிமுனை சென். லூசியா மகா வித்தியாலய அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணியை எதிர்த்து தாழ்வுப்பாடு புனித வளனார் றோ.க.த பாடசாலை அணி மோதிக் கொண்டது.

இதில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (ஐ-23)

## போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம், மார்ச் 17

மன்னார் உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களின் முதற் தர அணிகளுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை நடத்தி வருகின்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் மன்னார் பனங்கட்டுகொட்டு சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் சவற்கட்டு சில்லறி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டன.

இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற்றதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ற-23)

## கபடிப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 17

கண்டாவளை பிரதேச செயலகபிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கபடி போட்டியில் ஆடவர் பிரிவில் கல் மடுநகர் கல்மடு விளையாட்டுக் கழகம் மகளிர் பிரிவில் பரந்தன் இளைஞர்வட்டம்விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுச் சம்பியனாகின.

சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில் ஆடவர் இறுதியாட்டத்தில் கல்மடுநகர் கல்மடு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முரசுமோட்டை முரசொலி விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.

அதில் கல்மடுநகர் கல்மடு விளையாட்டுக்கழக அணி 52:43 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியானானது. தொடர்ந்து இடம் பெற்ற மகளிருக்கான இறுதியாட்டத்தில் பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கல்மடுநகர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக்கழக அணி 42:8 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ற-23)

## இறுதியாட்டத்தில் மோதுகின்றன சேந்தாங்குளம், மகாஜன இ.கழகங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 17

தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதி ஆட்டத்துக்கு சேந்தாங்குளம் இளைஞர் கழக அணியும், தெல்லிப்பழை மகாஜன இளைஞர் கழக அணியும் தகுதி பெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறு தியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற




அரையிறுதி ஆட்டத்தில் சேந்தாங்குளம் இளைஞர் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் இளைஞர்கழக அணி களமிறங்கியது.

அதில் சேந்தாங்குளம் இளைஞர்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜன இளைஞர்கழக அணியை எதிர்த்து அளவெட்டி பாரதி இளைஞர்கழக அணி மோதியது.

அதில் தெல்லிப்பழை மகாஜன இளைஞர்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ற-23)




# சாய்னா அதிர்ச்சி தோல்வி

சுவிஸ் கிராண்ட் பிரீ கோல்ட் பட்மின்ரன் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் சாய்னா நெஹ்வால் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

காலிறுதியில் முன்னாள் உலக சம்பியனும், முதல் நிலை வீராங்கனையுமான சீனாவின் யிஹான் வாங்குடன் மோதிய சாய்னா 17-21, 2-21 என்ற நேர் செற்களில் தோற்றார்.

மற்றொரு காலிறுதியில் சீனாவின் ஷிக்சியான் வாங்கை எதிர் கொண்ட இந்திய வீராங்கனை பி.வி.சிந்து 21-17, 21-15 என்ற நேர் செற்களில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய வீரர் பாரு பள்ளி காஷ்யப் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார். (து)

# தலைமுறையின் நாயகன்

தலைமுறையின் சிறந்த வீரருக்கான விருதை இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் தட்டிச் சென்றுள்ளார். பிரபல கிரிக்கெட் இணையதளம் சார்பில் 1993 முதல் 2013 வரையிலான 20 ஆண்டுகளில் சிறந்து விளங்கிய வீரருக்கான தெரிவு நடத்தப்பட்டது. டிராவிட், லட்சுமண், வக்கார் யூனிஸ், இயன் சப்பல் உள்ளிட்ட முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், வர்ணனையாளர்கள், பத்திரிகையாளர்கள் என 50 பிரபலங்கள் அடங்கிய நடுவர்கள் குழு சிறந்த வீரரை தெரிவு செய்தது. தலைமுறையின் சிறந்த வீரர் என்ற விருதுக்கு இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் தெரிவாகியுள்ளார்.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான அறிமுக டெஸ்டில் 187 ஓட்டங்கள் குவித்த இந்திய வீரர் ஷிகர் தவான், கடந்த ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரராக தேர்வானார். சிறந்த டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான விருது, ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஜோன்சனுக்கு கிடைத்தது.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான பெங்களூர் ஒருநாள் போட்டியில், இரட்டைச் சதம் அடித்த, இந்திய வீரர் ரோகித் சர்மா, சிறந்த ஒருநாள் துடுப்பாட்ட வீரருக்கான விருதை தட்டிச் சென்றார்.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான போட்டியில் 12 ஓட்டங்களுக்கு 7 இலக்குகள் வீழ்த்தி, இதே போட்டியில் 55 பந்துக்கு 76 ஓட்டங்கள் குவித்த, பாகிஸ்தானின் அப்ரிடி சிறந்த ஒருநாள் பந்துவீச்சாளருக்கான் விருதை வென்றார்.

தலைமுறையின் சிறந்த வீரர்- சச்சின்
சிறந்த டெஸ்ட் போட்டிக்கான துடுப்பாட்ட வீரர்- ஷிகர் தவான்
சிறந்த டெஸ்ட் போட்டிக்கான பந்துவீச்சாளர்- மிட்செல் ஜான்சன்
சிறந்த ஒருநாள் போட்டிக்கான துடுப்பாட்ட வீரர்- ரோகித் சர்மா
சிறந்த ஒருநாள் போட்டிக்கான பந்துவீச்சாளர்- அப்ரிடி. (து)





# இலங்கைக் கடற்கரையில் அனுஷ்காவுடன் கோஹ்லி

இந்தியாவின் முன்னணி வீரரான விராட் கோஹ்லியும், நடிகை அனுஷ்கா சர்மாவும் கடற்கரையில் குத்தாட்டம் போட்டது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான விராட் கோஹ்லியும், இந்தி நடிகை அனுஷ்கா சர்மாவும் காதலிப்பதாக தகவல்கள் வெளியானது.

இருவரும் இணைந்து ஷாம்பூ விளம்பரம் ஒன்றில் நடித்த போது தான், நெருக்கம் ஏற்பட்டதாம். இதனை தொடர்ந்து ஒன்றாகவே பல இடங்களுக்கும் சுற்றி வருகின்றனர்.

சமீபத்தில் நியூசிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா சுற்றுப் பயணத்திற்கு முன்பாக அனுஷ்காவைச் சந்தித்து விட்டுதான் கோஹ்லி புறப்பட்டார். இந்நிலையில் இருவரும் இலங்கைக் கடற்கரையில் காதல் விளையாட்டில் ஈடுபட்ட தகவல் வெளியாகி உள்ளது.

அனுஷ்கா சர்மா படப்பிடிப்புக்காக இலங்கை சென்று இருந்தார், ஆசியக் கிண்ணப் போட்டியில் விளையாடி விட்டு நாடு திரும்பியவுடன் கோஹ்லி காதலியை பார்ப்பதற்காக இலங்கை சென்றுள்ளதாகத் தெரிகிறது. படப்பிடிப்பு இல்லாத சமயத்தில் இருவரும் அங்குள்ள கடற்கரையில் ஒன்றாக இணைந்து சுற்றி திரிந்தனராம். ஆசியக் கிண்ணப் போட்டியில் இறுதிப் போட்டிக்கு கூட இந்தியா தகுதி பெறவில்லை, தோல்வி பற்றிய எந்தக் கவலையும் இல்லாமல் அனுஷ்கா சர்மாவுடன் இலங்கைக் கடற்கரையில் கும்மாளம் போட்டது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. (து)

# டெண்டுல்கரே சிறந்தவர்

விவியன் ரிச்சர்ட்டை விட டெண்டுல்கரே சிறந்தவர் என்று நியூசிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவர் மார்ட்டின் குரோவ் கூறியுள்ளார். கிரிக்கெட்டின் பிரத்யேக இன்றைய தளமான கிரிக் இன்போ சார்பில் தலைமுறையின் சிறந்த வீரராக சச்சின் டெண்டுல்கர் தேர்வு செய் யப்பட்டார்.

மும்பையில் நடந்த இந்த விருது வழங்கும் விழாவில் நியூசிலாந்து முன்னாள் அணித் தலைவர் மார்ட்டின் குரோவ் பங்கேற்றார்.

அப்போது அவர் ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில், விவியன் ரிச் சர்ட்சை விட டெண்டுல் கரே சிறந்த துடுப்பாட்ட வீரர் ஆவார்.

நான் விளையாடிய 14 ஆண்டு காலத்தில் விவியன் ரிச்சர்ட்ஸ், கிரேக் சப்பல், கவாஸ்கர் ஆகிய சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் இருந்தனர். இதில் ரிச்சர்ட்ஸ்தான் சிறந்த துடுப்பாட்ட வீரர் ஆவார்.

மேலும் எனது ஓய்வுக்கு பிறகு அவரை விட டெண்டுல்கரே சிறந்தவராக திகழ்கிறார். கால்களை வைத்து பந்தை கணித்து விளையாடுவதில் அவர் சிறந்தவராக உள்ளார். அதற்குரிய திறமை அவரிடம் அதிகமாக உள்ளது. பிரட்மன் விளையாடும் போது பயன்படுத்தும் உத்தியை டெண்டுல்கர் பயன்படுத்துகிறார்.

20/20 உலகக் கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்ற அதிகமான வாய்ப்பு இருப்பதாக கருதுகிறேன் என்று கூறியுள்ளார். (து)



# வேண்டாம் பொறுப்பு

இந்தியக் கிரிக்கெட் அணிக்கு முன்னாள் அணித்தலைவரான ராகுல் டிராவிட்டை பயிற்சியாளராக நியமிக்கலாம் என சுனில் கவாஸ்கர் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்கா மற்றும் நியூசிலாந்து தொடரில் மோசமான தோல்வியை சந்தித்த இந்தியக் கிரிக்கெட் அணி, ஆசிய கிண்ணப்போட்டியிலும்இறுதிச்சுற்றுக்கு முன்னேறாமல் வெளியேறியது.

இந்த நிலையில் 65 வயதான இந்தியக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் டங்கன் பிளட்சரை மாற்ற இது சரியான தருணம் என்றும், டிராவிட்டைப் பயிற்சியாளராக நியமிக்கலாம் எனவும் இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் சுனிஸ் கவாஸ்கர் கருத்து தெரிவித்திருந்தார்.


இது குறித்து மும்பையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட டிராவிட் கூறுகையில், பயிற்சியாளர் பணியை செய்வதற்கு நான் தகுதியானவர் என்று கவாஸ்கர் கூறியது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால் பயிற்சியாளர் பொறுப்புக்கு நிறைய நேரம் ஒதுக்க வேண்டும்.

ஆண்டுக்கு ஏறக்குறைய 11 மாதங்கள் பணியாற்ற வேண்டி இருக்கும், நான் இப்போது தான் சர்வதேசக் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றிருக்கிறேன்.

இப்போது எனக்கு நேரம் இல்லை என்பதால், கவாஸ்கரின் யோசனையை மறுக்கத்தான் செய்ய வேண்டி இருக்கிறது என்று தெரிவித்துள்ளார். இதற்கிடையே, இந்திய அணியின் பயிற்சியாளர் டங்கன் பிளட்சரை நீக்கும் எண்ணம் இல்லை என்று கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (து)

17 MAR 2014

# பங்களாதேஷ் இலகு வெற்றி


அனமுல் ஹக்யு

5ஆவது 20/20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் பங்களாதேஷில் நேற்று தொடங்கியது. முதல் போட்டி ஏ' பிரிவில் பங்களாதேஷ்– ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையே மிர்பூரில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் முதலில் பந்து வீச முடிவு செய்தது.

இதனையடுத்து களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணியின் தொடக்க வீரர்கள், வந்த வேகத்திலேயே பெவிலியன் திரும்பினர். அடுத்தடுத்து வந்த துடுப்பாட்ட வீரர்களும் பங்களாதேஷ் வீரர்களின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் ஒற்றை இலக்கு ஓட்டங்களில் வெளியேறினர். இதனால் ஆப்கானிஸ்தான் 72 (11.1பந்துப்பரிமாற்றங்கள்) ஓட்டங்களிற்குள் சுருண்டது. அந்த அணியில் அதிகபட்சமாக குல்படின் நயிப் 21 ஓட்டங்கள் எடுத்தார்.

பங்களாதேஷ் அணியில் சிறப்பாக பந்து வீசிய சகிப் அல் ஹசன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பின்னர் களமிறங்கிய பங்களாதேஷ் 1 இலக்கை மட்டும் இழந்து 78 (12பந்துப்பரிமாற்றங்கள்) ஓட்டங்கள் எடுத்து எளிதாக வெற்றி பெற்றது. அனமுல் ஹக்யு அதிகபட்சமாக 44 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஆட்ட நாயகனாக 3 இலக்குகளைக் கைப்பற்றிய சகிப் அல் ஹசன் தேர்வு செய்யப்பட்டார்.

(400)



பங்களாதேஷ் வீரர்கள்


குமார் சங்ககார

# சங்ககார ஓய்வு

20/20 உலகக்கிண்ணப் போட்டிக்கு பின் 20/20 ஆட்டத்தில் இருந்து ஓய்வு பெறுவதாக இலங்கை வீரர் குமார் சங்ககார அறிவித்துள்ளார். கொழும்பில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய சங்ககார இந்த ஓய்வு அறிவிப்பை வெளியிட்டார். 36 வயதான இவர் இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்குவதற்காக இந்த ஓய்வு முடிவு எடுத்திருப்பதாக அறிவித்தார். இதுவரை 50, 20/20 போட்டிகளில் விளையாடியுள்ள இடது கை துடுப்பாட்டக்காரரான சங்ககார 1,311 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் 7அரைசதங்களும் அடங்கும்.

(400)


சானியா, காரா பிளாக்

# சானியமிர்சா இணை இறுதியாட்டத்தில் தோல்வி

பரிபாஸ் ஓபன் ரென்னிஸ் தொடரின்இறுதியாட்டத்தில் தோல்வியடைந்த, இந்தியாவின் சானியா மிர்சா, ஜிம்பாப்வேயின் காரா பிளாக் ஜோடி 2ஆவது இடம் பிடித்தது.

அமெரிக்காவில் உள்ள இந்தியன் வெல்ஸ் நகரில், பரிபாஸ் ஓபன் ரென்னிஸ் தொடர் நடந்தது. இதன் பெண்கள் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் , சானியா, காரா பிளாக் ஜோடி, சீன தைபேயின் சூ வெய், சீனாவின் ஷாய் பெங் ஜோடியை சந்தித்தது. டை-பிரேக்கர்' வரை சென்ற முதல் செற்றை 6-7 என இழந்த சானியா ஜோடி, இரண்டாவது செற்றையும் 2-6 என கோட்டைவிட்டது. முடிவில், சானியா, காரா பிளாக் ஜோடி 6-7, 2-6 என்ற நேர் செட் கணக்கில் தோல்வியடைந்து, இரண்டாவது இடம் பிடித்து ஆறுதல் அடைந்தது.

(400)

# ஐ.சி.சி தரப்படுத்தலில் இந்திய வீரர்கள் முன்னணியில்

ஐ.சி.சி.20/20 போட்டி துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசை பட்டியலில், இந்தியாவின் விராட் கோஹ்லி 4ஆவது இடத்தில் உள்ளார். ஆஸ்திரேலியாவின் ஆரோன் பின்ச் முதலிடத்துக்கு முன்னேறி னார்.


சர்வதேச 20/20 போட்டியில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை, சர்வதேச கிரிக்கெட்சபை துபாயில் நேற்று முன்தினம் வெளியிட்டது. துடுப்பாட்ட வீரர்களுக்கான , தரவரிசைப் பட்டியலில்,இந்தியாவின் விராட் கோஹ்லி' 4ஆவது இடத்தையும், சுரேஷ் ரெய்னா 5ஆவது இடத்தையும் யுவராஜ் சிங் 6 ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட 20/20 தொடரில் சிறப்பாக செயற்பட்ட ஆஸ்திரேலியாவின் ஆரோன் பின்ச், 3ஆவது இடத்தில் இருந்து முதலிடத்துக்கு முன்னேறினார். இதனையடுத்து நியூசிலாந்தின் பிரண்டன் மெக்கலம் 2ஆவது, இங்கிலாந்தின் அலெக்ஸ் ஹேல்ஸ் 3ஆவது இடம் பிடித்தனர்.

சுழல் ஆதிக்கம்:பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் முதல் 10வ்விற்குள் ஒரு இந்திய பந்துவீச்சாளர் கூட இடம் பெறவில்லை. இந்தியா சார்பில் அஷ்வின் 22 ஆவது, ஹர்பஜன் சிங் 28ஆவது இடத்தில் உள்ளனர். இங்கிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட 20/20 தொடரில் சுழலில்' அசத்திய மேற்கிந்தியாவின் சாமுவேல் பத்ரி 13 இடங்கள் முன்னேறி, 2ஆவது இடத்தை கைப்பற்றினார். மேற்கிந்தியாவின் முதலிடத்தில் மற்றொரு சுழற்பந்துவீச்சாளர் சுனில் நரைன் உள்ளார். மூன்றாவது இடத்தில் பாகிஸ்தானின் சயீத் அஜ்மல் உள்ளார். பந்து வீச்சாளர்களுக்கான பட்டியலில், 9 சுழற்பந்துவீச்சாளர்கள் இடம் பெற்றுள்ளனர். ஒன்பதாவது இடத்தில் உள்ள இலங்கையின் நுவன் குலசேகரா மட்டும் வேகப்பந்துவீச்சாளர்.

யுவராஜ்: சகல துறை ஆட்டக்காரர்'களுக்கானபட்டியலில் இந்தியாவின் யுவராஜ் சிங் 3ஆவது இடத்தில் உள்ளார். முதலிரண்டு இடங்களில் பாகிஸ்தானின் முகமது ஹபீஸ், ஆஸ்திரேலியாவின் ஷேன் வாட்சன் உள்ளனர்.

அணிகளுக்கான தரவரிசை), இந்திய அணி 123 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. முதலிடத்தில் இலங்கை அணி (129 புள்ளி) உள்ளது. மூன்றாவது இடத்தை பாகிஸ்தான் (121) அணி கைப்பற்றியது. அடுத்த எட்டு இடங்களில் தென்னாபிரிக்கா 120, ஆஸ்திரேலியா (112), மேற்கிந்தியத்தீவுகள் (112), நியூசிலாந்து (108), இங்கிலாந்து (104), அயர்லாந்து (94), பங்களாதேஷ் (70), ஆப்கானிஸ்தான் (70) அணிகள் உள்ளன. பங்களாதேஷில் நடைபெறும் 20-20' உலகக் கிண்ணத் தொடருக்கு பின், இப்பட்டியலில் மாற்றம் வரலாம். (400)


கோஹ்லி


யுவராஜ் சிங்


சுரேஸ் ரெய்னா


# பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல ஆங்கிலக் கல்வி நிறுவனத்துக்கு பின்வரும் பதவிக்கு தகுதியானவர் தேவை.

**English Lecturer - Full Time**

Age : Below 50

Salary : 20,000/= upwards according to the qualifications and experience.

தகுதியானவர்கள் நேரில் சமுகமளிக்கவும் அல்லது தொடர்புகளுக்கு:

**British College of Higher Studies,**

No.15 2/1, Sirambiyady Lane

(Off Stanley Road), Jaffna.

(சி/12725) (10)

Tel:

021-222 4550 / 0777 222 422 / 0777 585 913


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.